திரு. ச. அருணாசலம்

வெளியீடு

சைவ மகாசபை

காரைநகர்

ஓம்

# சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச. அருணாசலம் அவர்கள்

எழுதியவர் :

திரு. சி. கணபதிப்பிள்ளை ஐயர் அவர்கள்

(அல்வாய் வாசர்—வல்வைச் சிவகுரு வித்தியர்சாலையின் முன்னாள் தலைமையாசிரியர்.)

காரைநகர்ச் சைவமகாசபை வெளியீடு

சைவமகாசபைப் பிரசுரம்

முதற் பதிப்பு

விரோதகிருது (1971-9-29) விஜயதசமி

கிடைக்குமிடம் :

அ. சிவபாதம்
தங்கோடை
காரை நகர்.

அச்சுப்பதிவு :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

"காரைநகரமே! உனக்கு ஒரு குறையும் இல்லையே! நீ நல்ல செல்வப் பிரபு. உனது கருத்தென்ன?" என்று திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத் தமிழ்ப் பேராசான் பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளையவர்கள் சில ஆண்டுகளுக்கு முன், காரைநகர் இந்துக் கல்லூரி வெளியீடாகிய 'சயம்பு'வில் எழுதியிருந்தார்கள். இது எழுதி 25 யாண்டுவரையாகலாம். விடை வந்தபாடில்லை. இதனை மனதிற் கொண்டு இந்நூல் வெளியாக்கப்பட்டுளது.

1920 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் திரு. அருணாசலம் அவர்கள் மறைந்தார்கள். 50 யாண்டுகள் ஒடி மறைந்தன. கிறிஸ்தவம் வளர்ந்த காலம். சைவம் நீறுபூத்த நெருப்புப்போல் மறைந்திருந்த காலம். சென்ற நூற்றாண்டைக் குறிப்பிடுகிறேம். அதாவது 19 ஆம் நூற்றாண்டு. அக்காலம் ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமான் தோன்றினார்கள். கிறிஸ்தவ வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தினார்கள். திரு. அருணாசலம் அவர்கள் சைவத்தை மூடியிருந்த சாம்பலை அகற்றிவிட்டார்கள். இச்செயலைச் சைவ உலகம் அறியவில்லை. திரு. இராசரத்தினமவர்கள் சைவ ஒளியை விளங்கச் செய்தார்கள்.

19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுக் கால யாழ்ப்பாணச் சைவ உலகில் இம்மூவரும் குறிப்பிடற்பாலர். நாவலர் பிரான் மறைந்து 90 யாண்டுகள் கடந்து நினைவு கூர்ந்தார்கள். 1968 ல் சென்னை மாநகரில் நடந்த 2 வது உலகத் தமிழ் மகாநாடு நாவலர் நினைவுக்கு ஏதுவாயது. அவ்வாறு திரு. அருணாசலமவர்களை நினைவு கூரச் சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை

ஆயினும், அவர்கள் மாணவர் சிலர் அவர்கள் வரலாறேனும் வெளிவரலை விரும்பினுர்கள். அதற்கமைவாக அவர்கள் மாணவர் — அவர்மாட்டுப் பேரபிமான

முடையவர் — அல்வாய் வாசர் — வல்வைச் சிவகுரு வித்தியாசாலை முன்னாட்டலைமையாசிரியர் — சைவாசார சீலர் — சிவபூசா துரந்தரர் — தமிழ்ப் பேரறிஞர் — தற்போது கெருடாவிற் பதியில் வாழ்பவராகிய திரு. சி. கணபதிப்பிள்ளையவர்கள் எழுதியுதவியுள்ளார்கள்; யாழ்ப்பாணச் சைவாசிரியருலகிற்காக அவர்க்கு நன்றி கூறும் கடப்பாடுடையோம்.

தொடக்கத்தில் பண்டிதமணி கூறியதாகச் சொல்லி யிருப்பது உண்மைதான். காரைநகர் செல்வப் பிரபு தான். அதனை யாம் மறுக்கத் தயாராயில்லை. இயற்கையாய் உள்ள செல்வமல்ல. செயற்கையாய்ப் பெறப் பட்ட செல்வம்.

"மனத்துக்கண் மாசிலனாதல் அறம்" என்கிறார் வள்ளுவர். மாசிலா மனமுடைய அறவோர் முன்னாள் வாழ்ந்தனர். இப்போதும் வாழ்வு நடாத்துகின்றனர். அத்தகையோர் முயற்சியால் ஆனது இச் சைவ மகா சபை. இச் சபை சார்பாய் இவ்வரலாறு வெளியிடத் தீர்மானமாயது.

இந்நூல் வெளியிடப் பணஉதவி செய்த பெரியார் களுக்கு நன்றி கூறும் கடப்பாடு பெரிதும் உடையோம். கூடிய கெதியில் அழகுற அச்சிட்டு உதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தார்க்கும் நன்றி உரியது.

வரலாற்றில் புதிய கருத்துக்கள் இருந்து அறியத் தரின் அதனை அன்புடன் ஏற்று மறுபிரசுரம் வெளியாகச் சந்தர்ப்பம் ஏறபட்டால் வெளிவரச் செய்தல் கூடும்.

இந்நூல் வெளியாகத் தோன்றாத் துணையாயிருந்து வழிகாட்டிய திண்ணபுரச் சுந்தரேஸ்வரப்பெருமானை 'மன மொழி மெய்' களால் வழுத்துகிறோம். சுபம்.

சைவமகாசபை
காரைநகர்
22-9-71.

பரிபாலன மன்றத்தார்.

# முன்னுரை

அடியேன் அல்வாய்ச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கற்று 8 ஆம் வகுப்பிற் சித்தியடைந்தேன். அப்போது பரீட்சிக்க வந்த வித்தியாதரிசி பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்கள் பரீட்சை முடிந்தபின், என்னுடன் மாணவர்களுள் என்னைத் தனிமையாக அழைத்துக் கோப்பாயில் ஐக்கிய போதனு பாடசாலையொன்று தொடங்கப் போகின்றது. நீர் அதிற் சென்று கற்றல் நல்லதென்று கூறிச் சென்ருர்கள்.

நானும் இன்னுஞ் சிலரும் அப்பாடசாலையை ஸ்தாபித்த புலவர் திரு. க. சின்னத்தம்பி உபாத்தியாயர் அவர்களிடம் சாயங்கால வேளைகளில் புராணங்களும் பஞ்சலக்கணங்களும் படித்து வந்தோம்.

வகுப்பு முடிந்தபின் ஆசிரிய மாணவனுய் அமர்ந்திருந்தேன். இது 1918 ஆம் ஆண்டு ஆனி மாதமாகும். அன்றைய தினம் ஒரு திருவுருவம் மெதுவாக நடைபோட்டு அசைந்து ஆடி ஓர் அழகிய பரமாஸ் வேட்டியுடனும் ஆறணியன் சால்வையுடனும் பாடசாலைக்கு எழுந்தருளியது. அஃது என் வித்தியா குருவிடம் உரையாடி, அதன் பின்னர் என்னிடம் வந்தது. நான் எழுந்து செய்ய வேண்டிய மரியாதையைச் செய்தேன்.

என் வரலாறுகளை அவர் விசாரித்தார்கள். கோப்பாயில் ஐக்கிய போதனு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் வந்து பயிலவேண்டுமென உறுதியுடன் கூறிஞர்கள். நான் அதற்கு ஓர் அட்டியுஞ் சொல்லாமல் என்னை ஆட்கொள்ள வந்த குருமூர்த்தமென எண்ணிக்கொண்டேன். பேசிய இன்சொற்கள் என் மனதைக் கொள்ளைகொண்டுவிட்டன. இன்ன நாளைக்கு வரவேண்டுமென்று உறுதிப்படுத்திச் சென்ருர்கள். நான் அந்நாளில் அங்கு சென்றேன். அன்றைய தினமே என்னையும் சகபாடிகள் ஒன்பதின்மரையும் கிறிஸ்தியன் சாதனு

பாடசாலைத் தலைமையாசிரியராயிருந்த திரு. ஞானரத்தினம் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவரிடம் நாங்கள் பதின்மரும் ஏனைக் கிறீஸ்தவ மாணவர்களும் கற்று வந்தோம். ஆவணி மாதப் பரீட்சையில் எங்கள் பதின்மரில் நானும் பிறிதொருவரும் சித்தியடைந்தோம்.

இவ்வாறு கற்றுக்கொண்டு வருங்காலத்தில் உடலை விட்டு நீங்காத நிழல்போல என்னைவிட்டு நீங்காத தந்தையுள்ளம் என்மீது கொண்டார்கள். விடுதலை காலங்களில் தன் ஜனன கிராமமாகிய காரைதீவுக்கு என்னைக் கூட்டிச் செல்லுவார்கள். அங்குள்ள வியாவிற் பாடசாலையிற் படிப்பிக்க வைப்பார்கள். பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயர் வீட்டில் உணவும் உறைவிடமும் ஒழுங்கு செய்வார்கள். என்னுடன் கலந்துரையாடுவார்கள். நீ பயிற்றப்பட்ட ஆசிரியப் பத்திரத்துடன் திருப்திப்படுதல்கூடாது. இப்படிப்பு முடிந்தவுடன் இந்தியா சென்று சைவப் போதகராய்ப் பயிற்சி பெற்று வர வேண்டுமென்று சொல்லுவார்கள். திரு. பசுபதிப்பிள்ளை சைவ விடுதியைப் பொறுப்பேற்கு முன் என்னிடம் ஒப்படைப்பார்கள். அவ்வாறே தம் அருமைத் திருக்குமாரர் மூவரையும் விடுதியிற் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்தார்கள்.

1919 ஆம் ஆண்டு மார்கழிமாத விடுமுறையில் என்னைத் தன்னூருக்கு அழைத்துச் சென்றார்கள். நான் தை மாதம் போதனா பாடசாலைக்கு வரவேண்டியிருந்தது. இதுவரையில் நான் சொல்லிவந்த, என் சொல்லுக் கடங்காத அந்தப் பெரியாராகிய திரு. அருணாசல உபாத்தியாயரவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தனர்.

நான் அவர்களில்லத்திற் சென்று அவர் நோய்வாய்ப் பட்டிருப்பதைக் கண்டு துன்பமடைந்த நிலையிலிருந்தேன். அதைக் கண்ட பெரியார் எனக்கு ஆறுதல் கூறி, நான் சுகமடைந்தவுடன் வருவேன், நீ துன்பமடையாது பாடசாலைக்குச் செல், என்று உத்தரவு தந்தார்கள். நான்

பாடசாலை வந்த சிலநாட்களில் நோயுற்று எனது கிராமத்திற்குச் சென்றுவிட்டேன். 1920 ஆம் ஆண்டு தை மாதம் நான் நோயுடன் போராடிக்கொண்டிருக்கும் நாளில் என்னை ஆட்கொண்ட பெரியார் மறைந்துவிட்டாரென்று கேள்வியுற்றேன். ஆற்ருெணுத் துன்பமடைந்தேன். அப்பெரியார் தன்னுடைய குலப் பிறப்பையும் தான் கல்வி கற்ற வகைகளையும் தன் ஆஸ்திகள் செலவழித்த வகைகளையுஞ் சொல்வார்கள். அவையேயன்றி அவர்களுடைய இரு புத்திரர்களும் அவரின் அருமைப் பேரனூர் சிவானந்தரத்தினமும் அப்பெரியாருடன் ஊசாடிய சில பெரியார்களும் சொல்லிய குறிப்புகளையுங் கொண்டு இவ்வளவு காலமும் அவமே போக்கிய அடியேனுகிய நான் இப்பெரியார் அவர்களின் சரிதையை எழுதினேன். இதில் யான் உள்ளதை உள்ளவாறு எழுதினேனன்றி மிகையாய் எழுதவில்லையென நம்புகிறேன்.

"குற்றங் களைந்து குணமறிந்து கொளல்
கற்றறிந்த மாந்தர் கடன்" — வள்ளுவர்.

ஆசிரியர்.

உ
சிவமயம்

தம்பி அ. சிவபாதத்துக்கு;

நீ இந்த மீ 10 உ எழுதிய கடிதம் பெற்றேன். நான் மிகவும் அசௌக்கியமாயிருக்கிறேன். ஒன்றும் எழுதிக்கொள்ள முடியாது. ஆயினும், ஒன்று சொல்லுகிறேன். உன்னுடைய தகப்பன் எனக்கு நல்ல நண்பன். யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆசிரிய கலாசாலைக்கு முதற்காரணம் ச. அருணாசலமே. பரோபகாரிகளென்று யாழ்ப்பாணத்திற் பிறந்தவருள் இரண்டாவதாக நான் மதித்திருப்பது இவரையே. மூன்றுவதாகச் சொல்வதற்கு ஒருவருமிலர். ஆசிரிய கலாசாலைக்காகத் தங்காலத்தையும் பொருள்களையும், செலவு செய்து இவர் செய்த முயற்சிகள் மிகப் பல. அப்படிப்பட்ட ஒருவருடைய சரித்திரம் எழுதப்படுதல் நல்லது.

இங்ஙனம்,

நல்லூர் — த. கைலாசபிள்ளை.

தாது ஸ்ரீ வைகாசி மீ கூ உ;
19-5-36.

# அணிந்துரை

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

## யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்கள்

### நாவலர்

### அருணாசலம் இராசரத்தினம்

### சரித்திரநாயகர் :

இச் சரித்திர நாயகராகிய ஸ்ரீமான் அருணாசலம் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சிந்தனைகளுக்கும் இந்த நூற்றாண்டின் சைவ எழுச்சிக்கும் இடையிலமைந்ததொரு சேதுபந்தனம் ஆவர்கள். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மகோந்நத யுத்தவீறு இச் சேதுபந்தனத்தின் வழிவந்ததேயாம்.

### நாவலரும் வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையும் :

நாவலருக்கும் வட்டுக்கோட்டைக் கல்லூரிக்கும் ஒரே வயசு. நாவலர் இரண்டொரு மாசத்தால் மூத்தவர். கல்லூரி, தொடக்கத்தில் சர்வ சாத்திரசாலையாயிருந்தது. சம்ஸ்கிருதத்தை முதன்முதல் ஆரம்பஞ் செய்து வைத்தது வட்டுக்கோட்டைக் கல்லூரியேயாம். அங்கே சம்ஸ்கிருதத்தில் தேர்ச்சியுற்ற சுன்னாகத்து நாகநாத பண்டிதரே, சம்ஸ்கிருதத்தில் மகா மேதையாய் விளங்கிய சிவசங்கர பண்டிதரை அதில் வழிப்படுத்தியவர்.

பாதிரிமார், படித்தவர்கள் கிறிஸ்தவராய்த்தானே யிருக்கமுடியும் என்று நம்பினார்கள். காப்பிலிகளைப் பார்த்த கண்களாலேயே எவர்களையும் அவர்கள் பார்த்தார்கள். அதனாலேதான் வட்டுக்கோட்டைக் கல்லூரியை ஒரு சர்வகலாசாலை என்று சொல்லத் தக்க வகையில் நடத்தினார்கள். வடக்கே எந்தச் சர்வகலாசாலையும் தொடங்கமுன் தொடங்கியது வட்டுக்கோட்டைக் கலைத்தாபனம்.

கலைக்கடல்கள் அலைமோதிக் கொண்டெழுந்தன. இனி யாழ்ப்பாணத்தில் சைவத்துக்கிடமில்லையென்ற எண்ணம் எழுந்தது. ஆனால், எதிர்பாராத முறையில் மத்திய கல்லூரியிலிருந்து ஒரு மேகம் எழுந்து கலைக் கடல்களை ஆசமனஞ் செய்து ஏப்பம் இட்டது. அந்த மேகமே ஆறுமுகநாவலர்.

## மும்மணிகள் :

வட்டுக்கோட்டை ஈன்ற மும்மணிகள் கறல், ஹின்ஸ்பரி, பெரிய நெவின்ஸ் என்பவர்கள். அவர்கள் நாவலரின் திருநோக்கால் முறையே வீசகணித மேதை விசுவநாதபிள்ளை, தமிழ்தந்த தாமோதரம்பிள்ளை, நியாய இலக்கணஞ்செய்த வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளையாயினர். சிதம்பரப் பிள்ளை தமது வயிற்றைத் தொட்டுக்காட்டித் தாம் படிப்பிக்கும் மத பாடத்தைக் கைக்கொள்ளவேண்டா மென்று தம்மிடம் படிக்கும் மாணவருக்குச் சொன்னவர். அவருக்கு நாவலரைக் காணாதநாள் வீணாள்.

எத்தனையோ பெருங்குடும்பத்தைச் சேர்ந்த நிபுணர்கள் பெயரளவில் கிறிஸ்தவராயிருந்து தமிழ்த் தொண்டாற்றினார்கள்.

## ஏமாற்ற விளைவு :

இதனைக் கண்ட பாதிரிமார்கள் பெரிதும் ஏமாற்ற மடைந்து, படிப்புக்கும் கிறிஸ்தமதம் பரவுதலுக்கும் வெகு

தூரம் என்பதை உணர்ந்து, வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையைச் சாதாரணக் கல்லூரியாக்கிக் கொண்டு, கிராமப் பள்ளிகளில் கவனமெடுப்பாராயினர்கள்.

## கிராமக் குழந்தைகள் நிலை:

குழந்தைகள் தம் மத உண்மைகளை அறியாமலிருக்கச் செய்வதே பாதிரிமாரின் முதற்படி வேலை. தம்மத உண்மைகளை அறியாதவர்கள் எந்தப் பக்கத்துக்கும் வளைவார்கள். அவர்களின் சந்ததி வயிற்றுச் சோற்றின் வழிச்செல்லும். இந்த அடிப்படையில் பாடத்திட்டத்தைப் பாதிரிமார்கள் ஆக்கிக் கொண்டார்கள். ஒரு பிள்ளையின் தந்தை கோயில்தோறும் புராண படனஞ் செய்பவராயிருப்பார். தம் பிள்ளைகளின் அறிவு பாதிரி பள்ளிகளில் நாடோறும் குடிபோய்க்கொண்டிருப்பதை அவர் அறியமாட்டார். தம் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி கிடைக்கிறதென்பது அவர் நம்பிக்கை. தாம் இறுத்த வரியை உதவி நன்கொடையாகப் பெற்றுக் கொண்டு தம் பிள்ளைகளின் அறிவைச் சூனியஞ் செய்யும் அதி சூக்கும சூழ்ச்சியை யாரும் அறிவதில்லை. குரு, விரும்பியவர்களுக்குத் தீக்ஷை செய்வார்; தக்ஷிணை பெற்றுக்கொள்வார். குருவின் பிள்ளைகளின் அறிவே சூனியமாவதைக் குரு அறிவதில்லை.

## நான் நல்ல உதாரணம்:

பாதிரிமார் கிராமப் பள்ளிகள் மூலம் செய்த புண்ணிய கைங்கர்யங்களுக்கு உதாரணந்தேடி வெகுதூரம் போகவேண்டியதில்லை. என்னையே எடுத்துக்கொள்ளலாம். எனக்குப் பத்தொன்பதாம் வயசு தொடங்கி விட்டது. வண்ணார்பண்ணைக்கு நாடகம் ஒன்று பார்க்கச் சென்ற எனக்கு, நாவலர் பாடசாலையை ஒருவர் காட்டினார். நான் 'நாவலர் இருக்கிறாரா?' என்று அவரைக் கேட்டுவிட்டேன். அதுவரை நாவலர் எழுதிய எந்தப் புஸ்தகத்தைப் பற்றியும் நான் அறிந்ததில்லை. இதற்கெல்லாம் காரணம் என்னை?

என் தகைமை எப்படிப் பட்டது? உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் நாவலரிடம் படித்தவர்கள். சிதம்பரம் நாவலர் பாடசாலையில் நீண்டகாலம் தலைமையாசிரியராயிருந்தவர். அவர் எங்கள் நெருங்கிய உறவினர். அவர் வீடு எப்பொழுதும் கல்விக்கழக மாயே இருக்கும். அயல்வீடு எங்கள் வீடு. பதினொ ராம் வயசு தொடக்கம் ஒரு வருடகாலம் உரையாசி ரியர் வீட்டிலேயே வசித்திருக்கிறேன். அங்கே அடிக் கடி கல்விமான்கள் வருவார்கள். மகாலிங்கசிவம் இனிக்க இனிக்கக் கதை சொல்லுவார். அக்கதைகளைக் கேட்டிருக்கிறேன். இடையிடையே உரையாசிரியர் சிதம்பரத்திலிருந்து வருவதுண்டு. பெருங் கூட்டங் கூடும். கேளுங்கள், நைமிசாரணிய வாசிகளே! என்ற முறையில் கதை நடக்கும். நானும் என் தந்தையா ரும் பங்குபற்றுவோம். என் தந்தையார் புராணக் கதைகள், பாரத, ராமாயணக் கதைகள் தெரிந்தவர். பொழுதுபோக்குக்குச் சொல்லிக்கொண்டிருப்பவர்.

தென்மராட்சியில் வித்துவசிரோமணி பொன்னம் பலபிள்ளையின் மாணவர்கள் மூவர் பொன்னம்பலங்கள் இருந்தவர்கள். அவர்களின் திண்ணைப்பள்ளிக்குப் பல வருட காலம் புத்தகம் சுமந்து அலைந்திருக்கிறேன். மூவருள் ஒருவர், இலங்கை மான்மியம், இராமநாத மான்மியம், அருணாசல மான்மியம் பாடியவர்; வெகு நல்லவர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை யைப்பற்றி அவர் கதை சொல்லும்பொழுது வாயூறும். இவருடன் எனக்கு மூன்று வருடகாலம் கழிந்தது. இத்தகைய தகைமைப்பாடுகள் இருந்தும் நாவலர் இருக்கிறாரா என்று 19-ஆம் வயசில் வினவியிருக்கிறேன்.

நான் நாவலரை வினவிய அதே ஆண்டில், சில மாசங்களின்பின், நாவலர் பாடசாலையில் ஒரு நேர் முகப்பரீக்ஷை நடந்தது. வளர்ந்தோர் பலர் வந்திருந் தார்கள். நானும் போய்ச் சேர்ந்தேன். என்முறை வந்

தது. சுன்னுகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சில கேள்விகள் கேட்டார்கள். சிறிதும் அஞ்சாமற் பதில் சொன்னேன். 'கிறிஸ்த பள்ளியிற் படித்ததோ?' என்று கேட்டுவிட்டுப் பெருமூச்சுவிட்டார்கள் புலவர் அவர்கள். எனது அறிவு குடிபோனதன் மூல காரணத்தை நான் வாய்திறந்த அக்கணமே புலவர் அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். என்னை அங்குக்கொண்டுவந்து நிறுத்தியவர் என் அருமந்த அன்பர், அண்மையில் மறைந்த திரு. வே. நடராஜா அவர்கள். உரையாசிரியரின் கநிஷ்ட புத்திரர் அவர். அவருக்கு என்னிலை குறித்து முகம் வியர்த்தது.

பத்து வயசுவரை அமெரிக்க மிஷன் பாடசாலையில் கிறிஸ்த பாலபாடங்களும், ஞானப்பால், வேதவினுவிடை, மார்க்கு எழுதின சுவிசேஷம் என்ற கிறிஸ்த சமய புத்தகங்களும் படித்தனுல் என் அறிவுக்கு வந்த நோயை, மூன்று பொன்னம்பல உபாத்தியாயர்களோ மறறெவர்களோ அறியவில்லை. புலவர் அவர்கள் ஒரு நிமிஷத்திற் கண்டுகொண்டார்கள். என்னிலையிலிருந்து சாதாரண கிராமப் பிள்ளைகளின் நிலையை ஊகிக்கலாம்.

* * *

நாவலர் கருத்துக்கள் சில :

> "ஒரு சமயத்தாருடைய பொருளைக் கொண்டு அவர் மனசிலே மெய்யெனப் பதிந்த சமயத்துக்குத் தீங்கு விளைப்பதும், பொய்யெனப் பதிந்த சமயத்தை அவரைக்கொண்டு அவர் மனசுக்கு விரோதமாகவும் வலாற்காரமாகவுந் தழுவுவிப்பதும் அநீதி அநீதி!"

> "பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத்தியாயர்கள் தமிழை நன்ருகக் கற்றுக் கொண்டவர்களல்லர்; அவர்களிற் பெரும்பான்மை

யோர் சம்பளநிமித்தம் கிறிஸ்து சமயத்திற் புகுந்தவர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாயருத்தியோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலானவை சுத்தத் தமிழ்நடையின்றி இலக்கணப் பிழைகளினுல் நிறைந்தவைகளும் சைவ தூஷணங்களினுற் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்தினும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகின்ருர்கள். அவர்கள் பேசுந் தமிழோ அந்நியபாஷைநடையோடு கலந்த அசுத்தத் தமிழ்.''

''உங்கள் கைப்பொருளையே இறுத்து உங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி அழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்களைப் படிக்கவுஞ் சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையும் இழக்கவும் பண்ணுகின்றீர்கள்.''

''உங்கள் சமயத்தைப் பாதிரிமார் கண்டிக்கும் பொழுது அவர்களை எதிர்த்து அவர்கள் சமயத்தைக் கண்டித்து உங்கள் சமயத்தை நிறுத்தத் தொடங்குகின்ருர்களா? உங்கள் குருமார்களுள் யாரொருவரேனும் எப்பொழுதாயினும் உங்களுள் யாரொருவரையேனும் பார்த்து ''நீ கொலை செய்யாதே; களவெடாதே; மதுபானம் பண்ணுதே; மாமிசம் புசியாதே; பொய் பேசாதே; வியபிசாரஞ் செய்யாதே; சூதாடாதே'' என்று வாய் திறந்ததுண்டா?''

''பரீட்சை சிறிதும் வேண்டாத உத்தியோகமாவது, உலகமுழுதாளும் அரசரும் பெருத வந்தனுதிகளைப் பெறும் மிக மேன்மைபெற்ற உத்தியோகமாகிய சைவசமய குருவுத்தியோகம் ஒன்றேயாய் முடிந்ததே! இஃது என்னையென்னை! கொடுமை கொடுமை!''

"உங்கள் குருமாருள்ளே கல்வியும் நல்லொழுக்கமும் உடையவர் சிலர் உளரேயாயினும், அவர்கள் தங்கள் கடமையை உங்களுக்கு எவ்வளவேனுஞ் செய்யக் காணோமே"

"கல்வியறிவொழுக்கங்களினுற் சிறப்புற்ற மேலோர்களையே உங்களுக்குக் குருமாராக ஏற்படுத்திக் கொள்ளுங்கள்."

"ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களிலேயே அனுப்பி லௌகிக நூல்களையும், நீதி நூல்களையுஞ் சைவசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதாரணக் கல்வி விசாரணைத் தலைமைத்துரைக்கு விண்ணப்பமெழுதிக் கவர்ண்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று, லௌகிக நூற்கல்வியை விருத்தி செய்யுங்கள். அதற்குப் பாதிரிமார்கள் இடையூறு செய்யின், நீங்களெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். அதற்குக் கொழும்புக் கவர்ண்மெண்டார் பராமுகர்களாயிருப்பின், இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். இந்தியாவையாளும் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாரே இலங்கையையும் ஆளுகின்றனர். இந்தியாவிற் குடிகளனுப்பும் விண்ணப்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு நன்மை செய்யுங் கவர்ண்மெண்டார், இலங்கையிற் குடிகள் விண்ணப்பம் அனுப்பினுல், அதைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மை செய்யாது விடுவார்களா? குற்றம் உங்களிடத்ததேயன்றிக் கவர்ண்மெண்டாரிடத்ததன்று."

இவை யாழ்ப்பாணத்துச் சமயநிலையிலிருந்து துளித்த வெம்மைத் துளிகள் சில. நமது சமயநிலை பற்றி நாவலருக்கெழுந்த இருதயக் கொதிப்பே 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற புத்தகம்.

* * *

## நாவலர் திட்டம்:

கொலைகளிற் பொல்லாத கொலை அறிவுக் கொலை: அதுவும், பிஞ்சுகளான குழந்தைகளின் அறிவு முளையை நசுக்குவது அதிபாதகங்களுள் வைத்து அதிபாதகமாம். இந்த அதர்மச் செயலை முழுத்த மூடநம்பிக்கையினுற் செய்து வருவாராயினுர்கள் பாதிரிமார்கள். இந்த அநீதிச் செயலை, ஓர் ஆறுமுகநாவலருக்கு உணர்த்தியருளினுர் கடவுள்; பதினுன்கு வருடம் கிறிஸ்த சூழலில் இருக்கச் செய்தே உணர்த்தியருளினுர்.

நாவலருக்குப் படிக்கும்போதே கண்ணீர் பெருக் கெடுத்தது. இருதயம் எத்தனையோ திட்டங்களைக் கற் பனை செய்தது. முக்கியமானதொரு திட்டம் வளர்ந்த பின் எழுத்திலும் வந்தது. அது ஐந்தாண்டுத் திட்டம்.

## ஐந்தாண்டுத் திட்டம்:

ஆரோக்கியம், ஒழுக்கம், விவேகம் முதலியன அமைந்த பிள்ளைகளைப் பரீக்ஷை மூலம் தெரிந்தெடுத்து, ஐந்தாண்டு காலம் ஊண், உடை யாவும் வழங்கிக் கற் பவை கற்பித்து, ஆண்டுதோறும் இருபதின்மரை வெளிப் படுத்துவதே அத்திட்டம். வெளியேறும் இருபதின்மரில் ஒரு பகுதியினர் கற்று வல்ல உபாத்தியாயர்களாயிருப் பர், மற்றொரு பகுதியினர் சைவ போதகராயிருப்பர். ஊர்தோறும் தோன்றும் சைவப்பள்ளிக்கு உபாத்தியா யர்கள் அனுப்பப்படுவார்கள். போதகர்கள் கோயில் களின் சார்பில்போதனை செய்துகொண்டிருப்பர்கள்.

## நாவலர் உழைப்பு:

குறித்த ஐந்தாண்டுத் திட்டம் பயன்படுதற்கு 23 வயசு தொடக்கம் நாவலர்பெருமான் உழைத்த உழைப்பே நாவலர் சரித்திரம்.

பச்சைக் குழந்தைகள் தொடக்கம் மகாபண்டிதர் பரியந்தமானவர்கள் தமிழையும் அதன் உயிர்ப்பாகிய சமயத்தையும் படிக்கிரமத்தில் விருத்தி செய்தற்கும் லௌகிக விருத்தியிற் செல்பவர்கள் ஓய்வு நேரங்களில் தம் அறிவைப் பேணுதற்கும் ஏற்ற வகையில் நூலுரைகள் செய்தும் அச்சிட்டும் நாவலர் உழைத்த உழைப்புக்கு எல்லையும் உண்டா?

* * *

## கற்றுவல்ல உபாத்தியாயர்:

நாவலர் திட்டத்தில் சைவ போதகர்களை உற்பத்தி செய்யுந் திட்டத்துக்குப் பாதிரிமார் அஞ்சவில்லை. சாத்திர அறிவில்லாத கோயிலதிகாரிகள் குருமார் திருவிழா ரசிகர்கள் என்றிவர்கள் நாவலர் வழியில் நில்லார்கள் என்பதைப் பாதிரிமார்கள் நன்கு அறிவார்கள். அவர்கள் அஞ்சியதெல்லாம் கற்றுவல்ல உபாத்தியாயர்களை உற்பத்தி செய்யுந் திட்டத்துக்கேயாம். ஐந்தாண்டுத் திட்டம் முழு உருவங் கொள்ளுதற்கு முன்னமே நாவலரின் சூழல் கற்றுவல்ல உபாத்தியாயர்கள் மயமாய்விட்டது.

வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளைக்கு விலையென்ன! அவர் நிற்குமிடம் நடக்குமிடமெல்லாம் கற்றுவல்லார் மயமாய் விளங்கின. காசி வாசி செந்திநாதையர், இணுவில் நடராசையர் முதலியோர் சித்தாந்த சரபங்கள். இவர்களெல்லாம் நாவலரின் மாணவராயின் கற்றுவல்ல உபாத்தியாயர்களுக்குப் பஞ்சம் ஏது? ஊர்தோறும் சைவப் பள்ளிகள் முளைகொள்ளும் வாய்ப்பு உண்டானது. இந்த நிலையில் நாவலருக்கு அழைப்பு வந்துவிட்டது. பாதிரிமார் நாவலர் மறைந்ததும் மற்றொரு சூழ்ச்சி செய்தார்கள்.

*

### பயிற்சி ஆசிரியர் :

நாவலர், உபாத்தியாயர்களுக்குக் கொடுத்த 'கற்று வல்ல' என்ற அடையை எடுத்துவிட்டு, அந்த இடத்துக்குப் 'பயிற்றப்பட்ட தராதர பத்திரமுள்ள' என்ற அடையைச் சேர்க்கத்தக்க வகையில், பாதிரிமார் அரசியலதிகாரத்துடன் பாடத் திட்டத்தை அமைத்தார்கள். தராதர பத்திர ஆசிரியர்களை அச்சுப் போட்டு வெளிப்படுத்தும் பொறுப்பும் பாதிரிமார் கையிலானது.

### நாவலர் வித்தியாசாலையிற் கிறிஸ்துமத ஆசிரியர் :

நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கே மதமாற்றம் பெற்ற பயிற்றப்பட்ட ஒருவரே தலைமையாசிரியராகும் நிலை நேர்ந்தது. மறுத்தால் உதவி நன்கொடை பெறமுடியாது. கற்றுவல்ல உபாத்தியாயர்களெல்லாம் விலையற்ற 'அன்சேட்டிவிக்கூற்' மாக்களாயினர். பெரும்பாலார் வேறுவேறு தொழில்களில் ஈடுபட்டார்கள். ஆங்காங்குத் தோன்றிய சைவ பாடசாலைகள் பாதிரிமார்களிடமே ஒப்பிக்கப்பட்டன. பழையபடி வேதாளம் முருக்க மரத்தில் ஏறியது. கிராமந்தோறும் கிறித்த பள்ளிகளிற் படிக்கும் பிள்ளைக்கும் நாவலருக்கும் என்ன சம்பந்தம்! நாவலர் எழுதிய புத்தகங்களை அவர்களறிவதெப்படி? 19 வயசில் நாவலரை நான் விசாரித்ததிற் புதுமையேயில்லை. இந்நிலையை நாவலரின் ஆத்மா சகிக்குமா?

### காவிய பாடசாலை :

நாவலர் வழிவந்தோருக்கோ அவர் தருமத்தைப் பரிபாலிப்போருக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. நாவலர் ஈட்டி வைத்த பொருள் கொண்டும் புத்தக வருமானங்கள் கொண்டும் காவிய பாடசாலை நடத்தினர்கள். அதன் மூலம் தமிழையும் சைவத்தையும் வளர்க்க முயன்றுர்கள்; வயிற்றுக்கு வழி செய்யாத

படிப்பை யார் படிப்பார்கள்? எப்படியும் ஆங்கிலம் படிக்கும் மோகமே அதிகரித்துக்கொண்டிருந்தது.

## புதிய மனிதரின் போதனை :

நாவலர் வித்தியாசாலைக் காவிய பாடசாலை உலக்கை தேய்ந்து உளிப்பிடியாகிற நிலை எய்தியது. அவ்வாறாகிய காலந்தான் நான் போய்ச் சேர்ந்த காலம்; ஒடுக்க காலம். என்னுடன் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவராய் மெல்ல மெல்ல விலகிச் செல்லக் காவிய வகுப்பில் நான் ஒருவனேயாயினேன். நாவலர் மறைந்து நாற்பதாம் வருடம் ஆகின்றது. ஒரு நாள் நான் படித்துக் கொண்டிருக்கும்போது என் படிப்பை விசாரித்துக் கொண்டு என் முன்னிலையில் ஒல்லியான ஒரு நாட்டுப்புற மனிதர் தோன்றினார். அவரது உடை விசேட மதிப்புச் செய்தற்கு இடந்தரவில்லை. முகம் சிந்தனைகள் நிறைந்ததாய்ச் சிரித்தறியாததாயிருந்தது. நான் ஒன்றுஞ் சொல்லாமலே அந்த மனிதர் சொல்லத் தொடங்கி விட்டார். 'உன் படிப்புப் பயன்பட வேண்டுமென்றால், உபாத்தியாயர்ப் பத்திரம் வேண்டும் பிள்ளை. இப்பொழுதைய நிலைமைகளை உணர வேண்டும் பிள்ளை' என்று தொடங்கி ஒரு பிரசங்கமே செய்துவிட்டார் மனிதர். நான் சற்றும் அசையவில்லை. 'உனக்கொன்றும் விளங்கவில்லைப் பிள்ளை' என்று சொல்லிவிட்டு அந்த மனிதர் போய்விட்டார். அந்த மனிதர் யார்?

## அருணாசல உபாத்தியாயர் :

அவர் காரைதீவு அருணாசல உபாத்தியார் என்றும், அவர் சைவ உபாத்தியாயர்களை உண்டாக்குதற்குச் சைவப் பிள்ளைகளைத் தேடி அலைகிறவரென்றும் ஒருவர் சொன்னார். அவர் பெருந்தகைமைகளை யான் அப்பொழுது அறியவில்லை. என் படிப்பைக் குழப்பித் தம் வசப்படுத்த முயலுகிறார் என்று மாத்திரம் எண்ணினேன். அவரது மூளைக் கொதிப்பை உணருதற்கு அப்பொழுது நான் யார்?

## அருணாசல மகாத்மியம் :

மற்றொரு நாள் நாவலர் தமையனார் குமாரர் மனேஜர் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்களுடன் திரு. அருணாசல உபாத்தியாயர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். உபாத்தியாயர் போன பின்பு கனம் மனேஜர் அவர்களை, 'அவர் யார்' என்று கேட்டேன். அவரா? அவரை இன்னும் அறியாயா?' 'அவர்களுக்குப் பிறகு அருணாசலந்தான் இந்த நாட்டில் ஒரு மனிதர்' என்று, அருணாசலம் அவர்களின் சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாகச் சொன்னார்கள். அவர்களென்று மனேஜர் அவர்கள் சொல்லுவது நாவலர் அவர்களை.

நாவலரையன்றி மற்றெவரையும் மதித்துப் பேசியறியாத மனேஜர் அவர்கள், அருணாசலம் அவர்களைப் பற்றி, 'நாவலருக்குப் பின் ஒரேயொரு மனிதர்' என்று வருணித்ததைக் கேட்டுப் பிரமித்துப் போனேன். அருணாசலம் அவர்கள் கிறிஸ்த வலையில் அகப்படாது தப்பியதும், முப்பது வருடகாலம் சைவ உபாத்தியாயர்களை ஆக்கும் சைவாசிரிய கலாசாலையொன்றைத் தாபிக்க அலைந்த அலைவுகளும், நல்லூர் மணியடிக்கும் போது $4\frac{1}{2}$ மணிக்குத் தாம் தெருக் கதவைத் திறக்கும் போது அருணாசலம் அவர்களை நினைத்துக்கொண்டு திறப்பதும், பனிக்காலத்தில் காரைதீவிலிருந்து நடந்து வந்து, தம்மைச் சந்திக்கும்பொருட்டு, வாய்தலில் மொட்டாக்கிட்டுக் கொண்டு காத்திருப்பதும், கோப்பாய் ஐக்கிய போதனா ஆசிரிய கலாசாலை அருணாசலம் அவர்களின் பேருழைப்பே என்பதும் பிறவுமான சரித்திரங்களையெல்லாம் அவர்களிடம் அறிந்தேன்.

## என் ஒடுங்கிய அறிவு :

அருணாசலம் அவர்களின் முப்பது வருட முயற்சி, நாவலர் அவர்கள் முப்பது வருடத்துக்கு மேலே செய்து வைத்த முயற்சிகளின் ஒரு பகுதியை ஓரளவுக்குப் பயன்

செய்தற்குரியதென்றோ, சைவக் குழந்தைகள் கிறித்த பள்ளிகளில் அறிவு சூனியமாகச் சடப்படுத்தப்படுவதை அருணாசலம் அவர்களாற் சகிக்க முடியவில்லையென்றோ அப்பொழுது என்னால் அறியமுடியவில்லை. நான் எப்படி இளமையிற் சடப்படுத்தப்பட்டிருந்தேன் என்பதைக் கூட நான் நினைக்கவில்லை. எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டிருப்பதே என் வேலையாயிருந்தது. இரண்டாம் ஆள் பற்றிய சிந்தனை எனக்கு வரவில்லை; கடவுள் தரவில்லை.

## எனது நாணம்:

மனேஜர் அவர்கள் சொல்லும்போது, அருணாசலம் அவர்களை நான் தக்கவாறு மதிக்கவில்லையே என்ற நாணந்தான் என்பாற் குடியிருந்தது.

## அருணாசலம் அவர்களின் தபோபலம்:

1916 ஆம் ஆண்டு தொடக்கம் அருணாசல உபாத்தியாயரின் தவம் பயன்செய்யத் தொடங்கியது. சைவ உபாத்தியாயர்கள் உதயமானார்கள். அரைகுறை மத மாற்றக்காரர்களும் வெளிப்படைச் சைவர்களாய் அருணாசலம் அவர்களைத் தொடர்ந்தார்கள். சைவ உபாத்தியாயர்கள் கிடைப்பார்கள் என்ற எண்ணத்தால் ஆங்காங்குச் சைவப் பள்ளிகள் முளைகொள்ளத் தொடங்கின. பாதிரிமாருக்குப் புதியதொரு தலையிடி உண்டாயது.

## புதிய தலையிடி:

நாவலர் திட்டமிட்ட கற்றுவல்ல உபாத்தியாயர்களுக்கு, 'அன்சேட்டிவிக்கற்' வழங்கி, தராதர பத்திர உபாத்தியாயர்களுக்குத் தலைமைப் பதவி வழங்கிய பாதிரிமாருக்கு, அவர்கள் கண்ட வழியைத் திரு. அருணாசலம் அவர்கள் மேற்கொண்டதனால், புதிய தலையிடி தோன்றி ஆறுக்கவலை அளிப்பதாயிற்று;

## உபாத்தியாயர் மறைவு:

இந்நிலையில் அருணாசலம் அவர்களுக்கு அழைப்பு வந்துவிட்டது. வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்தது. 17-1.1920 இல் மகான் அருணாசலம் மறைந்தார்.

## மற்றொரு சூழ்ச்சி:

திரு. அருணாசலம் அவர்கள் மறைய, கேட்க ஆளில்லாத சமயத்தில் பாதிரிமார் மற்றொரு பாசுபதாஸ்திரத்தை எடுத்தார்கள். அது பாழ்செய்வதொரு கல்விச் சட்டம்.

"புதிய பள்ளி மற்றொரு பள்ளிக்கு அரைமைல் தூரத்துக்குள் தொடங்கக்கூடாது; அன்றிப் புதிய சராசரி அறுபது இருக்கவும் வேண்டும்" இதுதான் அந்தப் பாழ்செய்யுஞ் சட்டம். இந்தச் சட்டத்துக்கு வலி செய்தார்கள் பாதிரிமார்கள். முளைக்கத்தொடங்கிய சைவப் பள்ளிகள் அப்படியே ஸ்தம்பித்தன. முளைத்தவைகள் ஆற்றாமல் பாதிரிமாரிடம் ஒப்பிக்கப்பட்டன. ஐந்து வருடத்துக்குமேல் உதவி நன்கொடை பெறாமல் இழுபட்ட பள்ளிகள் பல. சைவ உபாத்தியாயர்கள் எத்தனை காலத்துக்கு ஒழுங்கான வேதனமின்றிப் படிப்பிக்கமுடியும். அவர்களும் பாதிரிமாரைச் சரணடைகிற நிலை நேர்ந்தது. இந்த நிலையைத் திரு. அருணாசலம் அவர்களின் ஆவி சகிக்குமா? அது கீழிறங்கிற்று. மற்றொரு மனிதர் உடலிற் பாய்ந்தது. அந்த மனிதர் யார்?

## அருணாசல உபாத்தியாயரின் வாரிசு:

திரு. அருணாசலம் வித்தியா பகுதியினரோடு தொடர்பு படுங் காலங்களில், தமிழை இங்கிலிசுப் படுத்தியும், இங்கிலிசைத் தமிழ்ப்படுத்தியும் உபகரிக்கும்

வழக்கமுடையவர் ஓரிளங்கனவான். அந்தக் கனவானே அந்த மனிதர். திரு. சு. இராசரத்தினமே அந்தக் கனவான் ஆன மனிதர் அவர் நல்ல அப்புக்காத்து. எவருக்கும் அஞ்சாத செல்லப்பிள்ளை. அவர் வைத்திருந்த பவுண்டன் பேனு மிகப் பெரியது; விலையுயர்ந்தது. அந்தப் பேனு திரு. அருணுசலம் அவர்களின் தூண்டுதலால், கல்விச்சட்ட இரகசியங்களிலும் சூழ்ச்சிகளிலும் அடிக்கடி தோய்ந்து முழுகித் திளைத்திருந்தது. எந்தச் சந்தர்ப்பத்தில் எது செய்ய வேண்டுமென்பதை அந்தப் பேனு நன்கு அறியும்.

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்:

திரு. அருணுசலத்தைத் தகனஞ் செய்த சுடுகாட்டக்கினி தணிய முன்னமே திரு. இராசரத்தினம் அவர்களின் இருதயத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் கருக்கொள்ளத் தொடங்கிவிட்டது.

## இராசரத்தினத்தின் கர்ச்சனை; 'எங்கும் சைவப் பள்ளி':

1924-இல் சட்டசபைப் பிரதிநிதியானுர் கௌரவ சு. இராசரத்தினம். அச்சபை ஏழு வருடம் நீடித்தது; தமிழர் ஆதிக்கம் அப்போது தலைதூக்கி நின்றது. சேர் பொன். இராமநாதன் துரை தனிச் செங்கோல் ஓச்சி அரசு வீற்றிருந்தார். கௌரவ இராசரத்தினத்தின் முதல் மூச்சில் பட்ச பாதமான கல்விச் சட்டங்கள் அத்தனையுந் தவிடுபொடியாயின. கிறிஸ்த பள்ளியின் முற்றத்திலும் சைவப் பள்ளி தோன்றலாம்; கிறிஸ்த பள்ளிப் பிள்ளைகள் அஃதாவது திருநீறணியும் பிள்ளைகள் புதுப்பள்ளியிற் குடிபுகுதல் செய்யலாம். ஆரம்பித்த நாள் தொடங்கி உதவி நன்கொடை கிடைக்கும். சைவ வித்தியாவிருத்திச் சங்கம் உதயமாயிற்று. எங்கும் சைவப் பள்ளிகள் தோன்றின. சைவப் பள்ளிகளாய்த் தோன்றிக் கிறிஸ்த பள்ளிகளாய் மாறியவை பழையபடி சைவப் பள்ளிகளாயின. மதம் மாறிய

ஆசிரியர்களும் பெருஞ் சைவபக்தர்களாயினர். திரு. அருணசலம் அவர்கள் தோற்றுவித்த ஐக்கிய போதன ஆசிரிய கலாசாலைப் பங்கு, அருணசலம் அவர்கள் மறையத் தானும் ஒடுங்கத் தொடங்கியது; ஐந்து பராயத்தில் ஒடுங்கியது. அரசாங்கம் அதனை எடுத்து நடத்திச் சைவ ஆசிரியர்களைப் பெரும்பாலும் பெருக்கிக் கொடுத்தது. எவ்வளவு பெருக்கியும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வேகத்துக்குச் சைவாசிரியர் தொகை போதாமலே இருந்தது.

## சைவாசிரிய கலாசாலை :

இந்தச் சந்தர்ப்பத்தில் இச் சரித்திர நாயகரின் கநிஷ்ட புதல்வரான சிவபாதம் அழுகின்ற முகத்தோடு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உயிர்நாடியான திரு. இராசரத்தினம் அவர்களுக்கு முறையீடு ஒன்று செய்தார், 'சிவபாதத்தை உயரம் போதாதென்று அரசாங்க ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்கு எடுக்கவில்லை.' இது தான் முறையீடு.

'அருணசலத்தின் மகனுக்குமா உயரம் வேண்டும்! இதோ நான் சைவாசிரிய கலாசாலை தொடங்குவேன். நீ வந்து படி' என்முர் இராசரத்தினம். இதனை அந்த இளைஞர் எப்படி நம்பமுடியும்! முப்பது வருஷத்துக்கு மேலே தன் தந்தையார் தவமிருந்து பெற்ற ஆசிரிய கலாசாலைக் குழந்தையும் ஐந்தாம் வயசிற் கண் மூடி விட்டது. இந்நிலையில், ஒரு சாதாரண பள்ளியும் அன்று, பெரியதொரு சைவாசிரிய கலாசாலையை இதோ தோற்றுவிப்பேன் என்முல் யார்தான் நம்புவார்? திரு. இராசரத்தினம் பரிகாசஞ் செய்கின்முர் என்று எண்ணிக்கொண்டு அந்த இளைஞர் போய்விட்டார். இளைஞர் போய் இரண்டு வாரமாவதற்கு முன், 'திருநெல்வேலியில் ஒரு வீட்டில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பமாகிறது; அதில் வந்து சேர்' என்றொரு கடிதம் அந்த இளைஞரை — மதிப்புக்குரிய அருணசல உபாத்தியாயரின் மகனைத் — தொடர்ந்தது.

மின்னல் வேகத்தில் திரு. அருணாசலம் அவர்களின் கனவுகளை முன் குறிப்பிட்ட பேனாமுனை செய்து முடித்தது.

## சைவ அநாதசாலை:

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மகோந்நத தாபனம் சைவ அநாதசாலை. அது திரு. இராசரத்தினம் அவர்களின் உயிர்ப்பு. எத்தனையோ ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் உத்தியோகத்தர்களையும் அநாதசாலை உருவாக்கியிருக்கிறது. அது திரு இராசரத்தினம் அவர்களின் ஞாபகமாய் இன்றும் நின்று நிலவுகின்றது.

## மூவர் பணிகள்:

நாவலர் இட்ட வித்தை முப்பது வருடத்துக்கு மேலே பாதுகாத்து, முளைவரச் செய்தார் மகான் அருணாசலம். முளையை வளர்த்து விளைவு செய்தார் கௌரவ சு. இராசரத்தினம்

## அருணாசல உதயம் கிடைக்குமா:

இன்றைய நிலை யாரும் அறிந்தது தமிழ், தமிழர், சைவம், சைவர், கோயில், குருக்கள், ஆசிரியர், மாணவர் என்றின்னோரன்ன வார்த்தைகள் யாவும் கருத்தற்ற எழுத்துக் கூட்டங்களாய்விட்டன.

பிரமுகர்கள் என்று வருபவர்கள் காட்டும் வழிகள், 'ஆற்றிற் கிடந்த முதலைகண்டஞ்சிப்போய், ஈற்றுக் கரடியை எதிர்ப்பட்ட' வழிகளாய்த் தோன்றுகின்றன.

பிறழ்வுகளின் மூலத்தைத் தொட்டுக்காட்டி வழி நடத்துதற்கு நமக்கு ஆளில்லை. ஓர் அருணாசலம் உதயஞ் செய்ய வேண்டுமானால், அதற்குத் தவம் வேண்டுமே! நம்மிடம் தவம் உண்டா!

'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.'

✽

# அணிந்துரை

காரைநகர் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் பிரபல கல்விமானுமாகிய

திரு. ஆ. தியாகராசா M. A., M. Lit. அவர்கள்

எழுதியது.

திரு. அருணாசல உபாத்தியாயரின் வரலாறாகிய இந்நூலைப் படித்துப் பார்த்தேன். அவரைப்பற்றிக் கேள்விப்பட்டுமிருக்கிறேன்.

யாழ்ப்பாண நாட்டைப் போர்த்துக்கேய — ஒல்லாந்த — ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்தோர் சுமார் 4 நூற்றாண்டாக ஆட்சி செய்துள்ளனர். வியாபார வளர்ச்சியும் — கிறீஸ்த சமய வளர்ச்சியுமே அவர்கள் குறிக்கோளாயிருந்தன.

அதனால் சைவசமயம் மறைவுறும் நிலையிலிருந்தது. அவ்வாறாகாமல் பாதுகாத்த பெருமை, ஸ்ரீலஸ்ரீ நாவலர் — திரு. அருணாசலம் — திரு. இராசரத்தினம் என்போர்க்கு உரியது என்பதைத் தயங்காது கூறுகிறேன். இரண்டாவதாய் அமைந்தவர் நம் கிராமத்தைச் சேர்ந்தவரெனும்போது என்னிதயம் களிபேருவகை கொள்கிறது.

என் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் செய்யவேண்டிய வேலையை அயற் கிராமத்தைச் சேர்ந்தவரும் திரு. அருணாசலமவர்களின் சிறப்பு மாணவருமாகிய திரு. சி. கணபதிப்பிள்ளையவர்கள் தம் தள்ளாத வயதிலும் ஞாபகத்தில் வைத்திருந்து எழுதி உதவியமை பாராட்டற்குரியது.

இந்நூலை வெளியிட்டமை காரணமாய் காரைநகர்ச் சைவ மகாசபை பெரியதோர் பணியை மேற்கொண்டமை போற்றத்தக்கது.

இந்நூலைப் படிப்போர் திரு. அருணாசலமவர்களின் தொண்டு மனப்பான்மையை மனத்திருத்தித் தாமுமவ் வாறுக முயற்சிப்பாராயின், அதுவே நூலாக்கத்தின் பெருமையாக மிளிர ஏதுவாகலாம். சுபம்.

ஆயிலி,
காரைநகர்.
9-5-71.

ஆ. தியாகராசா,
(பா. உ.)

உ

## அணிந்துரை

உடுப்பிட்டிப் பா. உ. ம், நியாயவாதியுமாகிய
திரு. க. ஜெயக்கொடி அவர்கள்

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் கூற்றிற்கு இலக்கானவர் திருவாளர் ச. அருணாசல உபாத்தியாயரவர்களாவர். தமிழுக்குஞ் சைவத்துக்கும் உழைத்த பெரியார்களுள் இவர்களும் ஒருவராவார்கள்.

சைவ ஆசிரியர்களே, சைவத்தையும் தமிழையும் வளர்க்கவேண்டியவர்கள். அவ்வகையான ஆசிரியர்களை உண்டாக்கியவர்களே, திரு. ச. அருணாசல உபாத்தியாயரவர்களாவர். என் சகோதரர்களையும், ஏனைய சைவாசிரியர்களையும் சிருஷ்டித்தவர் இவர்களே என்று கூறலாம். இதுகாலவரை அவர்களின் வரலாறு எழுதாமல் விட்டமை பெருந்தவறாகும். இப்போது அவர்களுடைய வரலாறு வெளிவந்தமை கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. க. ஜெயக்கொடி
(பா. உ.)

பருத்தித்துறை,
22-9-71.

உ
சிவமயம்

கோப்பாய் ஐக்கிய போதனு பாடசாலையிற்
பயிற்சி பெற்ற ஆரம்பகால மாணவர்,

புங்குடுதீவு

பேராசிரியர் திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள்
உவந்தளித்த

## வாழ்த்துரை

1. தெண்ணிலா வணிந்த செஞ்சடைப் பரமன்
தேவியோ டுயிர்க்கருள் புரியத்
தண்ணரிய தமிழார் செமபியர் நாட்டிற்
சார்வுறு தில்லைமா வனத்தில்
விண்ணணியல் மன்றில் நடமிட லென்ன
மெல்லடி தூக்கிநின் ருட
நண்ணரிய விழச் சிதம்பர மென்னும்
நற்பதி திகழ்திரு நாடு.

2. சீரொடு திருவும் சிவனெறி வழக்கும்
சிறந்திடு சால்புளோர் வாழும்
காரைமா நகரிற் பழம்பெருங் குடியிற்
கவினுறு சங்கரப் பிள்ளை
ஏருறு மேழித் துவசனீன் றெடுத்த
இணையறு குரிசில் தன்னுடலை
பாரினிற் சேவை புரிவதற் காக்கும்
பயன்பெறு பாக்கியம் படைத்தோன்.

3. சைவமுந் தமிழுந் தழைத்திடல் வேண்டும்
தவநெறி பெருகிடல் வேண்டும்
செய்வினை யெல்லாஞ் சிவனடித் தொண்டாய்த்
திகழ்ந்திட வேண்டுநல் லறங்கள்

வையகத் தெங்கும் வளர்ந்திடல் வேண்டும்
மற்றிவை நனவினிற் கனவில்
எய்திட வாழ்ந்தோன் இங்கிதம் பொறுமை
எளிமையா மணிகல முள்ளோன்.

4. பொதுநலத் தொண்டு நாவலர்ப் பின்னர்ப்
புரிபவ னுரெனிற் காரைப்
பதியினன் அருணு சலமலா திலையெனப்
பலமுற நல்லைமா நகரின்
அதிபன்கை லாய பிள்ளையாய்ந் துணர்ந்தே
யறைந்தவை கேட்டன மிதன்மேற்
துதிபெறு மவன்சீர் சொல்லிட வொன்றும்
தோன்றிட வில்லையெம் மகத்தே.

5. அன்னசீர் அருணு சலமெனு மாசான்
ஆற்றிய தொண்டெலா மாய்ந்து
பின்னவ ரறிய வவன்வர லாறு
பிறங்கிட அளித்தனன் அல்வாய்
மன்னுதொல் லாசான் கணபதிப் பிள்ளை
வரோதய னிவ்வர லாறு
இந்நிலத் திரவி மதியமுள் ளளவும்
இன்றமிழ் என்ன வாழியவே.

❊

உ

சிவமயம்

கோப்பாய் ஐக்கிய போதனு பாடசாலையிற்
பயிற்சி பெற்ற ஆரம்பகால மாணவர்,

கரவெட்டி

திரு. சி. ஏ. சின்னையா அவர்கள்
போற்றி உதவிய

# ஏத்துரை

காரை யருணசல வாசிரியர் வந்திலரேல்
ஊரை யுயர்விக்க வோசருண்டோ — ஆரமுத
மன்னுரை வாழ்த்தி யவர்செய்த தொண்டினையே
பொன்னுகப் போற்றுவமே யாம்.

நமது ஆசிரியர் வரலாறு வெளியீடு நடைபெறும் இந்நாள் எம்மனோருக்கு ஒரு பொன்னுளாகும். இப் பொன்னுளே நமக்கெல்லாம் நன்னுளாய் அமைவது இறைவன் திருவுள்ளம் ஆகும்.

இப்பெரியாரின் சீவிய வரலாற்றை வாசிக்கவும், கேட்கவும் எங்கள் ஐம்புலன்களும் ஆமை தன்னுறுப் புக்களை அடக்குவது போல அவர்பால் லயப்பட்டு இணைந்து விடுகிறது. இத்தருணம் அப்பெரியாரை நினைந்து உரோமஞ் சிலிர்ப்ப, உள்ளம் பொங்கித் துடி துடித்து, அவர் நெறி நின்று தொண்டினைச் செய்ய உந் தப் பெறுதலால் இன்று நன்னுளேயாம் என்பது தெளிவு.

இப் பெரியாரின் அபிலாட்சைகளை நாம் எவ்வாறு நிறைவேற்றி அவரது ஆத்மாவிற்குச் சாந்தியளிக்க லாம் என்பன போன்ற விஷயங்களிற் சிந்தனை செய்து செயலாற்றுவதற்கு இந்த வரலாற்று நூல் உதவ வேண்டுமென்பது சிறியேனது வேணவா. அவர் உலக,

குடும்பப் பற்றுக்களைத் துறந்து வாழ்ந்தவராயினும் சில பற்றுக்களை இறுகப்பற்றியிருந்தாரென்பது தெளிவு. அவற்றைச் சைவாசிரியவுலகம் நினைந்து செயல்பட வேண்டும். அந்தவகையில் தூண்டுவதற்கு வாய்ப்பாக நமது ஆசிரிய நண்பர் வரலாற்று நூலை ஆக்கியிருக்கின்ருர்கள். நமது ஆசிரிய மகானின் கருத்துவழி சைவ உலகம் நடக்க இறைவன் திருவருள் பாலிப்பாளுக.

இந்நூலை எழுதியுதவிய ஆசிரியர்க்கும், வெளியிட முன்வந்த சைவமகாசபையார்க்கும், வெளியீட்டிற்கு உதவிகள் புரிந்த பெரியார்களுக்கும் திருவருள் எல்லா நன்மைகளையும் ஈந்தருளும் என்ற நம்பிக்கையுடையேன்.

ஓம்

# நன்றியுரை

"நன்றி மறப்பது நன்றன்று" என்பது வள்ளுவர் வாக்கு. இந்நூல் வெளியாக உதவிய யாவர்க்கும் என் உளமார்ந்த நன்றி தெரிவிக்கும் கடப்பாடு பெரிதுமுடையேன்.

வரலாறு எழுதப்படல் வேண்டுமென்பது பலரது விருப்பம். அதை ஆசிரியர்ப் பெருந்தகையார், திரு. சி. கணபதிப்பிள்ளையவர்களிடம் கூறியபோது முழுமன விருப்போடும் ஏற்றுக்கொண்டார்கள். வயசாய நேரம், கைநடுக்கம், இவைகளால் அவர் சொல்லச் சொல்ல யானே எழுதினேன். எழுதிய நாட்களில், உணவும் பிற வசதிகளும் தந்து உதவினார்கள். அச்சிடும் செலவிற்காகத் தாமாகவே ரூபா 100/- உதவி உற்சாகப் படுத்தினார்கள். இவைகளுக்கெல்லாம் எனது நன்றி உரியதாக.

இந்நாட்களில் எக்கருமங்களும் சங்கங்கள்மூலமே செயற்படுகின்றன. அவ்வகையில் இந்நூலையும் ஒரு சபை மூலம் வெளியாக்க நினைத்தேன். என் கருத்தைச் சைவ மகாசபையாரிடங் கூறினேன். சபை சார்பாய் வெளியாக்கத் தடையில்லை என்றார்கள். அவர்களுக்கும் நன்றி.

அச்சிடற்குதவியாக, அழகிய எழுத்தில் நூற் பிரதியை எழுதி உதவிய, எனதயல் வாழ் பண்டிதை செல்வி சோ. யோகலட்சுமிக்கும், எனது மகள் செல்வி சி. சிவநாயகிக்கும் நன்றி.

அச்சிடற்காய நிதியைக் கேட்ட உடன் தந்தும், கேளாதிருக்கத் தாமே முன்வந்து உதவியும் உற்சாக மூட்டிய பெரியார்களுக்கு உளமார்ந்த நன்றி. நிதியுதவியோர் பட்டியலைப் பிறிதோரிடத்திற் காண்க. ஒரு

பெரியாரிடம் நிதி உதவி கேட்டபோது, உதவி செய்யாத போதும், ''நற்காரியமே செய்கிறீர்க''ளெனக் கூறினர்கள். அக்கூற்றிற்காகவுமவர்க்கு நன்றி.

அச்சிடும்போது 'புறாஉ'ப் பார்த்துத் திருத்தஞ் செய்து உதவிய, ஆசிரிய நண்பர்கள் திரு. க. சிற்றம்பலவற்கும், திரு. சி. ஐயாத்துரை அவர்களுக்கும் நன்றி.

நூலே எழுதவும், அச்சிடவும் உற்சாகப்படுத்தியதோடு, ஈழத்துச் சிதம்பர புராணத்தில், இந்நூலுக்குத் தேவையாய சில செய்யுட்களை எடுத்தாள அனுமதி தந்தும், புஸ்தகப் பெறுமதியின் ஐம்மடங்கு விலையை முற்பணமாக முதன்முதலாக உதவி ஆக்கந்தந்த அந்தணச் செம்மல் ப்ரமஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்களுக்கும் நன்றி.

நூலாசிரியர்க்குத் தெரியாத வரலாற்றுப் பகுதிகள் சிலவற்றை, அறியச் செய்த பெரியார்கள் திரு. வீ. வன்னியசிங்கம், திரு. மு. கு. சுப்பிரமணியம், திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை, திரு. ஏ. சின்னையா, திரு. சு. கந்தையா ஆகிய பெரியோர்களுக்கும் நன்றி.

அணிந்துரை உதவி உற்சாகமூட்டிய பேராசிரியர் திரு. ஆ. தியாகராசா (வட்டுக்கோட்டை பா. உ.) அவர்களுக்கும், ஆராய்ச்சி உணர்வோடு கூடிய அணிந்துரை உதவிய பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி அவர்களுக்கும், பேராசிரியர் திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்களுக்கும், திரு. சி. ஏ. சின்னையா அவர்களுக்கும் எனது தாழ்மையான நன்றி.

பலவிதங்களிலும் தூண்டி, எனது சோர்வை அகற்றி, இந்நூலே வெளியிடுவதில் பெரிதும் ஆர்வங் காட்டி ஊக்கிய, ஆசிரியர் திரு. அ. சிவப்பிரகாசம் அவர்களது மகன் ஆசிரியர் திரு. சி. சிவானந்தரத்தினம் அவர்களுக்கும் எனது நன்றி.

இறுதியாக, நல்ல முறையில் அச்சிட்டு, அழகான புத்தகமாக்கி உதவிய பெரியார், ஸ்ரீ சண்முகநாத அச்சக உரிமையாளர் திரு. சி. ச. குமாரசுவாமி அவர்கட்கும் நன்றி. இவ்வளவு பணம் வேண்டும், இப்போதே தாருங்கள் எனக் கூறுது, வசதியானதை உங்களுக்கு வசதியாயபோது உதவலாம் எனக் கூறிய பெருந்தன்மை பாராட்டற்குரியது.

இந்நூல் வெளியாகத் தோன்றுத் துணையாயிருந்து உதவிய திண்ணபுரச் சுந்தரேஸ்வரப் பெருமான் திருவடிகளை வழுத்துகின்றேன்.

சுபம்.

அ. சிவபாதம்
செயலாளர்.

சைவமகாசபை,
காரைநகர்.
விரோதிகிருது — புரட்டாதி — ௧௩
(29-9-71)

## பிழை திருத்தம்

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 20 | ஆலயங்களைத் | ஆலயங்களையுந் |
| 16 | 2 | நினைத்திர் | நினைத்தீர்கள் |
| 17 | 29 | கரணவாயில் | கரவெட்டியில் |
| 35 | 30 | பண்டிதமணி | புலவர்மணி |

# உள்ளே


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பதிப்புரை | | iii |
| 2. | முன்னுரை | | v |
| 3. | கடிதம் | | viii |
| 4. | அணிந்துரைகள் | | ix |
| 5. | நன்றியுரை | | xxxii |
| 6. | பிழை திருத்தம் | | xxxiv |
| 7. | பண உதவி புரிந்தோர் | | xxxvi |
| 8. | வரலாறு | 1. நகர்ச்சிறப்பு | 1 |
| | | 2. வம்சாவழி | 2 |
| | | 3. மழலைப் பருவம் | 2 |
| | | 4. ஆரம்பக் கல்வி | 3 |
| | | 5. உயர்தரக் கல்வி | 5 |
| | | 6. ஸ்தல தரிசனம் | 5 |
| | | 7. இல்வாழ்க்கை | 8 |
| | | 8. சிந்தனைகள் | 9 |
| | | 9. சுப்பிரமணிய வித்தியாசாலை | 10 |
| | | 10. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வித்தியாசாலை | 12 |
| | | 11. வியாவிற் பாடசாலை | 14 |
| | | 12. வெளியில்... இலட்சியம் பரப்புதல் | 16 |
| | | 13. காரைநகர் | 18 |
| | | 14. கிரிமலை | 19 |
| | | 15. வண்ணார்பண்ணை | 20 |
| | | 16. கோப்பாய் ஐ. போ. பா. | 22 |
| | | 17. புகழ் விரும்பாதவர் | 31 |
| | | 18. இறுதி யாத்திரை | 33 |
| 9. | அநுபந்தம் I | | 34 |
| | அநுபந்தம் II | | 36 |
| | அநுபந்தம் III | | 37 |
| | அநுபந்தம் IV | | 39 |
| 10. | உபாத்தியாயர் அருணசலம் (ஆங்கிலம்) | | 40 |
| 11. | என் தந்தையார் | | 44 |

# இந்நூல் வெளியாகப் பண உதவி செய்த பெரியோர்கள்

**20-10-71 வரை பண உதவி செய்தவர்களின் விபரம்.**

| பெயர் | | ரூ. ச. |
|---|---|---|
| ப்ரமஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் | காரைநகர் | 13 00 |
| திரு. ச. செல்லையா | ,, | 3 00 |
| ,, க. கதிரவேலு | தைப்பிங் | 50 00 |
| ,, க. பேரம்பலம் | சாவகச்சேரி | 5 00 |
| ,, சு. முருகுப்பிள்ளை | இடைக்காடு | 15 00 |
| ,, வீ. வன்னியசிங்கம் | காரைநகர் | 50 00 |
| ,, சி. கணபதிப்பிள்ளை | தொண்டைமானாறு | 100 00 |
| பண்டிதர் திரு. சு. இராமசுவாமி | இடைக்காடு | 5 00 |
| திரு. அ. கந்தையா | தொல்புரம் | 10 00 |
| ,, கோ. கந்தையா | தங்கொட்டுவை | 30 00 |
| ,, ச. அம்பலவாணர் | கம்பளை | 25 00 |
| ,, ஆ. கணபதிப்பிள்ளை | கொழும்பு | 25 00 |
| ,, ஏ. சின்னையா | கரவெட்டி | 25 00 |
| ,, ச. சபாபதி | காரைநகர் | 20 00 |
| ,, சு. கந்தையா | கொடிகாமம் | 20 00 |
| ,, அ. சிவபாதம் | காரைநகர் | 50 00 |
| ,, ஆ. வே. பரமநாதர் | கல்கமுவா | 10 00 |
| ,, க. சிற்றம்பலம் | காரைநகர் | 10 00 |
| ,, கா. இராமுப்பிள்ளை | சாவகச்சேரி | 20 00 |
| ,, சி. சிவானந்தரத்தினம் | அட்டாளை | 10 00 |
| ,, ஆ. முருகேசு | காரைநகர் | 25 00 |
| ,, அ. இராசையா | மட்டக்களப்பு | 50 00 |
| ,, சி. சிவானந்தராசா | கண்டி | 20 00 |
| ,, ஆ. மார்க்கண்டு | கொழும்பு | 15 00 |

உ

சிவமயம்

## தோற்றம்

### வெண்பா

நாடு மிரத்தாட்சி நற்றுலாம் மூவைந்து
கூடும் நிசிவெள்ளி பூராடம் — மாடுறவே
காரை நகரரு ணாசல தேசிகனை
நீரை யுடையபிரான் தந்தான்.

## மறைவு

### வெண்பா

சென்றிட்ட சித்தார்த்தி சேர்மகரம் மூன்றும்நாள்
நின்றிட்ட வெள்ளி நடுநிசியில் — நின்றறிஞர்
போற்று வருண சலக்குரிசில் போயடைந்தான்
போற்று நடராசன் பாதம்.

## தொண்டு

### கலித்துறை

நாடும் புலவர்கள் நாளுந் துதித்திட நல்லேதந்த
தேடும் தவமுடை நாவலன் காத்திட்ட சைவமது
வாடும் பயிராய்க் கெடாது வளர்ந்திட வந்துதித்தோன்
கூடும் கருவுடை யாசா னருணு சலமுகிலே.

## சமர்ப்பணம்

ஈழத்தின் சைவப் பெருவள்ளலும்
சைவ வித்தியாவிருத்திச் சங்க ஸ்தாபகரும்,
சட்ட நூல் வல்லுனரும்,
யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக்கண்களுள்
ஒருவருமாய
கௌரவ திரு. சு. இராசரத்தினம் அவர்களுக்கு
அன்புக் காணிக்கையாக
இச்சிறு நூல் சமர்ப்பிக்கப்பட்டது.

# சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச. அருணாசலம் அவர்கள்

## நகர்ச் சிறப்பு

ஈழத்தின் சிரமென விளங்கும் வடபாகத்தின் வட மேல் திசையில் அதன் சிரோன்மணியென விளங்கும் காரைநகர் உளது. கார்காத்த வேளாண் மக்கள் வாழ்வதால் காரைநகர் எனப் பெயர் வந்ததென ஐதிகத் கதையுளது. அந்நகரில் வசிப்போர் உத்தம வேளாண் மக்களாகவும், கண்ணியம் மிக்க வியாபாரிகளாகவும், நோயினுற் பீடிக்கப்பட்ட மக்களை அந்நோயினின்றும் பாதுகாக்கும் வைத்திய கலாநிதிகளாகவும், பாண்டித்தியம் மிக்க கல்விமான்களாகவும், பட்டதாரிகளாகவும், நியாயதுரந்தரர்களாகவும், நியாயவாதிகளாகவும், பஞ்சபூத ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளாகவும், ஆத்மஞானத்தை உணர்த்தும் சமய ஞானிகளாகவும், இறைவனருளைப் பெற்று இன்புற்றிருக்கும் ஞானிகளாகவும் விளங்குகின்றனர்.

ஈழத்துச் சிதம்பரமென வர்ணிக்கப்படுவதும் பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவர், திரு. நாகமுத்துப் புலவர், பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் முதலிய புலவர்களாலும் இன்னும் வேறு புலவர்களாலும் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டதுமான திண்ணபுரத்துச் சிவாலயத்தையும், இதுவேயன்றி விநாயகர், அம்பாள், முருகன், ஐயனர் முதலிய ஆலயங்களைத் தம்மாட்டுக் கொண்டதும், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், வியாபார ஸ்தலங்கள், நெடுவீதிகள் உடையதும், ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை கற்பிக்கப்படும் பல பாடசாலைகளையும் தம்மாட்டுக் கொண்டதுமாய் விளங்குகின்றது.

## வம்சாவளி

முன்சொல்லப்பட்ட மேம்பாடுகளையும் பல பெருமைகளையும் பெற்றதுமாய காரைநகரில் ஜெகராசசேகரன் வழித்தோன்றலான சைவ வேளாளர் மரபிலுதித்த திரு. சிற்றம்பலம் சங்கரப்பிள்ளைக்கும் அவரது கற்பரசி பத்தினியம்மாளுக்கும் புத்திரராக, சைவமுந் தமிழுங் குன்றிய காலத்தில் திருவவதாரஞ் செய்த நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமான் போல சைவம் பரவவும் அஞ்ஞான இருள் நீங்கவும், மெய்ஞ்ஞான சூரியன் உதயமாகவும் இரத்தாட்சி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15-ம் நாள் (31-10-1864) வெள்ளிக்கிழமை இரவு பூராட நட்சத்திரத்தில் மல்லிகை என்னுங் குறிச்சியில் திரு. அருணாசலம் அவர்கள் அவதாரஞ் செய்தருளினர். தெய்வத் திருவருளால் திரு அருணாசலம் சிரேஷ்ட புத்திரராகவும்; வள்ளியம்மை கனிஷ்ட புத்திரியாகவும் தோன்றினர்கள்.

## மழலைப் பருவம்

நெடுங்காலம் மக்கட்பேறின்றி வருந்திய பெற்றருக்கு "வளரும் பயிரை முளையிற் தெரியும்" என்ற வாக்கின்படி திரு. அருணாசலமவர்கள் சிறு பராயத்திலே தன் உடன் தோழர்களோடு கூடி மண்ணாற் சிறு கோவிலமைத்து அதிற் பற்பல விக்கிரகங்களமைத்து பூசை திருவிழாக்கள் செய்தும், மாணவரை முன்னிருத்தித் தாம் ஆசிரியராயமர்ந்தும், சைவப் போதகராய்ப் பிரசங்கஞ் செய்தும், சுத்த உடை தரித்து வீபூதியணிந்து ஆலயங்களுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து வீபூதிப் பிரசாதம் பெற்றுப் பெரியோர்கள் மெச்சும்படி நடந்தும் வருவாராயினர். அதனைக் கண்ட தாய் தந்தையரும் சுற்றத்தவர்களும் பெரியார்களும் அவரின் தன்மைகளைக் கண்டு சைவ ஒளியேற்ற அவதாரஞ் செய்திருக்கிருரென்று பேரானந்தங் கொண்டனர்.

## ஆரம்பக் கல்வி

ஆண்டு ஐந்து நிரம்ப சோதிட வல்லுநர்களால் தேர்ந்தெடுத்த சுபமுகூர்த்த தினத்தில் பெற்றூர் பூசைத் திரவியங்களுடன் பிள்ளையையும் அலங்கரித்து அழைத்துக் கொண்டு, மூலாதாரத்திலிருந்து தோற்றி முன்னின்றருள் செய்து விக்கினங்களைத் தீர்க்கும் ஐந்து கரத்தான் அமர்ந் திருக்கும் அவ்வூரிலுள்ள மருதடிப் பிள்ளையார் ஆலயத் திற்குக் கொண்டு சென்று, ஆலயதரிசனம் செய்வித்து ஆலயக் குரு மூலம் பூசை முதலியவற்றை முடிப்பித்து அதன் பின்னர், அவ்வாலயத்திலேயே சைவத்துடன் சிவ ஞானத்தையும் குழைத்துக் கொடுக்கக்கூடிய பக்தி அறி வாற்றல் உடையவராயிருந்தமையால் அக்குருவைக் கொண்டே கும்பந் தாபித்து விநாயகர், சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு அருச்சனை வழிபாடு முதலியன செய் வித்து அட்சராரம்பஞ் செய்வித்தனர்.

அதன் பின்னர் அக்காலத்தில் நாவலர்பெருமானுல் தோற்றுவிக்கப்பட்ட வண்ணை நாவலர் பாடசாலையும் கோப்பாய் நாவலர் பாடசாலையுந் தவிர்ந்த ஏனைய பாட சாலைகளெல்லாம் அந்நிய மதத்தவர்களாகிய கிறிஸ்தவர் களால் தாபிக்கப்பட்ட பாடசாலைகளாய் இருந்தன. அதை யறிந்த பெற்றூர் மனம் வருந்தித் தம் அருமைக் குழந் தையைத் தம் ஊரிலுள்ள களபூமி கிறிஸ்தவ பாடசாலை யிற் கல்வி கற்க விட்டனர். அவ்வாறு அவர் கல்வி கற் றுக்கொண்டு வருங்காலத்தில் நற்பண்பு நல்லொழுக்கம் உடையவராய் சிவபக்தியிற் சிறந்தவராய் விளங்கி வந் தார். பெற்றூர் தம் வீட்டில் உலகமெலாம் போற்றும் ஔவையார் அதிவீரராம பாண்டியன் முதலிய புலவர் களாற் பாடப்பெற்ற ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி முத லாம் நீதி நூல்களையும், சமய குரவர்களாற் பாடப்பெற்ற தேவார திருவாசகங்களையும் அதற்கேற்ற ஆற்றலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து நடாத்தும் ஆசிரியரைக்

கொண்டு வேதனங் கொடுத்துப் பாடசாலை முடிந்த பின்பும் பாடசாலை இல்லாத நாட்களிலும் கற்பித்து வந்தனர்.

இவ்வாறு கல்வியில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் திரு. அருணாசலமவர்கள் வளர்ந்து வந்தார். அதைக் கண்ட பெற்றோர் அவமாகிய களையைப் பிடுங்கி நீர் விட்டு நெற்பயிரை வளர்க்கும் விவசாயியைப் போலத் தம் அருமைக் குழந்தைக்கு இடையூறுகளை நீக்கி ஊக்குவித்து வந்தனர்.

திரு. அருணாசலமவர்கள் ஐந்தாம் வருப்புச் சித்தியடைந்த பின்னர் பெற்றோர் தம் பிள்ளையின் கல்வி முன்னேற்றத்தையும் சமய ஒழுக்கத்தையுங் கண்டு போக்குவரத்தற்ற அந்தக் காலத்திலும் அவ்விடையூறு பெரிதென்றெண்ணாது சமயமும் கல்வியுமே அருந்தனமென்றெண்ணி நாவலர்பெருமானால் தாபிக்கப்பட்ட வண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் கொண்டு வந்து சேர்த்தனர்.

வெயிலில் திரிந்தவருக்கும் — நீரின்றி வருந்தியவருக்கும் — உணவின்றிக் கஷ்டப்பட்டவருக்கும் — நிழல் — நீர் உணவு கிடைத்தால் எவ்வாறு ஆனந்தமுறுவார்களோ அவ்வாறு திரு. அருணாசலமவர்கள் ஆனந்தமுற்று ஆசிரியர்க் கடங்கி, கந்தரலங்காரம் — கந்தரனுபூதி — நிகண்டு அந்தாதி முதலிய இலக்கிய நூல்களையும், இலக்கணச் சுருக்கம். நன்னூல், 1-ம், 2-ம் சைவ வினாவிடை, பிள்ளையார் புராணம், வாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம் முதலிய புராணங்களையும், தாம் கற்கும் வகுப்புக் கேற்ற வசனநூல்களையுங் கணிதம், பூமிசாஸ்திரம், சரித்திரம் முதலிய பாடங்களையுங் கற்று 8-ம் வகுப்பு வரை சித்தியடைந்தார்.

அக்காலத்தில் வண்ணைச் சிவன் கோவில், நல்லூர்க் கந்தசுவாமி கோவில், கைலாய பிள்ளையார் கோவில், சட்டநாதர் கோவில், பெருமாள் கோவில் ஆகிய கோவில்

களுக்குச் சென்று வழிபாடு செய்தும் திருத்தொண்டுகள் செய்தும் வந்தார்.

## உயர்தரக் கல்வி

திரு. அருணாசலமவர்கள் நாவலர் பாடசாலையில் 8-ம் வகுப்பு வரையிற் சித்தியடைந்த பின்னர் தாமொரு பயிற்றப்பட்ட ஆசிரியராய் வரவேண்டுமென்ற ஆர்வம் மேலும் மேலும் உந்த "சிலந்தி கட்டிய வலையில் ஈ முதலிய பிராணிகள் அகப்படுதல் போல" கிறீஸ்தவர்கள் கட்டிய மாயவலையில் தாமும் அகப்பட வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளாதவராய்த் தெல்லிப்பளையில் அமெரிக்கன் மிஷனால் நடாத்தப்பெற்ற ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையில் பிரவேச வகுப்பு முதலிய வகுப்புகளை கற்றற்குப் புகுந்தார். பிரவேச வகுப்பிற் சேர்ந்து படித்தார். படித்து வருங்காலத்தில் தன் வகுப்பு மாணவர்களுடன் கலந்து பழகினார், அம்மாணவர்களுள் அநேகர் கிறீஸ்த சமயத்திற் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றதையும், பெறுவதையும் உணர்ந்தார். கிறீஸ்த சமயத்திற் சேராத சிலரையும் தன்னையும் சேரும்படி அவர்கள் சொல்லும் உபதேசங்களையும் கேட்டார். இதுகால வரையிலும் சைவ சமய பாடங்களைக் கற்றவர் இப்போது பைபிளைச் சமய பாடமாகக் கற்பதையும் அதைக் கற்கும்படி வற்புறுத்தப் படுவதையும் உணர்ந்தார். கிறீஸ்தவ தேவாலயத்துக்குப் போகவேண்டியதையும், அங்கு உபதேசிமார் போதகர்கள் செய்யும் பிரசங்கங்களையும் கவனித்தார். நெஞ்சந் தழலென நொந்து வெதும்பினார். அந்நிய சமயநூல்களைக் கற்பதனால் நன்மையேயன்றி அதனால் என்ன தீங்கு வரப் போகின்றது? அப்பர் சுவாமிகள் மெய்ச் சமயமெனச் சமண சமயத்திற் புகுந்து தருமசேனரெனக் குருப் பட்டமும் பெற்று இருந்த காலத்தில் சகோதரி திலகவதியாரின் வேண்டுதலையேற்ற திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் சூலைநோயைக் கொடுத்து ஆட்கொள்ளவில்லையா? அவ்வாறே தன்னையும் திண்ண

புரச் சிவபெருமான் கைவிடமாட்டாரென்று உறுதி பூண்டிருந்தார்.

இவ்வாறு கற்றுக்கொண்டிருக்கும் நாட்களில் ஆசிரிய பிரவேச பரீட்சையிலும், ஆசிரிய முதலாம் ஆண்டுப் பரீட்சையிலும் சித்தியெய்தினர். பின்னர் இறுதிப் பரீட்சைக்குக் கற்றுக்கொண்டிருக்கும்போது கிறிஸ்தவ சமயத்திற் புகவேண்டிய நெருக்கமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. தாய் தந்தையரின் சம்மதத்தைப் பெற்றுப் புகுவதாகச் சாட்டுச் சொல்லி வந்தார். விடுதலை நாட்களில் பெற்ருர் சம்மதம் பெற்று வரும்படி பாடசாலை ஆசிரியர் சொல்லியனுப்புவர். ஆசிரியராய் வராவிட்டாலும் அந்நிய சமயத்திற் புக, தாய் தந்தையர் ஒருபோதும் உடன்படமாட்டார்களென்பது இவருக்கு நன்கு தெரியும். அதனல் அவர் அவர்களிடம் இதுபற்றிப் பேசுவதே இல்லை. இவர்களும் விட்டபாடில்லை. என்ன சொன்னுர்கள் என்று கேட்பார்கள். பிறர்க்குத் தீமை பயவாப் பொய்யைக் கூறலாமென்றெண்ணி, “ஆலோசித்துச் சொல்வதாகச் சொன்னுர்கள்” என்று கூறுவார். இறுதித் தேர்வு காலம் நெருங்கி வந்தது இவரது திறமையைக் கண்ட ஆசிரியர்கள் நீ சித்தியடைவது நிச்சயம். ஞானஸ்நானம் பெற்ருல்த்தான் உமக்குப் பாடசாலையிற் கற்பிக்க இடந் தருவோம் என்றனர். ஞானஸ்நானம் பெருவிட்டால் பரீட்சைக்கும் விடமாட்டோம் என்றனர். அதற்கவர் பரீட்சைக்கு என்னை விடுங்கள். பரீட்சை முடிந்து வீடு செல்லுமுன் ஞானஸ்நானம் பெறுகிறேன் என்று கூறினுர். பரீட்சை முடிந்தபின் ஞானஸ்நானம் பெற்று வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

பரீட்சை முடிந்த அன்றிரவு விடுதியிற் படுத்திருந்தார். நித்திராதேவி அவரை அணைக்கக் கிட்டவும் நெருங்கவில்லை. நெடுநேரம் சிந்தித்தார். ஒரு முடிவுக்கு வந்தார். எல்லா மாணவரும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தனர். நாய் — பேய் முதலியனவும் நித்திரை செய்யும் நடுநிசியில் தன் பெட்டியையும் எடுத்துக்

கொண்டு மதிலின் மேலாகப் பாய்ந்து மனோவேகம்போல் நடந்து வீட்டை அடைந்தார். நேற்றுக் கடைசிப் பரீட்சை. விடியுமுன் எவ்வாறு வந்தாய் எனத் தாய் தந்தையர் வினவ, பரீட்சை முடிந்தது. நம்மூர் வண்டியொன்று வசதியாய் வந்தது — ஆசிரியர் உத்தரவு பெற்று அவ்வண்டியில் வந்துவிட்டேன் என்று கூறினர்.

சில மாதங்கள் கழிந்தன. இறுதிப் பரீட்சையிற் தேறியதை அறிந்துகொண்டார். ஞானஸ்நானம் பெருமை காரணமாய் ஆசிரியப் பத்திரத்தையும் — கற்பிக்க இடம் பெறுவதையும் இழந்தார்.

* திரு. அருணாசலமவர்களோடு தெல்லிப்பளைப் போதனா பாடசாலையில் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் உடன் மாணவராய்க் கற்றனர். அவர்களில் மூவர் குறிப்பிடற்பாலர். திருவாளர்கள் 1. S. அம்பலவாணர், 2. ஐ. சுப்பிரமணியம், 3. மு. குமாரவேலு என்போராவர். முதலாமவர் அல்லின் ஏபிரகாம் என்ற பெயர் பெற்று வானசாஸ்திர விற்பன்னராய் விளங்கியவர். B. A. பட்டம் பெற்று ஆங்கிலப் புலமை படைத்தவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் கணிதப் பேராசிரியராய் விளங்கியவர். இரண்டாமவர் பயிற்சி பெற்ற ஆசிரியருமன்றி கிறீஸ்தவ போதகராய் விளங்கியவர். மூன்றுமவர் ஞானஸ்நானம் பெறவிரும்பாமை காரணமாய்ப் போதனா பாடசாலையிலிருந்து வெளியேறியவர். திரு. அருணாசலம் அவர்களின் ஆப்த நண்பர், பிரதம ஆலோசனையாளர். இருவர் இல்லங்களும் அருகாமையில் அமைந்திருந்தன அது காரணமாய்த் திரு அருணாசலம் அவர்கள் அருகிலுள்ள திரு. குமாரவேலு அவர்களுடன் ஆலோசித்தே தம் கருமங்களைச் செய்யுமியல்பினராய் இருந்தார்கள். இறுதிவரை இருவரும் நகமும் சதையும் போல வாழ்வு நடத்தினர்கள்.

---

* திரு. மு. கு. சுப்பிரமணியம் கூறியன.

பரீட்சையில் தேறிச் சில மாதங்கள் சென்றன, தேறியவர்களுக்குத் தகுதிப் பத்திரங்கள் வந்துவிட்டன. முகாமையாளர் மறுப்புக் காரணமாய் இவருக்கு மாத்திரம் தகுதிப் பத்திரம் கிடைத்திலது. அக்காலம் பிரபல்யமாய் விளங்கியவர் — தெல்லிப்பளையைச் சேர்ந்த பன்னாலையைப் பிறப்பிடமாக உடையவர் — அந்நாளைய சட்டசபை உறுப்பினர் — உயர்தர நீதிமன்ற நீதிபதியாய் விளங்கியவர் — 'சர்' பட்டதாரி — அம்பலவாணர் கனகசபை என்னும் பெயரினர். அவர்களுடைய பரிச்சயம் இவருக்கு ஏற்பட்டது. அரசாங்கத் தேர்வில் சித்தி பெற்றவர்க்குத் தகுதிப் பத்திரம் வழங்காமை அறமாகாது என்பதனை அரசியலார்க்கு உணர வைத்தார்கள் திரு. கனகசபை அவர்கள். அவர்கள் உதவியால் தகுதிப் பத்திரம் பெற்றுக்கொண்டார்கள்.

## ஸ்தல தரிசனம்

மூன்று ஆண்டுகள் அந்நிய சமயப் பாடசாலையிலிருந்து அந்நிய சமய நூல்களைக் கற்ற தோஷம் நீங்க வேண்டுமென்ற எண்ணம் உந்த, பரதகண்டஞ் சென்று ஸ்தல தரிசனங்கள் செய்ய வேண்டும் என்றெண்ணி அங்கு சென்று பல தலங்களைத் தரிசித்தும், தீர்த்த யாத்திரை செய்தும் வந்தனர்.

## இல்வாழ்க்கை

தாய் தந்தையர் தங்கட்கு ஒரே மகனாயிருப்பதாலும் அவரைப் பாதுகாக்கப் போதிய நன்செய் புன்செய் நிலங்கள் இருப்பதாலும், காலக்கெடுவில் ஆசிரியத் தொழிலுக்கு நேர்ந்த இடையூறை உணர்ந்தவர்களாயினும் அதைப் பொருட்படுத்தாது தம் மகனுக்குத் தம் மரபிலுள்ள தாய் மாமன் சண்முகம் கணபதிப்பிள்ளையின் புத்திரியாகிய நாகமுத்துவை வதுவை செய்து வைத்தனர். அவர்கள் இல்லறம் நடாத்தும் நாட்களில் அவர்

களுக்குச் சிவப்பிரகாசம், சிவஞானம், சிவபாதம் ஆகிய மூன்று புத்திரர்கள் உதித்தனர். இவர்களுள் சிவப்பிரகாசம், சிவபாதம் ஆகிய இருவரும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டனர். சிவப்பிரகாசத்தின் புத்திரராகிய சிவானந்தரத்தினமும் ஆசிரியத் தொழிலை நடாத்துகின்றார். ஏனையோர் அரசாங்க உத்தியோகங்களிலும் சிலர் கல்வி கற்றுக்கொண்டும் இருக்கின்றனர். சிவஞானம் என்பவர் சிறுவயதிலேயே உலகை வெறுத்து ஞானியாய்ப் பரத கண்டஞ் சென்றுள்ளார். இவைகளால் திரு. அருணாசலம் செய்த தவப்பயன் விளங்குகின்றதல்லவா ?

## சிந்தனைகள்

திரு. அருணாசலமவர்களின் மனமானது கடல் அலையிலகப்பட்ட துரும்புபோல ஒரு நிலையில் நிற்கவில்லை. நான் ஏன் ஜெனனம் எடுத்தேன்? என் ஜெனனத்தினால் ஆதி அந்தமற்ற என் சமயத்துக்கும், என்றுமழியாக் கன்னியாயும் இனிமையாயும் அழகு தருவதாயும் உள்ள தமிழ் மொழிக்கும், என்ன தொண்டு செய்தேன்? தமிழ் குன்றிச் சைவம் குன்றிய காலத்தில் நல்லை நாவலர் பெருமான் பிரமச்சாரிய விரதத்தைக் கைக்கொண்டு அவ்விரண்டுக்குந் தொண்டு செய்து அவற்றை நிலைநிறுத்தி உடல், பொருள், ஆவி மூன்றையுந் தத்தஞ் செய்து அழியாப் புகழ்பெற்றுச் சிவானுபூதியடைந்துள்ளார். அவர் விட்டுச் சென்றதை என்போன்றவர்கள் செய்யாவிட்டால் மானிட யாக்கை எடுத்து என்ன பயன்? என் கன்மபலனாக ஆசிரியத் தொழில் செய்து அத்தொழில் மூலம் சைவத்தையும் தமிழையும் வளர்க்க எண்ணினேன். அது கைகூடவில்லை "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை," "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற திருவாக்குகளுக்கமைய அவர்களின் கட்டளைப்படி இல்வாழ்க்கையிற் புகுந்தேன். "புத்" என்னும் நரகத்தினின்றும் மீளச் சற்புத்திரரைப் பெற்றேன். அதுவேயன்றித் தாய் தந்தையர்களாலும் என் மனைவி வழியாலும் வந்த ஆஸ்திகள் இருக்கின்றன. இவைகளிருந்தும் என்ன பயன்? என்

மனம் சாந்தியுறவில்லையே? எல்லாந் தானத்திலும் வித்தியாதானமே சிறந்தது. ஆகவே, என் ஆயுட்காலம் முழுவதையும் அதற்கே அர்ப்பணஞ் செய்வேன் என்று உறுதி பூண்டார். சைவப் பாடசாலைகள் இல்லாமையால் சுத்த சைவர்களாக விளங்கிய எத்தனையோ மாணவர்கள் இம்மையில் இன்பம் பயப்பதாகிய செல்வத்தை விரும்பி அஞ்ஞானிகளாகிக் கிறீஸ்தவ சமயத்திற் புகுகின்றார்களே! கிறிஸ்தவர்கள், பாடசாலை என்ற கடலிலே வலைகளை விரித்து நம் சைவ மாணவர்களை ஆசிரியத் தொழில் தருவதாகக் கூறிக் கிறிஸ்தவரென்ற மற்சங்களாக்கிப் பிடிக்கின்றார்களே! அதனின்றும் நான் தப்பினேன். தனக்கென வாழாதவனாய் நானிருந்தால் மற்றவர்களைத் தப்புவிக்கவேனும் பிறர்க்குரியவனாக வாழ வேண்டாமா? ஐயகோ! இதற்கு நான் என் செய்வேன். எங்குஞ் சைவம். எங்குந் தமிழ் கமழ வேண்டும். என் பொருளைக் கொண்டு சைவப் பாடசாலைகள் — சைவப் போதனா பாடசாலைகள் ஆகியவற்றை நிறுவ வேண்டும். அதற்கு நம் பொருள் எம்மட்டு! அறவழியிற் தேடிய செல்வர்களையும் — கல்வியறிவில் மேம்பட்டு ஆத்மசுத்தியடைந்த பெரியோர்களையும் — சைவ சமய விற்பன்னர்களையும் நாடுவேன் என்று துணிந்தார். அதிலிறங்கினர்.

## சுப்பிரமணிய வித்தியாசாலை

திரு. அருணாசலமவர்கள் செயல்வீரன் — கருமவீரன். தற்கால மக்கள்போல் சொல்வீரனல்ல — சுயநல வாதியுமல்ல. தற்புகழை விரும்புவனுமல்லர். பொருளாசை உடையவருமல்லர். பொதுநலவாதியாவர். யானோர் சைவன். என் பெற்றோர் சைவர்கள். அப்படியிருப்ப, எமது பிள்ளைகள் ஏன் கிறீஸ்தவ பள்ளியிற் படித்தல் வேண்டும் என்ற சிந்தனை மேலும் அவரை உறுத்தியது. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பவாகலின், தன் சொந்தக் கிராமமாகிய காரைநகரிலேயே முதற்கண் சைவப் பாடசாலை அமைக்க நினைத்தார்.

1885-ம் ஆண்டளவில் அக்கால வழக்கப்படி ஒரு வீட்டுத் திண்ணையிற் பாடசாலை ஆரம்பித்தார்கள். சுமார் நான்கு ஆண்டுகள் அக்கால முறைப்படி அரிச்சுவடி முதல் நீதி நூல்கள் வரை கற்பித்தார்கள். மாணவர் தொகை கூடி வந்தது. இடம் போதாமை காரணமாய், அப்பகுதியில் வாழ்ந்தவர் — சிவபுண்ணியச் செல்வர் — பெருந் தனவந்தர் — நிபந்தம் அமைத்து அதன் வருவாய் மூலம் சிதம்பரம் கோயிலிற் பூசை நிகழச் செய்தவர்- திரு. அருணசலம் அவர்களிலும் முதிர்ந்த வயசினை உடையவர்கள். சுப்பிரமணியம் எனப் பெயரிய பிரபு மூலம் அவர் பெயராலேயே அவரது சொந்த நிலமாகிய குட்டிப்புலத்திற் பாடசாலையொன்றைப் பிரபு சுப்பிரமணியம், திரு. அருணசலம், அன்னாரின் தந்தை திரு. சிற்றம்பலம் சங்கரப்பிள்ளை, தாய் மாமன் திரு. சண்முகம் கணபதிப் பிள்ளை, பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயர், பிரம்மஸ்ரீ கா. சிவசிதம்பர ஐயர், திரு. ஆறுமுகம் அம்பலவாணர், திரு. முருகர் குமாரவேலு ஆகியோர் சேர்ந்து அமைத்தார்கள். இது நிகழ்ந்தது 1889-ல் ஆகும். அக்காலம் அரசியலார் உதவிப் பணம் கிடைத்திலது அதன் காரணமாய் 1891-ம் ஆண்டில் திரு. சி. சுப்பிரமணியபிள்ளை ரூ. 400/-, பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயர் ரூ. 50 -, பிம்மஸ்ரீ கா. சிவ சிதம்பர ஐயர் ரூ 50/-, திரு. சி. சங்கரப்பிள்ளை ரூ. 50/-, திரு. ஆ. அம்பலவாணர் ரூ 50/-, திரு. மு. குமாரவேலு ரூ. 25/-, திரு. ச. கணபதிப்பிள்ளை ரூ 25/- கொடுத்துப் பொருத்தனை உறுதி எழுதினர்கள். அதன் வட்டிப் பணமே செலவு செய்யும் நிபந்தனை உடையது. மூவர் சபையாற் பரிபாலிக்கப்படுவது. வள்ளல் திரு. சி. சுப்பிரமணியம், திரு. ச. அருணசலம், பிரம்மஸ்ரீ கா. சிவசிதம்பர ஐயர் ஆகிய மூவரும் நியாசதாரிகளாயினர். நிலம், கட்டிடம் என்பன பிரபு சுப்பிரமணியம் அவர்களின் பெயரில் இருந்த காரணத்தால் 1895-ம் ஆண்டின் இறுதியில் திரு. சுப்பிரமணியபிள்ளையைக் கொண்டு திரு. அருணசலமவர்கள் தருமசாதனஞ் செய்வித்தார்.

நீண்ட காலமாய் அரசினர் உதவிப் பணம் கிடைத்திலது. சிதம்பர தரிசன மூலம் சேர். பொன். இராமநாதன் அறிமுகம் பெற்று, அவர் மூலம் அரசினர் உதவிப் பணம் பெறத் திரு சுப்பிரமணியபிள்ளை அவர்கள் வகை செய்தார்.

ஆரம்ப காலத்தில் திரு. சி. தில்லையம்பலம், திரு. த. நாகமுத்துப் புலவர் எனும் நல்லாசிரியர்கள் நியமனம் பெற்றுப் பணி புரிந்தனர்.

திரு. அருணாசலமவர்கள் எந்த நோக்கத்தோடு பாடசாலையை ஆரம்பித்தார்களோ அந்நோக்கம் நிறைவாகவில்லை. அக்காலப் பாடசாலைகள் 5-ம் வகுப்பு வரையே கற்பித்தன. ஆனால், திரு. அருணாசலமவர்கள் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புக்கள் வைத்து நடாத்த வேண்டும்; காவிய வகுப்புக்களை உடையதாய்ப் — போதனா பாடசாலையாய்ச் சுப்பிரமணிய வித்தியாசாலை சிறக்க வேண்டும் என்னுஞ் சிந்தனை உடையவர்கள். அதற்கேற்பச் சூழலோ, அப்போது கற்பித்த ஆசிரியர்களோ, வித்தியா பகுதியோ இடங் கொடுக்கவில்லை அதனால் மனஞ் சலித்தார். 1917-ம் ஆண்டளவில் அவர் கருத்து அரும்பத் தொடங்கியது. கொழும்பு மாநகரில் அரசியலார் நடாத்திய (1910 — 1912) பயிற்சிக் கலாசாலையிற் கற்றுத் தேறிய பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர ஐயரவர்கள் தலைமைப் பேராசிரியராய் நியமிக்கப்பட்டார்கள். 1945-ம் ஆண்டு வரை அவர் பணி இடம் பெற்றது. அக்காலத்திற் பாடசாலை பல வழிகளாலுஞ் சிறப்படைந்தது.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலை

திரு. அருணாசலமவர்கள் அறிஞர்களோடு ஆலோசித்தே தம் பணியைச் செய்யுமியல்பினர். தாமாகவே நினைத்தாலும் ஏனையோர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்குமியல்பினர். கிராமங்கள் தோறும் நண்பரைப் பெற்றிருந்

தார்கள். நல்லூரில் ஸ்ரீலஸ்ரீ நாவலர் தமையனார் புத்திரர் ஸ்ரீமத். த. கைலாயபிள்ளையவர்கள் வசித்தார்கள். அவர்களோடு ஆலோசிக்கச் செல்வார்கள். அவர்கள் செல்லும் வண்டி கால்நடை என்பதை நாம் கூறவேண்டியதில்லை. யாழ்ப்பாணம் செல்லும் பாதையில் வட்டுக்கோட்டைக் கிராமம் உள்ளது. அங்கே அமெரிக்க மிஷனரிமார் ஓர் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். அதுவே யாழ்ப்பாணக் கல்லூரியென இப்போது அழைக்கப்பட்டு வருகிறது. காரைநகர் மக்கள் கிறீஸ்தவராய்ச் சேர்ந்து ஆங்கிலங் கற்று மலாய் நாடு சென்று பொருளீட்டி வந்தார்கள். இதுபற்றித் திரு. அருணாசலம் சிந்தித்தார்கள். சைவ மாணவராய்க் கற்க சைவாங்கில வித்தியாசாலை தம் கிராமத்தில் இல்லாமையை உணர்ந்தார்கள். * உணர்ந்து, சைவாங்கில பாடசாலை உருவாக்க வேண்டுமென்று மாப்பாணவூரி கந்தப்பர் இலட்சுமணபிள்ளைக்கும், சற்றுத் தெற்கேயுள்ள சிதம்பரப்பிள்ளை கந்தப்புவுக்கும், அவர் அயலிலுள்ள கோவிந்தபிள்ளைக்கும் இன்னும் மற்றவர்களுக்கும் ஊக்கமளித்தனர். அதனால் உற்சாகமடைந்த திரு. கோவிந்த பிள்ளையவர்கள் 1889-ல் தம் சொந்த நிலத்தில் ஒரு பகுதியைப் பாடசாலைக்கு உதவினார்கள். உதவியதோடு அயலிலுள்ளவர்களையுஞ் சேர்த்துச் சிறு கொட்டிலமைப்பித்துப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்கள். திரு. இலட்சுமணபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தம் உறவினருமாய, திரு. சயம்பு எனப் பெயரிய நல்லாசிரியரை அழைத்து வந்து பாடசாலை நடைபெறச் செய்தார்கள். திரு. அருணாசலம் ஆலோசனைப்படி திரு. கந்தப்பு வீட்டைச் சேர்ந்தவர்கள் பிடியரிசி சேர்த்து அதன் மூலம் சயம்பு உபாத்தியாயரைப் போஷித்தார்கள். நீண்ட காலம் சயம்பு உபாத்தியாயர் மேற்பார்வையில் வளர்ந்தமையின் "சயம்பு பாட

---

* இப்பகுதி திரு. வீ. வன்னியசிங்கம் B. A. மூலம் அறிந்தது.

சாலை" எனப்படலாயிற்று. அதுவே "திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வித்தியாசாலை" எனப்படுவது. கால கெதியில் உயர்ச்சி பெற்றுத் தற்போது "காரைநகர் இந்துக் கல்லூரி" என ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

## வியாவிற் பாடசாலை

திரு. அருணாசலமவர்கள் தம் கிராமத்திலுள்ள வியாவில் என்ற இடத்தில் பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயரவர்கள் ஆலோசனையோடும் உதவியோடும் "சைவ பரிபாலன வித்தியாசாலை" ஒன்றை ஆரம்பித்தார்கள். ஐயரவர்கள் பாடசாலைக்காய நிலத்தைத் தருமசாதனஞ் செய்தார்கள். அது காரணமாய் அப்பாடசாலையை ஐயர் பள்ளிக்கூடம் என அழைப்பாராயினர்.

ஐயரவர்கள் திரு. அருணாசலம் அவர்களுக்கு வலக் கரம் போன்றவர்கள். பூசகர் மாத்திரமல்லர். வைத்தியம், சோதிடம் ஆகிய கலைகளிலும் ஈடுபாடுடையவர்கள். வறிய மக்களுக்கு இலவசமாகவே மருந்துகள் உதவும் நீர்மையர். சோதிடம் சம்பந்தமான குறிப்புகளும் பார்த்துக் கூறுமியல்பினர். பிரதிபலன் பெறுவதில்லை. நகைச் சுவைப்பட உரையாடுமியல்பினர். அவர் இல்லத்தினயலே சுப்பிரமணியசுவாமி கோயிலுளது. மிக வயசாய காலத்திலும் பூசனை செய்து வந்தார்கள். ஆழமான கிணற்றிலிருந்து குடம் மூலம் நீர் பெற்றுச் சுவாமிக்கு அபிஷேகஞ் செய்ய வேண்டும். ஐயரவர்களுக்குப் புத்திரரில்லை. ஒரு புத்திரி மாத்திரமுளர். பரிசாரகருமில்லை. அதனாற் சிரமப்பட்டே தண்ணீர் மொள்ளுவார். ஒரு குடம் நீரையே அபிடேகஞ் செய்வார். "ஐயா! ஒரு குடம் நீர் அபிடேகத்துக்குப் போதுமா?" என்று யாரேனுங் கேட்டால், ஐயர் குறும்புச் சிரிப்புச் சிரிப்பார்கள். "அப்பனே! நீ தினம் ஒரு முறைதான் குளிக்கிறாய். நமது சுப்பிரமணியர் தினம் மூன்று முறை சிரஸ்நானஞ் செய்கிறார். அதிகம் ஊற்றிக்கொண்டால் ஜலதோஷம் பிடித்துவிடும். மூக்கால் சளி கொட்டும். துடைப்பதற்குத் துணிகூட

இல்லை. கர்ப்பக்கிரகம் எல்லாம் அசுசியாகிவிடும். என்னிடம் ஜலதோஷத்துக்கு மருந்துமில்லை. வேறு வைத்தியரிடம் மருந்து பெற்றுக் கொடுக்கலாமென்றால் என்னால் நடந்து செல்ல இயலவில்லை. ஆதலின், சம்பிரதாயம் நோக்கி அபிடேகஞ் செய்தேன்" என விகடமாகச் சொல்லுவார்கள். கேட்டவர் மௌனியாகிவிடுவார்.

ஐயரவர்கள் இல்லம் அன்னசத்திரம் போன்றது. சாப்பாட்டு நேரம் யார் சென்றாலும் உணவளித்தே அனுப்புமியல்பினர். திரு. அருணாசலமவர்களிடம் வரும் அயலூர் விருந்தினர்களை உபசரித்தனுப்புஞ் செயல் ஐயரவர்களைச் சார்ந்தே இருந்தது.

வியாவிற் பாடசாலையைக் குறிப்பிடும்போது இரு உபாத்தியாயர்கள் நம் சிந்தனையைத் தொடுகிறார்கள். ஒருவர் அளவெட்டியைச் சேர்ந்தவர். திரு. வைத்திலிங்கச் செட்டியார் என்னும் பெயரினர். அவர்களிடங் கற்ற மாணவர் இன்னும் நல்லறிவுடையவராய் விளங்குகிறார்கள். ஏனையவர் திரு. ச. இராமநாதன் அவர்கள். பாடசாலை வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமுடையவர்கள். திரு. அருணாசலமவர்களின் மைத்துனர் (சகோதரி கணவர்). அவர் செவிகளில் எப்போதுங் கடுக்கன்கள் ஆடிக்கொண்டேயிருக்கும். நீளமான கால்கள். வேகமாக நடக்குமியல்பினர். சமயோசித புத்தியுமுடையவர். ஒரு தினம் காலை 7 மணி இருக்கலாம். சங்கானைச் சந்தையிற் காய்கறி வாங்கிக்கொண்டு நின்றார்கள். அளவெட்டியில் இருந்து பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்கள் மாட்டு வண்டியில் வந்துகொண்டிருக்கிறார்கள். இருவருஞ் சிறிது தூரத்தில் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். ஐயரவர்கள் பாடசாலைகளின் பரிசோதகர் என்பதை வாசகர்களுக்கு யான் கூறத் தேவையில்லை. அவர்கள் சுழிபுரம் மூளாய் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு முற்பகல் 11 மணியளவில் வியாவிற் பாடசாலைக்குச் சமூகந் தந்தார்கள். திரு. இராமநாதன் மிக விரைவில் ஐயருக்கு முன்பாகப் பாடசாலைக்கு வந்துவிட்டார்கள். ஐயர், "சட்

டம்பியார் சந்தையில் நின்றதுபோலிருக்கிறது" என்றார்கள். சட்டம்பியார், "என் தம்பியை யான் என நினைத்தீர் போலும்" எனச் சமயோசிதமாகக் கூறிக் கதையை வேறு பக்கமாகத் திருப்பிவிட்டார்கள்.

திரு. அருணாசலமவர்கள் வியாவிற் பாடசாலையிற் சில காலம் வேதனம் பெறாது பணிபுரிந்தார்கள். அங்கு நெடுங்காலம் பணிபுரிந்தாரில்லை. காரணம், கிராமங்கள் தோறும் பாடசாலைகள் தாபிக்கவேண்டுமென்ற அவாவினால் ஆசிரியத் தொழிலில் அதிகம் அக்கறை காட்டவில்லை.

## வெளிக் கிராமங்களிற் சுற்றுப் பிரயாண மூலம் இலட்சியத்தைப் பரப்புதல்

திரு. அருணாசலமவர்கள் தமது சொந்தக் கிராமமாகிய காரைநகரை மாத்திரம் நினைத்தாரில்லை. யாழ்ப்பாணக் குடாநாடெங்கணும் பாடசாலைகள் ஆரம்பிக்க நினைத்தார். ஏன், இலங்கை முழுவதும் என்று கூறினும் தவறில்லை. ஆகலின் அங்கிருந்து வெளியே செல்ல நினைத்தார்.

அக்காலத்தில் ஒரு பெரியார் மற்றைய இடங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் மாட்டு வண்டி அல்லது குதிரை வண்டியிற் குறித்த நேரங்களிற் செல்வர். இப் பெரியாரோ பகலென்றும் இரவென்றும் பாராது, பனியென்றும் வெயிலென்றும் பாராது, மழையென்றும் குளிரென்றும் பாராது தனதிரு பாதங்களே வாகனமாகக் கொண்டு இருபது முப்பது மைல் தூரமாய இடங்களிலும் கரடுமுரடான பாதைகளிலும் தனது பாதங்களுக்குப் பாதுகாப்பாக எவ்வித பாதரட்சையும் அணியாது, கைகளுக்குப் பாதுகாப்பாகப் பிரம்பு முதலிய பாவியாது கொப்பிகளும், புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும், பென்சிலும் கையிற் கொண்டு நாலுமுழ வேட்டியும், ஆறணியன் சால்வையை மூலையாக மடித்துத் தோளிற் போட்டுஞ் செல்வர்.

இவ்வாறு பல கிராமங்களுக்கும் பட்டினங்களுக்குஞ் சென்று அங்குள்ள சைவாபிமானிகளேயுஞ் செல்வந்தர் களேயுங் கண்டு தாம் எடுத்துக்கொண்ட விடயங்களே விளக்குவார். ஒருமுறை சென்று தம்மெண்ணம் நிறை வேருவிடின் திரும்பத் திரும்பச் செல்வார். சென்று தம் எண்ணத்தை முடித்துவிடுவார். சிலகால் தாம் காணச் சென்றவர் இல்லாவிட்டால் பின் வந்து சந்திப்போமென் றெண்ணியவராய் வேருெருவரைக் காணத் தம் நடைக் குதிரையாகிய அஞ்சலோட்டத்தைத் தொடங்குவார். இவ் வாறு திரிந்து திரிந்து பல கிராமங்களிற் சைவப் பாட சாலைகள் ஆரம்பிக்கச் செய்தார்.

* இவைகளுக்கெல்லாம் நிதி வேண்டும். நிதி சேர்ப் பதற்காக ஒருசமயம் மலாய்நாடுஞ் சென்ருர்கள். கோலா லம்பூரில் தமிழர்கள் அதிகமாய் வாழ்கிருர்கள். அதனுல் அதைச் சின்ன யாழ்ப்பாணம் எனவுஞ் சொல்வார்கள். அங்குள்ள சில பிரமுகர்கள் மூலம் "இலங்கைத் தமிழர் சங்கம்" என ஒரு சபையை நிறுவினுர்கள். சைவத்தை யும் தமிழையும் பரப்புவதே அச்சங்கத்தின் நோக்கம். காலகதியில் அச்சங்கம் பிரிந்து சுவாமி விவேகானந்தர் பெயரில் ஒரு சங்கத்தையும் ஒரு பாடசாலையையும் நிறுவி நடாத்தியது. அப்பாடசாலைக்குத் தம் போதனு பாடசாலை யிற் கற்றுத் தேறியவரும் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய நல்லாசிரியர் திரு. சி. இ. சதாசிவம் பிள்ளையை அனுப்பி உதவினுர்கள். அவ்வாசிரியர் காலத் திற் பாடசாலை சிறந்து விளங்கியது.

கரம்பனிற் சுவாமி மகாதேவா மூலம் முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையிற் சண்முகநாத வித்தியா சாலையையும், மட்டுவில் வித்துவான் இராமலிங்கம் மூலம் கமலாசனி வித்தியாசாலையையும், கரணவாயில் கிராய்ப் பிள்ளையார் கோவிற் பக்கலாகத் திரு. சிற்றம்பல மணியம்

* இது திரு. மு. கு. சுப்பிரமணியம் மூலம் அறிந்தது.

மூலம் மாணிக்க வித்தியாசாலையையும், அல்வாயில் வரத ராசப் பிள்ளையார் கோயில் அயலில் புலவர் சிரோன்மணி சின்னத்தம்பி உபாத்தியாயர் மூலம் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், துன்னாலையில் திரு. காசிநாதர் மூலம் காசிநாதர் வித்தியாசாலையையும், உடுப்பிட்டியில் நியாய துரந்தரரும், பேரறிவாளரும், பெருஞ் செல்வருமாகிய திரு. தாமோதரம்பிள்ளை மூலம் கரணவாய்ச் சைவப் பிரகாச வித்தியாசாலையையும், இன்னும் உடுப்பிட்டியில் பெருஞ்செல்வராகிய திரு. வீரகத்திப்பிள்ளை மூலம் சைவப் பிரகாச வித்தியாசாலையையும், வல்வையிற் சிதம்பரக் கல்லூரி மனேச்சரும், சிவபக்திமானுமாகிய திருவாளர் ஞா. தையல்பாகர் மூலம் சிவகுரு வித்தியாசாலையையும், அனலைதீவிலே சின்னப்பா உபாத்தியாயர் மூலம் சதாசிவ வித்தியாசாலையையும் தாபிக்கச் செய்தார்.

இன்னும் பல சைவப் பாடசாலைகள் அன்னாரின் சுற்றுப் பிரயாணத் தூண்டுதலால் புதிது, புதிதாகத் தோன்றின. அன்னாரின் இலட்சியத்தில் ஒன்று கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் தோன்ற வேண்டும் என்பதேயாகும். இவ்வாறு சைவப் பாடசாலைகள் தோன்றிக் கொண்டிருக்குங் காலத்தில் இவற்றிற்கெல்லாம் சைவாசிரியர் வேண்டும் என்ற சிந்தனை உண்டாயிற்று. அதற்குப் பரிகாரம் சைவாசிரியர் கலாசாலையை உண்டாக்கலே என்ற எண்ணம் மேலும் வலுவாயது.

## காரைநகர்

சைவாசிரியர்களைத் தோற்றுவிக்கத் தமது ஊராகிய காரைநகரிலே சைவாசிரிய கலாசாலையை ஆரம்பிக்கத் திடங்கொண்டார். அங்குள்ள பெரியோர்களும், செல்வர்களும் உதவி செய்வார்கள் என்ற எண்ணத்துடன் சுப்பிரமணிய வித்தியாசாலை அயலில் ஆசிரிய மாணவர்களைச் சேர்த்து உணவும் உறைவிடமுங் கொடுத்து அதற்காய ஆசிரியர்களையும் நியமித்துக் கற்கச் செய்து வந்தார். அத்துடன் வித்தியா பகுதியாரை இதை அங்கீகரிக்கும்படி

வேண்டினர். முயற்சி பல எடுத்து வாதாடியும் பெறு பேறு கிடைத்திலது. இந்நாட்களில் அவர் தம் வாழ்க் கைத் துணைவியை இழந்தார்.

## கீரிமலை

யாழ்ப்பாணச் சைவர்களுக்குக் கீரிமலை பற்றி அறி முகஞ் செய்ய வேண்டியதில்லை. மூர்த்தி — தலம் — தீர்த் தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த பதி. அங்கே ஒரு சிவாலயம். அதன் மேற்கு வீதியில் தொல்புரத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை என்பவரின் மடம் உளது. அதன் வடபால் கூரைகளற்று இடிந்த சுவர்களையுடைய கட்டிடம் ஒன்று காணப்படுகிறது. அக்காலம் பிரபல்ய மாய் விளங்கியவர் மாதகலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ஏரம் பையர் என்பவர். வடமொழி தென்மொழியில் வல்லுநர். உருவில் ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களை ஒத்தவர். திரு. அருணசலம் அவர்களுக்கும் ஐயரவர்களுக்கும் ஈடுபா டுண்டு. இப்போதிருக்கும் வீடு அக்காலம் ஏரம்பையரின் வாசஸ்தானம், மடமாகவும் விளங்கியது. 1913-ம், 1914-ம் ஆண்டுகளில் திரு. அருணசலமவர்களின் சைவ போதன பாடசாலையாக விளங்கியது. ஐயரவர்கள் பக்கபலமாய் இருந்தார்கள். தற்போது சைவப் பிரசாரகராய் விளங்கு பவர், கொக்குவிற் பதியில் வாழ்பவர், சைவாசார சீலர், பழமை பேணுமியல்பினர், திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை என்னும் பெயரினர். ஐயரவர்களின் சிறந்த மாணவரில் ஒருவராயிருந்தனர். போதன பாடசாலைக்கெனச் சில ஒழுங்குகளைக் கல்விப் பகுதியார் அமைத்துள்ளார்கள். அவை இன்மையின் கல்விப் பகுதியார் உதவி கொடுக்க இசைந்தார்களில்லை. அதனுல் திரு. அருணசலமவர்கள் மனம் சோர்வுற்ருர்கள். ஆயினும், தம் எண்ணத்தைக் கைவிட்டாரில்லை.

இக்காலத்திற்ருன் ஓர் ஆசானுபாகுவான இளைஞன் கீரிமலைக்கு அடிக்கடி நீராட வருவதுண்டு. சட்டப் படிப்பு மேற்கொண்ட காலம், மூன்று சில்லுகளையுடைய

மோட்டார் பைசிக்கில், அதில் குளோஸ் கோற்றும் மடித்து உத்தரியமாய்ப் போட்ட சேலம் பட்டுச் சால்வையும் அணிந்த தோற்றம், கம்பீரமாய மீசையுங் கூட. இந்த உருவமே பிற்காலத்தில் விளங்கிய இந்துப் போட் இராசரத்தினம் என்பது. இவருக்கும் திரு. அருணாசலத் துக்கும் கீரிமலையிற் பரிச்சயம் ஏற்பட்டது. திரு. அருணா சலத்துக்குப் போதிய அளவு ஆங்கிலம் கற்க வாய்ப்புக் கிட்டவில்லை. பணமின்மை காரணமான வறுமையல்ல. அவர் பெற்றார் மிகு நிலம் படைத்த கமக்காரர். ஆங் கிலக் கல்வி பெற வசதியான பாடசாலையின்மையே. திரு. அருணாசலம் அவர்கள் வித்தியா பகுதியாருக்கு எழுதும் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் திரு. இராச ரத்தினம் அவர்களின் உதவியைப் பெற்று வந்தார். இதனால் இருவருக்கும் நெருங்கிய பரிச்சயமேற்பட்டது. திரு. அருணாசலம் அவர்களின் சேர்க்கையே திரு. இராச ரத்தினத்தின் சேவைக்கு அத்திவாரமானது.

## வண்ணார்பண்ணை

பூனை குட்டிகளை ஈனுகின்றது. தான் போகும் இடங் களுக்குத் தூக்கிச் செல்கிறது. அங்ஙனம் திரு. அருணா சலம் அவர்களும் தம் போதனா பாடசாலையை இடம் பெயர்த்துச் சென்றார்கள். கீரிமலையிலிருந்து வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலைக்கு வந்தார்கள்.

முன்னேரிடத்தில் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் பெயர் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் நாவலர் பாட சாலைகள் இரண்டினதும் மனேஜராய் இருந்தவர்கள், சிவபூசா துரந்தரர். அதிகாலையிலேயே தம் பூசையை முடித்துக்கொள்ளுமியல்பினர். பழமை பேணுமியல்பினர். புதுமையில் நாட்டமில்லாதவர். பழமையைப் பேணியும் புதுமையைக் கண்டித்தும் பல துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார்கள், அரையில் நாலுமுழ வேட்டி மாத்திரம் அணிந்து கொள்வார்கள். நெற்றியில் திரிபுண்டரமுஞ் சந்தனப் பொட்டும் அவருக்குத் தனியழகைக் கொடுத்துக்

கொண்டிருக்கும். திரு. அருணசலமவர்களின் பாடசாலையை நடத்த இடங் கொடுத்ததோடமையாது அவர்களைத் தம் பாடசாலைக்குத் தலைமைப் பணிதாங்க இடங் கொடுத்து வேதனமுங் கொடுத்து ஆதரித்தார்கள்.

திரு. அருணசலமவர்கள் போதன பாடசாலைபற்றியே சிந்திக்கும் இயல்பினர். வழி நடையிலும் அதே சிந்தனை. நித்திரையிலும் அதே கனவு. இவைகளாலும் சுமார் 30 ஆண்டுகளாகக் கற்பிக்கும் பணியை ஒழுங்காகச் செய்து வராமையாலுந் தலைமைப் பணியிற் சிறிது தளர்வுடையவராய்க் காணப்பட்டார்கள். * அக்கால வித்தியாதரிசி, மல்லாகத்தைச் சேர்ந்தவர். திரு. கனகசுந்தரம் என்னும் பெயரினர். பாடசாலை வேலைகளைப் பார்வையிடுதற்காக வந்தார்கள். இவரின் பணிகளை அவதானித்துத் தலைமைப் பணிக்கு வேறொருவரைப் போடல் நலம் என்னும் பொருள்பட சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் எழுதிவிட்டார்கள். இதனைத் திரு. அருணசலமவர்களின் உத்தம மாணவர் திரு. சதாசிவப்பிள்ளையவர்கள் பார்த்துவிட்டார்கள். மனேஜர் திரு. கைலாசபிள்ளையவர்களின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்கள். மனேஜர் அவர்கள் காரியாலய அலுவலகத்திலிருந்து கிளம்பாத இயல்பினர். ஆதலின், திரு. கனகசுந்தரம் அவர்களைக் காரியாலயத்துக்கு அழைத்தார்கள். அழைத்து, " திரு. அருணசலமவர்கள் பயிற்சி பெற்றவர்கள், தகுதியானவர்கள் என வித்தியாதிகாரி பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பத்திரம் வழங்கியுள்ளார்களே. அப்படியிருப்ப நீர் எப்படித் திறமையற்றவர் எனச் சொல்லலாம்? யார் சொல்வதை நான் ஏற்பது? அவரைப் பரீட்சிக்குந் தகுதி ஏதும் உமக்குண்டோ? அவரை அளவிட நீர் யார்? எனக் கடிந்துகொண்டார்கள். பரீட்சகர் மௌனியாகினர். பிறிதோர் சமயம் ஆசிரியர்கள் பாடசாலையிற் சமூகமாயில்லை. போதன பாடசாலை

---

* இப்பகுதி திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை மூலம் அறிந்தது.

நிலை குறித்து ஆராய்தற்காய் வித்தியாதிகாரி திரு. இவான்ஸ் அவர்களும் வித்தியாதரிசி திரு. பொன்னையா அவர்களும் வந்தார்கள். போதனு வகுப்பு மாணவர் மூலமே இடவசதிகளைக் கேட்டறிந்தார்கள். திருப்தியாய் இல்லையென மேல் இடத்திற்கு அறிவித்தார்கள். அங்கீகரிக்க இயலாதென அறிவிக்கப்பட்டது. இது நிகழ்ந்தது 1915 இல்.

## கோப்பாய் ஐக்கிய போதனு பாடசாலை

வண்ணார்பண்ணையிற் சைவாசிரிய கலாசாலை நடாத்திக்கொண்டிருக்குங் காலங்களிற் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, தலையாளியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் திரு. சபாபதிப்பிள்ளை, சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணசலம், சேர் கனகசபை முதலிய பெரியார்களின் உதவிகொண்டு வித்தியா பகுதியாரோடு வாதாடி வந்தார். வாதாட்டத்தின் பெறுபேற்றல் அரசியலார் அக்கால வித்தியாதிகாரியை விசாரணை செய்ய அனுப்பினர்கள். அப்போது திரு. அருணசலம், திரு. மு. குமாரவேலு, பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயர் என்போர் சாட்சியம் அளித்தனர். அதன் பயனுக 1916-ம் ஆண்டிற் கத்தோலிக்கர் தவிர்ந்த ஏனைய மூவகைக் கிறீஸ்தவர்களும் சைவர்களுஞ் சேர்ந்து கற்கும் கோப்பாய் ஐக்கிய போதனு பாடசாலையைத் திரு. அருணசலம் பெற்றுக்கொண்டனர். அப்போது அவரின் ஆர்வத்தை நாம் எவ்வெவ் வசனங்களால் எடுத்துச் சொல்ல முடியும். அவர் கனவு நனவாயது.

அக்கலாசாலையிற் பேராசிரியராகத் திருவாளர் இளையதம்பி அவர்களும், கணித பூமிசாஸ்திர சரித்திர விற்பன்னராய்த் திருவாளர் முருகேசு அவர்களும், இலக்கண இலக்கிய விற்பன்னராகப் புலோலி உயர்திரு. வ. குமாரசாமிப் புலவர் அவர்களுங் கற்பித்துவந்தனர்.

அக்கால ஆசிரிய கலாசாலையிற் பயிலும் மாணவனுக்கு வருடமொன்றுக்கு ரூ. 100/- உணவிற்காக அர

சாங்கத்தாற் கொடுக்கப்பட்டு வந்தது. அது போதாமை காரணமாய் மாணவர்களிடம் மாதம் ரூ. 2/- வீதம் பெறப்பட்டது. பேராசிரியர்களுக்குப் பணத்தை அரசாங்கம் கொடுத்து வந்தது. பேராசிரியர் இளையதம்பி இளைப்பாற அவரின் இடத்துக்குத் திருவாளர் தருமரத்தினம் நியமிக்கப்பட்டார்.

சைவப் பிள்ளைகள் வசிக்கச் சைவ விடுதி வேண்டும். அதற்கு அரசாங்கம் கொடுக்கும் பணம் போதியதல்ல. புகுமுகப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களுக்கு உணவும் உறைவிடமுங் கொடுத்தல் வேண்டும். அதற்கு அரசாங்க உதவி கிடையாது. இவற்றை எல்லாம் பெரியார் சிந்தித்தார். சிந்தித்துத் திருவாளர் அ. நாகநாத முதலியார் அவர்களை அடைந்து தம் எண்ணத்தைக் கூறி நிலத்தையுங் கட்டிடத்தையும் இறைமாகப் பெற்றார். சைவ சமயப் பற்றுள்ளவரிடஞ் சென்று பொருள் சேகரிக்க விரும்பினர். அதுவும் அவர் நினைத்தவாறு கைகூடவில்லை. பின்னர் ஒரு பெரியாரை அடைந்தனர். சிவபூசகரும், சிவபக்தரும், பெருவர்த்தகரும், கொடைவள்ளலும், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொட்டடியில் மேல்கீழ் மாடியுமாகிய கட்டிடங்களையுந் தாமும் தமது மனைவி மக்களும் உறைவதற்குரிய இல்லங்களைக் கொண்டவருமாகிய திரு. வை ஆறுமுகம்பிள்ளை ஆவர். அவர் " ஆம் பொருள் நமதேயானல் அறம் பிறர்க்காவ துண்டோ" என்ற பாண்டியன் கூற்றை உணர்ந்தவராகையால் வேண்டிய வேண்டியாங்கு உணவுப் பொருட்களைக் கொடுத்துதவி வந்தார். அது மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் சைவாசிரிய விடுதிக்குக் கிழமைதோறும் வந்து மாணவர்கள் ஒவ்வொருவரையும் உணவு வகையில் எவ்வித குறைபாடுகள் இருக்கின்றனவென்று உருக்கத்தோடு வினவுவார். இவரே ஐக்கிய வியாபாரச் சங்கத்தை யாழ்ப்பாணத்தில் முதன்முதல் ஆரம்பித்தவர். காரைநகர் மக்களுக்கு வியாபாரப் பயிற்சியையுங் காட்டியவர்கள், இவர்களும் வலைந்

தலையைச் சேர்ந்த திரு. ப. க. ஆறுமுகமும் ஆவர். கப்பற் போக்குவரவு வர்த்தகமும் ஆரம்பித்து நடத்தியவர்கள்.

போதன பாடசாலைப் புகுமுகப் பரீட்சைக்குச் சைவ மாணவர் அதிகமாக வந்து சேர்ந்தனர். போதன பாடசாலையோடு சேர்ந்த சாதன பாடசாலையில் இடவசதியின்மையால் சைவ மாணவர்களைக் கற்பிக்க முடியாமற் போய்விட்டது. திரு. அருணாசலமவர்கள் சிந்தித்தார். முடிவுக்கு வந்தார். கோப்பாய் நாவலர் பாடசாலையின் மனேஜராய் இருந்த திரு. சுவாமிநாதனை அண்மித்தார், அவரின் சம்மதம் பெற்று அப்பாடசாலையில் ஐக்கிய போதன பாடசாலையில் 1918-ல் சைவாசிரியராய்ச் சித்தி பெற்ற இடைக்காடு திரு. வீ. கணபதிப்பிள்ளையை ஆசிரியராய் நியமித்துக் கற்பிக்கச் செய்தார். இவரின் பின், அல்வாயைச் சேர்ந்த திரு. ஆ. கணபதிப்பிள்ளை அவர்கள் அப்பணியை மேற்கொண்டார். இவர் 1920-ல், ஐ. போ. பா, யில் கற்றுத் தேறியவர். திரு. வ. பசுபதிப்பிள்ளையின் பின் விடுதி மேற்பார்வையும் இவரிடமாயது. அந்நாளிற் பிரவேச வகுப்பு வைத்து நடாத்திய வேறு சைவப் பாடசாலைகள் ஒன்றுமில. நாவலரால் ஆரம்பமாய பாடசாலையில் உயரிய வகுப்பை இடம்பெறச் செய்த பெருமை திரு. அருணாசலத்துக்கே உரியது.

இவ்வாறு நிகழுங் காலத்தில் ஐக்கிய போதன பாடசாலையில் சைவப் பிள்ளைகளின் தொகை கூடிக் கொண்டு வந்தது. சைவ விடுதியிலும் பிள்ளைகள் தொகை அதிகரித்தது. பாடசாலை விடுதியை நடாத்த விடுதி அதிபர் தேவையாயிருந்தது. அதற்குப் புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அக்கிராமத்துக்குக் கிராம அதிகாரியாய் இருந்தவருமாகிய திரு. வ. பசுபதிப்பிள்ளையை நியமித்தார்.

இவ்வாறு நடந்துகொண்டிருக்குங் காலத்திற் பயிற்சியிற் சித்தி அடைந்த சைவாசிரியர்கள் தொகை கூடிக் கொண்டு வந்தது. சைவப் பாடசாலைகளிற் சைவாசிரி

## 24-ம் பக்கம் 2-ம் வரியின்மேல் அமைத்துக்கொள்க.

இந்நூல் அச்சுவேலை முடியுந் தருணத்தில் கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த ஆசிரியர் திரு. சு. கந்தையா அவர்கள் தமது ஞாபகத்திலிருந்து எழுதிய குறிப்புக்கள்:

(அ) திரு. அருணாசலம் அவர்களாற் கீரிமலையில் தொடங்கப்பட்ட சைவாசிரிய காலாசாலைக் காலந் தொடங்கி, கோப்பாயில் நடந்த ஐக்கிய போதனா சாலைக் காலம் (1918) வரை எனது ஞாபகத்தில் உள்ள விஷயங்களில் அவருக்கு ஊக்கமளித்துப் பொருளுதவி செய்தோரில் மேல்வருவோரும் குறிப்பிடத்தக்கவர்கள்:

1. கொங்கொங் வங்கியில் பிரதம சிறுப்பராக விருந்த திரு. க. நமசிவாயம்பிள்ளை அவர்கள், கீரிமலையில் உள்ள சிறுப்பர் மடம் என்பது இவரால் அமைக்கப்பட்டதே.

2. ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதியாய் இருந்த உவைமன் கதிரவேற்பிள்ளையின் மகனும், பிரபல அரசியல், பொருளாதார நிபுணரும் அக்காலச் சட்டசபை அங்கத்தவருமான கௌரவ. க. பாலசிங்கம் அவர்கள்.

3. இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் சகோதரர் சு. கதிரேசு அவர்கள். (புறொக்றர்)

28-ம் பக்கம் 2-ம் பந்தியாகக் கொண்டு வாசிக்கவும்.

(ஆ) தெல்லிப்பழை போதனு வித்தியாசாலையில் நடந்த சமயமாற்றம் காரணமாக இரவோடிரவாக ஒருவருக்குந் தெரியாமற் புறப்பட்டோரில் ஒருவர் மந்துவில் திரு. சி. கதிரேசபிள்ளை என்பவர். இவர் 1913-ம் ஆண்டு தொடக்கம் திரு. அருணுசலம் அவர்களால் தொடங்கப்பட்ட போதனுசாலைகளில் கீரிமலை முதலாம் இடங்களில் கல்வி கற்று, 1916 — 1918-ம் ஆண்டுகளிற் கோப்பாய் ஐக்கிய போதனுசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றுத் தேறி, 1918-ம் ஆண்டின் இறுதியிலேயே கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றியவர்.

யர்கள் நியமனம் பெற்றுக் கல்வி கற்பித்தனர். கிராமங்கள்தோறும் புதிய பாடசாலைகள் தோன்றின. அதற்கெல்லாம் சைவாசிரியர்கள் வேண்டும் என்று விண்ணப்பங்கள் வந்து குவிந்து கொண்டிருந்தன. இதைக் கண்டு திரு. அருணாசலம் அவர்கள் தன் சிந்தனையின் ஒரு பகுதி நிறைவெய்தியதென்று மனத்திருப்தியடைந்தார்கள்.

இறைவன் செயலை எவர் அறிவார்? திரு. அருணாசல உபாத்தியாயர் சிந்தனை கொண்டார். தான் தனியே நடாத்தமுடியாது, இதற்கோர் சபை வேண்டும் என எண்ணிய அவர், சட்டசபை உறுப்பினர்களையுஞ் சைவத்தில் ஆர்வம் உள்ளவர்களையுஞ் சேர்த்து "இந்து வித்தியா சங்கம்" எனப் பெயரிய ஒரு சபையை அங்குரார்ப்பணம் செய்தார். அதன் தலைவராகத் தலையாளி திரு. சபாபதிப்பிள்ளை அவர்களையும், ஏனைய உறுப்பினர்களையும், சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின் தமயனார் திரு. விசயரத்தினம் அவர்களைச் செயலாளராகவும், தெரிவு செய்தார்கள். சைவாசிரியர் விடுதிச்சாலை செய்த தவப்பயன்போலும், இலக்கண இலக்கியத் தென்றலும், இன்மொழியாளரும், பண்டுதொட்டுப் புலமை வாய்ந்த குடும்பத்திற் தோன்றியவரும், மும்மொழி வல்லுனரும், புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பேரறிஞரும், தமயனருமாகிய திரு. வ. கணபதிப்பிள்ளை அவர்களிடம் முறையாகக் கல்வி கற்ற உயர்திரு. வ. குமாரசாமிப் புலவர் அவர்களை அவ்விடுதி பெற்றது.

அரசாங்கப் பரீட்சைப் பாடங்கள் கற்கும் நேரமல்லாத காலை மாலைகளிலும், சனி ஞாயிறு நாட்களிலும் புலவர் அவர்கள் வகுப்பு நடாத்துவார்கள். புலவர் சமய நூலிலும் இலக்கணத்துறையிலும் கடல் போன்றவர். உமாபதி சிவாச்சாரியாராற் பாடப்பட்ட திருவருட் பயனும், நாவலர் எழுதிய சைவசமய நெறியுரை முதலாய சமய நூல்களும் இடம்பெறும். அவர்கள் இலக்கணப் பிழையின்றியே பேசும் இயல்பினர். மாணவர்களும் அவ்வாறே பேச வேண்டுமென விரும்பிக் கண்டிப்பவர். விடுதிக்

காலை உணவிற்காய சம்பல் உரலிற் துவைக்கப்படும். அதிக மாணவராதலின் அம்மியில் அரைத்தல் இயலாது. காலை உணவிற்காய மணி அடிக்கப்படும். மாணவர் உணவிற்காக விருந்தையில் வந்தமர்வார்கள். புலவர்களும் விருந்தை ஓரமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். உணவு பரிமாறப்படும். மாணவர் ஒருவர் விளையாட்டாக அரையல் கொண்டுவா என்பார். ஏ! பிள்ளாய்! அது உரலிற் துவைக்கப்பட்டது. அம்மியில் அரைக்கப்படவில்லை. ஆதலின் துவையல் என்று சொல் என்பார்கள். இதை ஏன குறிப்பிட்டேன் என்ருல், ஏனைய ஆசிரியர்கள் வகுப்பு மேடையிற் சொல்வார்கள், ஏனைய இடங்களில் அதைச் செயற்படுத்துவதில்லை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துவதில்லை. ஆனல், புலவர் அவர்கள் தம் அறிவை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி வந்தார்கள். பிரசங்கங்களுஞ் செய்தார்கள்.

புலோலி சிறப்புற்றதுபோல் சுன்ஞகமும் ஒளியுடையது. அங்கே ஒரு சர்வகலாசாலை பிரகாசித்தது அப்பிரகாசந்தான் உயர்திரு. அ. குமாரசாமிப் புலவர் அவர்கள். அவர் இலக்கண இலக்கிய அறிவில் மிகவுந் தேர்ச்சியுடையவர்கள். பல நூல்களை ஆக்கியவர். நாவலர் காவிய பாடசாலை மூலம் பல தமிழ்ப் பண்டிதர்களைத் தோற்றுவித்தவர். அப்பண்டிதர்களின் சிகரமாய் விளங்குபவர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் என்பதை யாழ்ப்பாண அறிஞர் உலகிற்கு யான் கூறத் தேவையில்லை. திரு. அருணசலம் அவர்கள் அச்சர்வகலாசாலையைத் தமது போதன பாடசாலை விடுதிச்சாலைக்கு அழைத்து வருவார்கள். வெள்ளி மாலை அல்லது சனி காலை புலோலிப் புலவர் வீடு சென்றுவிடுவார்கள். சுன்ஞகம் புலவர் தமக்கு அவகாசமாய நாட்களில் வருகை தருவார்கள். அக்காலத்திற் பாரதம், இராமாயணம் ஆகிய நூல்களிற் சில சருக்கங்கள் பாடப் பகுதியாய் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். திருக்குறட் பகுதியும் இடம்பெறும்.

கிழக்கிலங்கையிலுள்ள காரைதீவிற் தோன்றியவரும் — யாழ் நூல் தந்த வித்தகரும் — பிற்காலத்தில் "சுவாமி விபுலாநந்தர்" என அழைக்கப்பட்டுத் தவ வாழ்க்கை மேற்கொண்டவரும் — அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பேராசிரியராய் விளங்கியவரும் — "பிரபுத்த பாரதம்" என்னுஞ் சஞ்சிகையை நடாத்தியவரும் — மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக விளங்கியருமாகிய பண்டித மயில்வாகனனர் அவர்களைத் திரு. அருணுசலமவர்கள் அழைத்துத் தம் விடுதிச்சாலை மாணவர்கட்கு அறிவுரை வழங்கச் செய்தார்கள். சுவாமியவர்கள் இடையிடையே விடுதிச்சாலைக்கு வந்து பிரசங்கஞ் செய்து போனர்கள்.

இப்போது அரசியல் பேசப்படுகிறது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் அரசியற் புரட்சி ஏற்பட்டது. வாலிப மகாநாடு மூலம் இந்நய அரசியற் றலைவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து பிரசாரம் நடைபெற்ற காலம். கமலாதேவி சட்டோபாத்தியாயியின் உரை வீருப்பால் அரசாங்கசபைப் பிரவேசம் விடப்பட்டது. அந்நாளில் நடுத்தர வயசினர், நன்ருய் வெற்றிலை மெல்லுமியல்பினர். சட்டமேதை, சிறந்த மேடைப் பேச்சாளர் கையில் வெள்ளிப் பூண்போட்ட கைத்தடியுடையவர், திரு. M. S. இளையதம்பி என்னும் பெயரினர். அரசியல் பேச்சாளர் மாத்திரமல்லர், சமயப் பேச்சாளருங்கூட. வாலிப மகாநாடு இயங்குவதற்குப் 10 ஆண்டுகள் முன்பாக "இந்து வாலிபர் சங்கம்" எனப் பெயரிய சமய ஸ்தாபனம் விளங்கியது. அதன் பிரமுகர்களில் இளையதம்பி ஒருவராய் இருந்தார்கள். பெரிய புராணம் பற்றிக் கிராமங்களிற் பிரசாரஞ் செய்யப்பட்டு வந்தது. இப்போது சேக்கிழார் மன்றம் இதனைச் செய்து வருகிறது. அந்நாளில் இந்து வாலிபர் சங்கம் இதனை நடாத்தியது. அதில் திரு. இளையதம்பி அவர்கள் முக்கிய பணி கொண்டார்கள். திரு. அருணுசலமவர்கள் திரு. இளையதம்பியையும் விட்டாரில்லை. வெள்ளி அல்லது ஞாயிறு மாலை நேரங்களில் திரு. இளையதம்பி

அவர்களைத் திரு. அருணாசலமவர்கள் அழைத்தார்கள். திரு. இளையதம்பி அவர்கள் பிரசாரகராய் மாத்திரம் அமையாது சைவ விடுதிச்சாலைக்கு வேண்டிய சமையற் பாத்திரங்களை (வெண்கலம், பித்தளை) உதவிக் கொடை வள்ளலாயும் விளங்கினர்கள். பெரிய புராண நாயன் மார்கள் பற்றி உரை நிகழ்த்தப்படும். நாயன்மார் சைவ சாதன மணியும், பக்தி மார்க்கமும் விருந்தோம்பும் பண்பும் உடையவர்கள். இவைகளை அறிந்ததனுற்போலும் சைவ விடுதிச்சாலையில் இருந்து வெளியேறிய சைவாசிரியர்கள் நாயன்மார்களின் பண்புகள் உடையவராய்க் காட்சி தருவதை யாம் காணக்கூடியதாய் இருக்கிறது.

1918 ஆம் ஆண்டு இறுதியில் திரு. அருணாசலமவர்கள் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டிருந்தார்கள். கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலையிலிருந்து முதலிற் கற்றுத் தேறிய ஏழு சைவத் தமிழாசிரியர்களை அது முன்னிலைப் படுத்தியதாய் அமைந்திருந்தது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு :-

1. திரு. வீ. கணபதிப்பிள்ளை — அச்சுவேலி
2. திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை — புங்குடுதீவு *
3. திரு. வே. மயில்வாகனம் — நீர்வேலி
4. திரு. அ. அருளம்பலம் — வேலணை
5. திரு. ஏ. சின்னையா — கரவெட்டி *
6. திரு. சு. கந்தையா — மந்துவில் *
7. திரு. வீ. கணபதிப்பிள்ளை — கரவெட்டி

சைவாசிரியர்களை மாத்திரம் ஆக்கிவிடல் அவர் சிந்தையில் இடம் பெறவில்லை. இன்னும் பல திட்டங்கள் அவர்பால் இருந்தன. கிறீஸ்தவப் பெருமக்கள் தம் சமயத்தைப் பரப்புவதற்காக உபதேசிமார், போதகர்மார் வைத்திருப்பதுபோல், சைவ மதத்தாரிடத்திலும் அத்தகைய பிரசாரகர்கள் வேண்டும். அவைகளுக்கேற்ற சிறந்த ஆசிரியர்

* இவர்கள் மூவரும் சீவந்தராய் வாழ்ந்து வருகின்றனர்.

களைத் தெரிந்தெடுத்து இந்தியாவில் உள்ள சமய ஆதீனங்களுக்கு அனுப்பிப் பயிற்சி அளிக்கவும், கீரிமலையிலே ஓர் சைவசமய ஆதீனத்தைத் தாபிக்கவுந் திட்டம் இட்டிருந்தார்கள். பெற்றூர் இன்றி அநாதைகளாய் இருக்குஞ் சிறுர்களைக் கிறீஸ்தவர்கள் அகப்படுத்தி அவர்களுக்கு உணவு, உடை முதலியன உதவிக் கிறீஸ்தவர்களாக்குஞ் செயலைக் கண்டு மனம் வருந்திஞர்கள். அந்நிலை எய்தச் சைவ மக்களிடம் ஒரு ஸ்தாபனம் நிறுவத் திட்டமிட்டிருந்தார்கள். இச்செயலைச் சுமார் 25 ஆண்டுகள் கடந்தபின் அன்னாரின் வாரிசும் அவரின் இலவச ஆங்கில மொழி பெயர்ப்பாளருமாகிய திரு. சு. இராசரத்தினமவர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்க மூலம் செய்து வந்தார்கள். அது இப்போதும் நடைபெற்று வருகிறது. அது சிறப்புற நடைபெறச் செய்தல் சைவப் பெருமக்கள் கடனுகும்.

ஆங்கிலப் புலமை — சட்ட ஞானம் — சட்டசபைப் பிரவேசம், அக்காலக் கல்வியமைச்சர் திரு. C. W. W. கன்னங்கரா அவர்கள் நட்புரிமை என்பன திரு. சு. இராசரத்தினமவர்களின் ஆக்க வேலைகளுக்கு உறுதுணையாயின. 1923 ஆம் ஆண்டில் ஆரம்பமான சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1960 ஆம் ஆண்டுவரை செய்த வேலைகள் அளவிடமுடியாதன. நூற்றுக்கு மேலாய கிராமங்களில் நிறுவப்பட்ட பாடசாலைகள், சைவாசிரிய கலாசாலை, அநாத பாடசாலை என்பன திரு. சு. இராசரத்தினமவர்களின் இடைவிடா முயற்சியின் பலன்களாகும். 1923 ஆம் ஆண்டிலிருந்து பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு வேண்டிய ஆசிரியர்களைப் பெற இயலவில்லை.

கோப்பாயில் 1916 ஆம் ஆண்டு தொடக்கம் திரு. அருணுசலமவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய போதனு பாடசாலை 1920 ல் அன்னுர் சிவபதமடைந்தபின் சிறிதே தளர்வுற்றது. ஊக்கங் கொடுத்து வளர்ப்பார் இலராயினர். அதனுல் அரசியலார் 1923-ல் அதனை மூடி இருபாலைக்குக் கொண்டுவந்து நடாத்தினர். அவர்கள் குறிக்

கப்பட்ட தொகை ஆசிரியர்களையே பயிற்றி வந்தனர். திரு. இராசரத்தினமவர்கள் முயல் வேகத்திற் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்தினர்கள். அவ்வேகத்திற்கேற்ப அர சியலார் ஆசிரியர்களை உதவ முடியவில்லை. அவர்கள் உற்பத்தி ஆமை வேகத்திலிருந்தது. அதனால் திரு. இராசரத்தினமவர்கள் 1928 ஆம் ஆண்டிற் சைவர்களுக் கென ஓர் ஆசிரிய கலாசாலையை ஆரம்பித்து நடாத்தி னர்கள். அருணசலமவர்கள் விதைத்த சைவ வித்தே திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையாகும். திரு. அரு ணசலமவர்களின் ஆசையைத் திரு இராசரத்தினம் அவர் கள் பூரணமாக நிறைவேற்றி வைத்தார்கள். 1960 ஆம் ஆண்டு அரசியலார் பாடசாலைகளைப் பொறுப்பேற்றனர். 1928 — 1960 வரை சைவாசிரிய கலாசாலை குன்றின் மேலிட்ட தீபமெனப் பிரகாசித்தது.

திரு. அருணசலமவர்கள் போதன பாடசாலை மூலம் ஆசிரியர்களை உருவாக்குவதோடமையாது சைவத்தோடு பின்னிப் பிணைந்த தமிழ் அறிவிலும் புலமை படைத்தவர், இந்நாளில் சினிமாப் புத்தகங்கள் படிப்பதுபோல், அந் நாட்களில் நீதி நூல்களை விரும்பிப் படித்தார்கள். நீதி நூல்களிற் சிறந்து விளங்குவது நீதிவெண்பா எனப் பெயரியது. அதற்குச் சிறந்ததோர் உரையெழுதி வெளி யிட்டார்கள் திரு. அருணசலமவர்கள் அவரின் வசன நடைக்கோர் சிறிய உதாரணங் காட்டுகிறேன்.

“இம்மொழியிலுள்ள சிற்சில நூல்களை மாத்திரம் வாசித்து உணர்ந்தவர்களாய ஆங்கிலேய, அமெரிக்க, பிரான்சிய, ஜெர்மனிய, இத்தாலிய வித்துவான்களே இம்மொழியின் சிறப்பினை எடுத்துக் கூறி வியந்து பாராட் டிக் கூறியிருக்கிருர்களென்னில் யாம் அதன் விசேடத்தை விபரித்தற்கவசியமுளதோ” என்று கூறியுள்ளார்கள்.

திரு. அருணசலமவர்கள் பாடசாலைச் சிறுவர்களுக் காய மேலும் சில நீதி நூல்களுக்கும் உரையெழுதி அவை களை அச்சிட்டு மாணவர்களுக்கு உதவ நினைத்திருந்தார்

கள். ஐயையோ! காலன் இதனை உணர்வானோ? இயமனைத் தருமராசன் என்கிறார்கள். அவன் நல்லோர் தீயோர் வேறுபாடறியாதவன். அறியும் பெற்றியிருப்பின் நல்லோர் உயிர் கவர்வானா? இல்லையே.

திரு. அருணாசலமவர்கள் ஊரெல்லாம் அலைந்தார். வறிய மாணவரைத் தேடிப் பிடித்தார். ஊண், உடை, புத்தகங்கள் உதவினார். பணம் சம்பாதிக்க வழிகாட்டியாக இருந்தார். சைவாசிரியர்களை உற்பத்தி செய்து சைவம் வளர வகை செய்தார். தம் மனைவி மக்களை நினைந்தாரில்லை. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பார்கள். அதற்கொப்பத் திரு. அருணாசலமவர்கள் ஊரார் பிள்ளைகளை வளர்த்தார்கள். அவர் பிள்ளைகள் அநாதைகளாய்த் தாமே வளர்ந்தார்கள். பிறர் பிள்ளைகளை வளர்த்தது காரணமாய் அவர் ஆஸ்திகள் கடனில் மூழ்கின. 1920-ல் அவர் சிவபதமடைந்தபோது ரூ. 50,000/- பெறுமதியான ஆதனங்கள் விலை போயின. இப்போது அவை இருப்பின் ஒரு லட்சம் பெறுமதியாகலாம்.

## புகழ் விரும்பாதவர்

இந்நாளிற் பல செயல்கள் செய்யப்படுகின்றன. அவற்றைச் செய்வோர் அல்லது செய்விப்போர் பொது நலங் கருதிச் செய்வதில்லை. தம் பெயருக்கும் புகழுக்குமாகவே செய்கிறார்கள். திரு. அருணாசலமவர்கள் இச் செயலுக்கு நேர்விரோதமானவர்கள். அவர்கள் புகழுக்காகத் தொண்டு செய்யவில்லை. சைவத் தொண்டும், தமிழ்த் தொண்டுமே அவருயிர். அதற்காக 30 ஆண்டுகள் தமது ஆசிரியத் தொழிலை ஒழுங்காகச் செய்யாதும், தமது பெற்றார் வழிவந்த, மனைவியாற் கொண்டுவரப்பட்ட ஆஸ்திகளைத் தமது பிள்ளைகளுக்கு விட்டுவைக்காது செலவு செய்தும், இன்னல்களையும் அநுபவித்து வெற்றியுங் கண்டார், சைவப் பெரியார்கள், நண்பர்கள், அவரின் கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை மாண

வர்கள் அவரின் நிழற் படமெடுக்க விரும்பினுர்கள். அவர் அதற்கு உடன்பட்டாரில்லை.

1928 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையிலிருந்து வெளியேறிய சைவாசிரியர்கள் தரு. அருணுசலத்தின் பெயரையும், அவரின் தொண்டின் சில பகுதிகளையும் கேள்விப் பட்டிருப்பார்கள். அதனை நினைவுகூரச் செய்தவர்கள் அக் கலாசாலைப் பேராசிரியரும் பண்டிதமணியுமாகிய திரு. சி. கணபதிப்பிள்ளையவர்கள். அவருக்குச் சைவ உலகம் கடமைப்பட்டுள்ளது. காரை நகரில் பிரம்மஸ்ரீ. கா. வேதக் குட்டி ஐயரவர்களும், திரு. மு குமாரவேலு அவர்களும் இவரின் சிறந்த நண்பர்கள். இவர்களுள் திரு. மு. குமாரவேலு மகனுர் சுப்பிரவணியமவர்கள் அருணுசலம் மாட்டுப் பேரன்புடையவர்கள். தம் அன்புக் கறிகுறியாய் 1951 ஆம் ஆண்டில் "அருணுசல நூல் நிலையம்" எனப் பெயரிய நூல் நிலையமொன்று அரிதின் முயன்று அமைத்தார்கள். பொதுமக்களாதரவு அதற்குக் கிட்டவில்லை. திரு. அருணுசலமவர்கள் தோற்றுவித்த கோப்பாய் ஐக்கிய போதன பாடசாலையிலும் அதன் தொடர்பாய கோப்பாய், திருநெல்வேலி ஆசிரிய கலாசலைகளிலும் கற்றுத் தேறிய பலர் சைவாசிரியர்களாய் மாத்திரமல்லாது, பண்டிதர்களாய், வித்துவான்களாய், சைவப் பிரசாரகர்களாய் இலங்கையின் பல பாகங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்கள். இவர்களே திரு. அருணுசலமவர்களின் நினைவுச் சின்னங்களாகும்.

கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனுர் பாரத நாட்டின் மீது பற்றுக்கொண்டமைக்காக அவர் அடைந்த பரிசு வறுமையும் பிணியுமாம். உண்மைத் தேசபக்தருக்கு வேறு என்ன கிடைக்கும்? இதையறிந்தே பாரதியார் பின்வருவாறு பாடினுர்.

"பஞ்சமும் நோயும் நின்மெய்யடி யார்க்கோ?"

இக்கூற்றுக்குத் திரு. அருணுசல உபாத்தியாயர் விதிவிலக்காக இருக்கவில்லை.

திரு. அருணாசல உபாத்தியாயரவர்கள் கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் தோன்ற மூலகர்த்தாவாக இருந்தபடியாலும், தூண்டுகோலாக அமைந்தபடியாலும், வழிகாட்டியாக விளங்கியபடியாலும், கிறீஸ்தவ குருமாரின் ஞானஸ்நானம் என்ற தடையை உடைத்தெறிந்தபடியாலும், சைவர்களுக்குச் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை தாபிக்க அரும்பாடுபட்டு இறுதியில் கோப்பாய் ஐக்கிய போதன பாடசாலை அமைத்து அதன் மூலம் சைவாசிரியர்களை உற்பத்தி செய்தபடியாலும் அவர் தமது வாழ்க்கையினிறுதியில் அடைந்த பரிசு அன்னாரின் உடைமைகள் யாவும் ஈடுகள் ஒற்றிகள் வைக்கப்பட்டு மீட்டுக்கொள்ள முடியாத நிலையில் விலைப்பட்டன என்பதே. இதனாலே அன்னாரின் சிறார்கள் பிற்காலத்தில் பல இன்னல்கள்பட்டு நல்குரவெய்தினர். ஆனால், சைவாசிரியர்களும் சைவ மக்களும் அன்னாரின் பொதுநலப் பணியைப் போற்றவும் நினைவு கூரவுந் தவறிவிட்டனர். அருணாசல உபாத்தியாயர் இன்னோர் மதத்தவருளொருவராய் உதித்திருந்தால் அவருக்கு அம்மதத்தவர்கள் மணி மண்டபமும் நினைவுச் சின்னமும் எழுப்பியிருப்பார்கள்.

## இறுதி யாத்திரை

திரு. அருணாசல உபாத்தியார் செய்ய வேண்டிய நற்பணிகள் எவ்வளவோ இருந்தன. அவர் சிந்தனைகள் முற்றுப்பெறவில்லை. அவ்வாறிருக்க இப்பிறப்பில் நீ செய்ய வேண்டிய கருமங்கள் இவ்வளவுதான் என வரையறுப்பான் போல, சைவ உலகமெலாம் ஐயகோ! இவருக்கும் இப்படியான முடிவோவென்று பரிதபிக்க சுப்பிரமணிய வித்தியாசாலைக்குத் தெற்கேயுள்ள அவரது "குமிழங்குளி" த் (தற்போது அருணாசல உபாத்தியாயர் வீதி) தெருவில் உள்ள இல்லத்திலே சித்தார்த்தி வருடம் தை மீ 3-ந் திகதி (17-1-1920) வெள்ளிக்கிழமை இரவு ஏகாதசித் திதியிலே அவர் ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய குஞ்சிதபாத நிழலையடைந்தார்.

## அநுபந்தம் I

சைவத்தி லாசிரியப் பயிற்சிபெறத்
தனித்த தொரு சாலையில்லை
பைவைத்த பாம்பனையார் சாலைகளிற்
பயின்றவர் தாம்பாழுங் கொள்கைப்
பொய்வைத்தே யொழுகுதலா லவர்பயிற்றும்
பிள்ளைகளும் புன்மை கூர்வர்
மைவைத்த கண்டவருள் வாயென்று
சைவரெலாம் வணங்கு நாளில்.

காரைநகர் மடந்தைதவம் வாய்த்ததென
வந்தானோர் கரும வீரன்
சீருடையான் பெயரருணு சலனென்பான்
தேசிகனுய்த் தேற வேண்டி
வேரறுப்பார் கழகமதிற் புகுந்திரண்டு
வற்சரங்கள் மேவிக் கற்று
நேர்மூன்றி லாசானுய் வருங்காலம்
நெடுந்தகைக்கு நெருங்கிக் கொள்ள.

அம்மூன்றின் ருெடக்கத்தி லவர்குரவ
ரஞ்ஞான மகலத் தண்ணீர்
செம்மையெலா நீக்குபவர் போற்றெளித்து
மதமாற்றஞ் செய்து கொள்வர்
அம்மம்ம வதற்கஞ்சி நள்ளிரவி
லப்பள்ளி யகன்று போந்தான்
வெம்மையமண் பள்ளிநின்றுஞ் சொல்வேந்தர்
வெளிப்பட்ட விதமே போன்று.

போந்தவனுஞ் சைவத்திற் பித்தேறித்
தன்னெறியிற் பொன்ருப் பற்று
வாய்ந்ததிருக் கைலாய பிள்ளைமுதல்
வல்லாரை மேவிப் பட்ட

தாய்ந்துரைத்து வேண்டுதிறஞ் சூழ்ந்தவர்தம்
மறிவுரைக ளாரக் கொண்டே
ஏய்ந்தமுப்பா னாண்டுகளு மிடையருது
பெருமுயற்சி யெடுத்து ழைத்தான்.

அத்தகையா னடியிட்ட வருமுயற்சிப்
பெரும்வித்தே யவன்றன் னாளில்
இத்தரையிற் சைவத்தரு வாய்வளர்ந்து
சிவங்கமழு மெண்ணில் பள்ளிச்
சித்திரமாத் துணர்மலர்கள் மிகப்பொதுளித்
தேசிகர்கள் சாலை யென்னும்
எத்திசையா ரெல்லார்க்கும் பயனளிக்கு
மின்கனிக ளேந்திற் றம்மா.

அன்னவரின் நெறிப்பற்றை யெழுச்சிகளை
முன்னுணர்வை யயரா வூக்கை
உன்னித்தன் வயமிழந்து திருவருளின்
குறிப்பென்றே யுள்ளங் கொண்டு
பொன்னனைய பெருந்தொண்டிற் புகுந்துழைத்தான்
சைவர்புரி புண்ணி யத்தின்
மன்னுபய னய்வந்தா னரசமணிப்
பெயராளன் மதியின் மிக்கான்.

சைவர்களி னுதரவும் பெருநிதியு
மரசினர்தஞ் சார்புங் கொண்டு
மைவளருங் கண்டத்தான் சமயநெறி
வளர்ந்தோங்க மாசில் பள்ளி
மெய்வகையிற் பன்னூறு நிறுவினனல்
நாடெங்கு மெய்மை யுள்ளச்
சைவனரு ளுசலற்குச் சிலையாகித்
தமிழ்போலத் தழைத்து வாழி.

(ஈழத்துச் சிதம்பரபுராணத்திலிருந்து எடுக்கப்பட்டது. பாடியவர்:- நவாலியூர் பண்டிதமணி திரு. சோ. இளமுருகனுர் அவர்கள்.)

## அநுபந்தம் II

நாவலர் மறைந்தது 1879 இறுதியில். 1880 க்குப் பின் தெல்லிப்பளையில் கிறீஸ்த ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை ஒன்று தோன்றியது. ஆங்கிலம் படிக்கப் பணமில்லாத வறிய மீன்களங்கே யகப்பட்டன. ஒரு மீன் ஞானஸ்நானத் திட்சைக்கு அகப்படாமல் நீண்டகாலந் தப்பிக்கொண்டிருந்தது. 1885 ல் ஆசிரிய பயிற்சிப் பத்திரம் பெறுங்காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. "இதோ பிடி ஞானஸ்நானம்! ஓ! அஞ்ஞானியே!" என்ற நெருக்க மிகுந்தது.

1885 ல் ஒரு நாள் இரவு அந்த அஞ்ஞான மீனுக்கு நித்திரை வரவில்லை. கோழி கூவும் நேரத்தில் அந்த அஞ்ஞான மீனின் உள்ளத்தில் ஒரு சேவல் கூவினது. அந்தச் சேவல் 'சேவலும் மயிலும்' என்ற இடத்தில் வரும் சேவலுக்கினமான சேவல்போலும்! அந்த ஞானமீன் துடிதுடித்துத் துள்ளியெழுந்தது. வலையைப் பீறிட்டுக் கொண்டு மதிலைக் கடந்து விடிகிற சமயம் தெல்லிப்பளைத் தெருவிற் குதித்தது. அது காரைதீவு மீன். "அருணசலம்" என்பது அந்த மீனின் திவ்விய திருநாமம்.

அருணசலத்துக்கு, திருநீறு பூசுகிறவர்களும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக வேண்டுமென்ற பைத்தியம் உண்டானது. முப்பது வருடம் ஊண், உறக்கம் செவ்வனேயின்றித் தெருத் தெருவாயலைந்தாரந்த மகான் அருணசலம். ஒரு முறை கால் நடையிற் கொழும்புக்குப் போய்ச் சேர். அருணசலத்தைக் கண்டவர் காரைதீவு அருணசலம் என்ற கதையுமுண்டு. இனிக் கதையைச் சுருக்குவோம்.

1918 தொடக்கம் 1922 வரை வெளிவந்த இலங்கையிலுள்ள திருநீறு பூசுகிற பயிற்சி பெற்ற ஆசிரியர்களனைவரும் அருணசலம் பொரித்த குஞ்சுகளே யாவர்.

(10-4-70 ல் வெளிவந்த இந்துசாதனத்திற் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

## அநுபந்தம் III

அருணாசல உபாத்தியாயர் :— *1864 — 1920.* ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சுயமொழிக் கல்வி இலவசமாகக் கற்பிக்கப்பட்டது. ஆங்கிலம் சம்பளக் காசு பெற்றுப் படிப்பிக்கப்பட்டது. இப்பொழுது எந்த மொழிக் கல்வியும் இலவசம். இவையெல்லாம் அரசாங்கஞ் செய்த நன்மைகள். ஆனால், இதற்கப்பால் உண்டி உறையுள் வழங்கிக் கல்வி கற்பித்த பெரியார்கள் இருவர் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்தார்கள். ஒருவர் நாவலர் பெருமானின் தமையனார் தம்புவின் மகன் கைலாசபிள்ளை. மற்றையவர் அருணாசல உபாத்தியாயர்.

கைலாசபிள்ளை காவிய பாடசாலை நடாத்த நினைத்தார். பாடசாலை நடாத்த மாணாக்கர் தேவை. மாணாக்கருக்கும் வேட்டையாட வேண்டியதாயிற்று. பெருமக்கள் பலர்மூலம் சிலர் சேர்ந்தனர். உணவுச் செலவுக்காக மாதம் ரூபா 6.00 கைலாசபிள்ளை அவர்களாற் தமது சொந்தப் பணத்திலிருந்து கொடுக்கப்படும். பாடசாலையில் வாசம். வில்லூன்றியில் மலசல விடுதலை. இந்தக் காவிய பாடசாலையிற் படித்த மூவர் இன்றுமிருக்கின்றனர். உண்மை பொய் கேட்டுப் பார்க்கலாம். ஆனால், இன்று ?...

இதே மனப்பான்மையிற் சைவ ஆசிரியர்களை உணவு. உண்டி கொடுத்து உருவாக்க வேண்டுமென்ற பெருமை மிக்க எண்ணங் கொண்டவர், அருணாசல உபாத்தியாயர். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தெல்லிப்பளை அமெரிக்க மிஷியோன் பாடசாலையில் ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். ஆனால், மதம் மாற மறுத்தனர். ஆகவே, பயிற்சிக் காலத்தைப் பூரணமாக முடிக்கவில்லை.

கைலாசபிள்ளைக்கோ பூர்வீக சொத்தும் உத்தியோகமும்; இவருக்கோ பூர்வீக சொத்துக் கொஞ்சம். அவற்றையும் விற்றுச் சைவாசிரியர்களை உருவாக்க வேண்டுமென்று யாழ்ப்பாணமுங் கொழும்பும் அலைந்தவர். விடியு

முன்னரே கைலாசபிள்ளை வாசலில் அவர் கதவு திறக்கும் வரை குந்தியிருப்பர். இவரின் தொண்டு பேருக்கும் புகழுக்குமல்ல. இவருக்கு ஊரும் சதமல்ல. பேரும் சதமல்ல. சமய வாழ்க்கையே இவரின் சிந்தனை, நினைவு, எண்ணம், கவலையெல்லாம்.

சிற்றம்பலம் சங்கரப்பிள்ளையின் அருந்தவப் புதல்வர். பத்தினியம்மாள் தாய். சைவ வேளாண் மரபினர். பெற்றோர் பெருநிலக்கிழாரென மதிக்கப்பட்டவர்கள்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்வி எல்லாம் அமெரிக்க மிஷியோன் பாடசாலைகளிற் கற்றாராயினும், மதம் மாருதவர். சைவ சமய பாடசாலைகளை உருவாக்குவதிற் பெரிதும் உழைத்தவர்.

சயம்புச் சட்டம்பியாரின் ஆங்கிலப் பாடசாலை, சுப்பிரமணிய வித்தியாசாலை, வியாவில் சைவ பரிபாலன பாடசாலை இவற்றின் தோற்றத்துக்கு உறுதுணையாக இருந்தவர். 1889 ல் சுப்பிரமணிய வித்தியாசாலை உதயமாயிற்று. இதே காலங்களில் திரு. சயம்புச் சட்டம்பியாரின் விடாப்பிடியால் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஆங்கில வித்தியாசாலை ஆரம்பமாயிற்று. திரு. கா. வேதக்குட்டி ஐயரின் சகாயத்தினுல் வியாவிற் சைவபரிபாலன பாடசாலை ஆரம்பமாயிற்று. மேற்கூறிய இரு தமிழ்ப் பாடசாலைகளிலும் வேதனமின்றிப் படிப்பித்தார், அருணசல உபாத்தியாயர். 1914 ஆம், 1915 ஆம் ஆண்டுகளில் வண்ணை நாவலர் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் பணிபூண்டவர்.

இவ்வாருகச் சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்த இவர் நாவலருக்கு அடுக்க வைத்துப் போற்றப் படக்கூடியவரென்று திரு. த. கைலாசபிள்ளையவர்கள் கூறியுள்ளார். இவரின் சிறந்த சேவையினைத் தொடர்ந்து செய்தவர் யாழ்ப்பாணம் இராசரத்தினம் ஆவார்.

அருணசல உபாத்தியாரின் அருஞ்சேவைக்கு ஆதாரமாக ஆக்கமும் ஊக்கமுமளித்தார் வள்ளலார்

திரு. வை. ஆறுமுகம் அவர்கள். திரு. மு. குமாரவேலு, பிரம்மஸ்ரீ கா. சிவசிதம்பர ஐயர், பிரம்மஸ்ரீ கா. வேதக் குட்டி ஐயர் இவர்களும் பக்கபலமாக இருந்தனர்.

கிறீஸ்தவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப எங்ஙனம் துடித்து நின்றார்களோ, அங்ஙனம் இவரும் சைவ சமயத்தைப் பரப்புவதிற் தன்னந்தனியாகப் போதிய பொருள் வருவாயின்றித் துடியாய்த் துடித்தனர்.

உற்றாரை வேண்டேன்; உறவினரை வேண்டேன் என்ற பான்மையிற் றிரிந்த இவருக்கும் புத்திரர் மூவர். ஒருவர் இளம் வயதிலேயே இறந்துவிட்டார். சிவப்பிரகாசம், சிதபாதம் என்பவர்கள் மற்றும் இரு புத்திரர்கள். இருவரும் ஆசிரியர்களே. சிவப்பிரகாசம் பயிற்றப்படாத ஆசிரியர். சிவபாதம் பயிற்றப்பட்ட ஆசிரியர். இன்று இளைப்பாறிப் பொதுச் சேவையிலீடுபட்டு உழைத்து வருகின்றனர்.

(காரைநகர் மான்மியம்:— வித்துவான் F. X. C. நடராசா.)

---

## அநுபந்தம் IV

1918 ஆம் ஆண்டு தொடக்கம் 1922 ஆம் ஆண்டு வரை திருநீறு பூசிக்கொண்டு தமிழ் உபாத்தியாயரென்று வந்தவர்கள் அனைவரும் காரைதீவு அருணாசலம் என்ற மகான் நிழலில் வளர்ந்த அநாதர்களேயாவர். காரைதீவிலுள்ள பாரிய வர்த்தகராயிருந்த ஆறுமுகம்பிள்ளை என்ற வள்ளல் திரு. அருணாசலம் விரும்பியவாறு அநாதர்களுக்கு அள்ளியள்ளி வழங்கினார்.

(6-4-70 ல் வெளிவந்த ஈழநாட்டில், பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

## Upathiyar S. Arunachalam
### Karainagar

Sri T. Kailasapillai, a nephew of Srila Sri Arumuga Navalar Adikal and a Tamil Scholar and the first Editor of the Inthu Sathanam (Hindu Organ) and the Manager of the Saiva Pragasa Vidyasalai, Jaffna had, once, stated that after Navalar there was one man who could contribute most to the awakening of Saiva religion and Tamil learning. That man was Sri Upathiyar S. Arunachalam of the Island of Karainagar.

Born at Karainagar in 1864. Sri Arunachalam belonged to a well-to-do family of village landed proprietors. He was the son of Sri Sangarapillai, a well respected pious Saivaite. Sri Arunachalam married Srimathi Nagamuthu daughter of Kanapathipillai, who inherited a big dowry being the only daughter to her parents. Sri and Srimathi Arunachalam had three sons.

On the successful completion of his education at the local schools in Karainagar, young Arunachalam was selected for a course at the Teachers Training School, managed by the American Mission at Tellippalai. At this school as he was a bright student, Arunachalam passed creditably the examination for promotion to the final year class of the training course. But there was a snag. No student other than a Christian or a new convert to Christianity was permitted to the final year. This was the un-written law of this institution. Therefore, two courses were open to young Arunachalam — Either to become a convert to Christianity or to leave the school. He, a Saivite of integrity and uprightness chose the latter, revolting against the unfair policy of the school management.

The students who left this school on the completion of the training course, and who were supposed to be Christians, became normally, the head masters of the primary Tamil Schools in the country. As such, the teachers trained at this school had a good opportunity to propagate Christianity among the children they were teaching and in a way the training school occupied the key position among the mission establishments for spreading Christian religion among the school children.

From that day on which Sri Arunachalam had left the Training School the one idea he fostered was to work for the establishment of a teachers training school in which Saivite students could pursue their studies without any interference to their religious faith.

For thirty years Arunachalam worked with single minded assiduity on this project. He spent his own wealth and devoted all his time for this work. In order to gain public support Sri Arunachalam went from Province to Province, from District to District, from Town to Town and from Village to Village and visited leading men explaining to them the great significance of his object. He had, by nature, an inexhaustible energy. Sri Kailasapillai said that whenever there was a knock at the door of his house in Vannarponnai at 5-00 O'clock in the morning, he was sure, it was Sri Arunachalam who had come to see him. Sri Arunachalam consulted Sri Kailasapillai very often on the success of movement at different stages. There was not a Hindu leader, in Ceylon, whom Sri Arunachalam did not approach. He even saw Sir P. Ramanathan at Colombo.

Through his untiring efforts Sri Arunachalam succeeded in persuading the Government to establish a teacher's training institution where both the Hindu and

Christian students could have their training without any interference to their respective religious faith. In 1915 the United Training School had at last been established at Kopay. The Government made it clear that the school was to be managed jointly by both the Hindus and the Christians. The Hindu and the Protestant Christians accepted the Government's offer, but Catholics preferred to be aloof.

Representing the Hindus, Sri Arunachalam was selected to look after the Hindu section of this school. The great difficulty he found was in getting sufficient number of students for the Hindu section. There was an entrance examination for the admission of students to the new school. Only the students who passed the 6th or 7th standard in a Tamil school could at that time get through the entrance examination.

In those days the education given at the primary Tamil schools in the villages was up to 5th standard. Most of the schools were managed by the American Mission. In the Jaffna Peninsula there were then two Hindu Schools, one at Vannarponnai and the other at Kopay, where the education given was up to 7th Standard. The other schools giving education up to 7th standard in Tamil were managed by the Christian Mission. The Hindu children who were studying at the Christian schools were not, perhaps due to their teachers' influence, inclined to join the Hindu section of the new training school. The two Hindu schools had not sufficient students for enrolment in the Hindu section.

Sri Arunachalam went up even to Batticaloa recruiting suitable students to fill up the places at the Hindu section of school. In order to attract the students

to the Hindu section Sri Arunachalam promised free board and hostel accomodation and free books. He was prepared to supply even clothing free. The merchant prince and the well known philonthrophist of that time Sri Vyramuthu Arumugam of Karainagar came forward to meet all the expenses for the free supply of food, books, clothing etc., till such time when new students who could afford to meet their own expenses were enrolled for the succeeding years.

With the successful launching of the Hindu section, Sri Arunachalam became a very happy man, having fulfilled his own ambition — the establishment of a training school for the study of Hindu children — without any sort of interference to their religious faith. The Training School at Kopay has now greatly expanded and at present there are two separate institutions for the training of men and women for the noble profession of teaching. The Teachers Training Schools at Kopay have been sending out hundreds of trained teachers to man the various Tamil schools in the country.

**K. Arumugam**
Retired Office Assistant of
Survey Department,
Penang.

## என் தந்தையார்

காரைநகரைச் சேர்ந்த உயர்திரு. சங்கரப்பிள்ளை அருணுசலம் அவர்கள் என் தந்தையார் என்று சொல்வதில் யான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் வரலாறு நூல் வடிவில் வர வேண்டும். யாவரும் தெரிந்திருத்தல் வேண்டுமெனல் எனது நீண்டநாட் கனவு. அதனை நிறைவாக்கும் ஆற்றல் என்பாலில்லை. எவ்வாறேனும் முயன்று உருவாக்க வேண்டுமென என் தமையனுர் புதல்வர் திரு. சிவானந்தரத்தினம் உற்சாகப்படுத்தினுர் 1969 ல். யான் எழுதல் மிகையாகுமெனக் கருதினேன். உலகோரும் விரும்பமாட்டார்கள். அதனுல் அவர்மாட்டுப் பேரபிமானமுடைய அல்வாய் வாசர் திரு. சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களிடம் கூறினேன். சுமார் 40 யாண்டுகட்கு முன்பாகவே இக்கருத்துடையவராயிருந்தார்கள். ஆயினும், கால் கொண்டிலது. இறையருள் இப்போது கால்கொளச் செய்துளது.

ஆசிரியர் அவர்கள் என் கருத்துக்களையும் கட்டுரை வடிவில் உதவுமாறு கேட்டார்கள். சிறிதே தயங்கினேன். பயப்படாது எழுதுமாறு பணித்தார்கள். ஒருவாறு கருத்திற் கொண்டேன். எல்லோருஞ் சொல்வதையே யானும் எழுதினுல், அதிற் கருத்திலதாய்விடும். எனது கருத்துக்கள் புறம்போக்கானவை. அவை எழுதப்படின் சொல்லம்புகள் என்னைத் தாக்கலாமென நினைத்தேன். இதனை மட்டுவிலைச் சேர்ந்த பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களிடந் தெரிவித்தேன். யோசிக்காது எழுதலாமென உற்சாகப்படுத்தினுர்கள். இவர்கள் 1930 ல் திரு. அருணுசல உபாத்தியார் வரலாறு புத்தக வடிவில் வெளியாக வெண்டுமென என்னிடங் கூறியிருந்தார்கள். அது இப்போது நனவாகியுளது.

என் தந்தையார் 31-10-1864 ல் திருவவதாரஞ் செய்தார்கள். 17-1-1920 ல் இறையடி சேர்ந்தார்கள். அப்

போது எனக்கு வயது 10 (பத்து), அதனுல் அவர் வாழ்க்கையை நேராயறியும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆண்டுகள் பத்துக் கடந்தபின் பயிற்சி பெற்ற ஆசிரியனுய் வெளியேறினேன். இப்பத்து ஆண்டுகளிலும் யான் அடைந்த இன்னல்கள் பல. உடல் நலக்குறைவு பிறிதோர்பால். கற்பிக்கும் பணியிற் பல இடங்களுக்குஞ் செலவேண்டிய நிலை ஏற்பட்டது. சென்ற இடங்களிலுந் தந்தையர் பற்றிக் கேள்விப்படும் வாய்ப்புக் கிட்டியது. 1925 ஆம் ஆண்டு வரை இவ்வரலாறு எழுதப்பட்டிருப்பின் மிகச் சுவையாய சம்பவங்களை விரிவாக எழுதியிருக்கலாம். காரணம் அவரையறிந்த பெரியார்கள் பலர் அக்காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். 1879 ல் மறைந்த நாவலரை 90 யாண்டுகள் கடந்து 1969 ல் நினைவு கூர்ந்தார்கள். 1920 ல் மறைந்த உபாத்தியாயரை 50 யாண்டுகள் கடந்து 1970 ல் நினைவு கூர்தலிற் றவறில்லை என்பது கருத்து.

1864 ல் தோற்றினர் திரு. அருணசல உபாத்தியாயர். அவர் பெற்ருேர் சுத்த சைவர்கள். சைவப் பெற்ருேரின் பிள்ளை கிறீஸ்தவப் பள்ளி புக்கு 1882 ல் பயிற்சி பெற்ற ஆசிரியனுய் வெளியேறினர். ஆனுல், ஞானஸ்நானம் பெற்ருரில்லை. கிறீஸ்தவப் பெயருந் தாங்கினுரில்லை அக்காலம் ஞானஸ்நானம் பெற்றுக் கிறீஸ்தவப் பெயர் தாங்கியோரே உபாத்தியாயர்களாய் வரலாமென்பது மரபு. அவ்வாருகாது வந்தமையின் திரு. அருணசலம் சுத்த வீரன் என்பது புலப்படுகிறதல்லவா? இவ்வீரச் செயலுக்குத் துணை புரிந்தவர் அக்காலச் சட்டசபை மேதை சேர் அம்பலவாணர் கனகசபையவர்கள் என்பது துணிபாம். இக்கதையை சேர் கனகசபையவர்களே என்னிடங் கூறினுர்கள். தமிழ் நாட்டில் 8 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த மருணீக்கியார் சமண் பள்ளி புக்குத் தருமசேனரெனும் பெயர் பெற்றுத் திலகவதியார் உதவியால் இறையருள் கூட்டத் திருநாவுக்கரசரெனப் பெயர் பெற்றுச் சமய குரவர் நால்வருளொருவரெனப் பெருமை பெற்றதைச் சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர் புராணத்திற்

பலபடப் பாராட்டியுள்ளார்கள். திரு. அருணுசலமவர்களை ஈழத்துச் சிதம்பர புராணத்தில் 'கரும வீரன்' என அந் நூலாசிரியர்:- நவாலியூர்ப் பண்டித புலவர்மணி உயர்திரு. சோ. இளமுருகனுர் அவர்கள் பாராட்டியுள் ளார்கள். அவருக்கு என் மனமார்ந்த நன்றி கூறும் கடப்பாடு பெரிதுமுடையேன்.

வாகீசர் ஊழ்வினையாற் சமணஞ் சேர்ந்தார். சகோ தரியார் வழிபாட்டினுல் இறைவன் அருள் நோக்கஞ் செய்தார். அதனுல் வாகீசர் மீட்டுஞ் சைவரானுர். திரு. அருணுசலம் சைவப் பாடசாலை இன்மையால் கிறீஸ்தவப் பள்ளி புகுந்தார். கிறீஸ்தவர் ஆனுரில்லை. தாமாகவே வெளியேறினுர். இதனை,

"அம்மூன்றின் ரெருடக்கத்தி லவர்குரவ
 ரஞ்ஞான மகலத் தண்ணீர்
செம்மையெலா நீக்குபவர் போற்றெளித்து
 மதமாற்றஞ் செய்து கொள்வர்
அம்மம்ம வதற்கஞ்சி நள்ளிரவி
 லப்பள்ளி யகன்று போந்தான்
வெம்மையமண் பள்ளிநின்றுஞ் சொல்வேந்தர்
 வெளிப்பட்ட விதமே போன்று"

என ஈழத்துச் சிதம்பர புராணம் கூறுதல் காண்க.

யானுேர் சைவன். அப்படியிருப்பக் கிறீஸ்தவப் பள்ளி யில் யானேன் கற்றல் வேண்டுமெனச் சிந்தித்தார். கற் றற்கேற்ற சைவப் பள்ளியில்லை யென்பதை யுணர்ந்தார். அக்காலத்தில் நாவலர் நான்கு சைவப் பாடசாலைகளை ஆரம்பித்திருந்தார்கள். அவற்றுள் ஒன்று சிதம்பரத்தில். ஏனைய மூன்றும் யாழ்ப்பாணத்தில். புலோலியிலுள்ளது மறைந்துவிட்டது. கோப்பாயிலும் வண்ணுர்பண்ணையி லும் உள்ளவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவை இரண்டும் அக்கால ஆரம்ப பாடசாலைகள். இப் போது மகா வித்தியாலயங்கள். ஆசிரிய போதனு பாட சாலைகளல்ல. எனவே, சைவாசிரியர்களைத் தோற்றுவிக்

கும் பாடசாலையொன்றை ஆரம்பிக்கத் திடங்கொண்டார். 1882ல் கருத்தூன்றினர். 1916 ல் வெற்றி கொண்டார். 35 யாண்டுகளில் அவர் செய்த செயல்கள் எழுத்திலடங்காதன. சைவர்களுக்கெனத் தனிமையாகக் கலாசாலை பெருதபோதும் கத்தோலிக்கர் தவிர்ந்த கிறீஸ்தவர்களோடு சேர்ந்து சைவாசிரியர்களைப் பெறும் கோப்பாய் ஐக்கிய போதனு பாடசாலையைத் தம் உயிருள்ளபோதே பெற்றுக் கொண்டார்கள். 1918 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மீ முதன் முதலாகச் சைவப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தோன்றினுர்கள். அவர்களுட் சிலர் இப்போதும் சீவந்தராய் இருக்கிருர்கள். தொடர்ந்து 19, 20, 21, 22 ஆம் ஆண்டுகளில் அக்கலாசாலையிலிருந்து பன்னூறுக்கு மேலாய பயிற்சி பெற்ற சைவாசிரியர்களை, திரு. அருணசலத்தின் விடாமுயற்சியால் சைவ உலகம் பெற்றுக் கொண்டது.

23, 24, 25, 26, 27 ஆம் ஆண்டுகளில் இருபாலையில் அரசினர் நடாத்தினர். 1928 முதல் 1960 முடியத் திருநெல்வேலியில், சைவர்களுக்கெனத் தனியே, சைவ வித்தியா விருத்திச் சங்க ஆதரவில் நியாயவாதி திரு. சு. இராசரத்தினமவர்கள் 32 யாண்டுகளாகச் சைவாசிரிய கலாசாலையை நடாத்திஞர்கள். 1960 ல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டது. கோடரிக் காம்பனைய சில சைவர்களால் அக்கலாசாலை மூடப்பட்டது. இது புறம்பாய ஒரு கதை. திரு. இராசரத்தினமவர்கள் அருணசலமவர்களின் வாரீசென்பது.

திரு. உபாத்தியாயர் கலாசாலையைத் தோற்றுவித்தார். அதிற் கற்றற்கு மாணவர்களைப் பிடிக்க வேண்டும். தேடிய மாணவர்களைப் பாதுகாக்க நிதி வேண்டும். அக்காலம் பயிற்சி பெற்ற ஆசிரியர் சம்பளம் ரூ. 15/- மாத்திரம். அதனுல் ஆசிரியப் பயிற்சி பெற எவரும் விரும்பவில்லை. அதனுல் அவர்களுக்குப் புஸ்தகங்கள்—உணவு—வசிப்பிட வசதி — ஏன் உடைகள் கூட இனமாக உதவப்படும் என ஆசை வார்த்தைகள் கூறியே மாணவரைப்

பிடித்தார்கள். மாணவர்களைச் சம்பாதிப்பதற்காகவும், நிதி சேர்ப்பதற்காகவும் ஊரெல்லாம் நடந்தே திரிந்தார். மட்டக்களப்பு — கொழும்பு முதலிய இடங்களுக்கும் நடந்து சென்றதாகச் சொல்கிறார்கள். வாகீசர் கைலைக் காட்சியைக் காண்டற்காய் நடந்தார் — தவழ்ந்தார் — உருண்டார். இறைவன் தடுத்துத் திருவையாற்றில் கைலைக் காட்சியைக் காட்டினார். நாவுக்கரசர் ஆன்மநேயம் நோக்கிக் கைலை காண நடந்தார். திரு. அருணாசலம் சைவம் வளர்க்கச் சைவாசிரியர்களை உண்டாக்க நடந்தார். அடியார்கள் துயர்களை நீக்கற்காய் — அப்பரும் — சம்பந்தரும் இறைவனைப் பாடிப் பாடிப் படிக்காசு பெற்றார்கள். நாவலரையா கூட உடையவனைப் பாடியே பணம் பெற்றார்கள். என் தந்தையர் தன் பெற்றோர் வழியில் வந்த நிலபுலங்களையும் தம் மனைவி வழியால் வந்த சீதன நிலபுலங்களையும் விற்றும் ஈடு வைத்துமே பணம் பெற்றுச் சைவாசிரியர்களை உண்டாக்கிவிட்டார். 1920 ஆம் ஆண்டிற்கு முன் விற்ற நிலங்களின் பெறுமதியை அடியேன் அறியமாட்டேன். ஈடுகள் வைக்கப்பட்டு 1920 ஆம் ஆண்டின் பின் விற்றுக் கடனுதவிய தொகை ரூ. 25 000/-க்கு மேல். அதனாலேற்பட்ட மிடி 50 யாண்டுகள் கடந்த இன்றும் நீங்கியபாடியில்லை.

சைவாசிரியர்களை உண்டாக்கிவிடலே அவரின் கனவு. அது அவர் காலத்தில் நனவாய்விட்டது. தமிழிலக்கியப் பரப்பில் திருக்குறள் தனக்கொப்பது மிக்கதுமில்லாதது. அதில்,

> *"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்*
> *தாழா துளற்று பவர்"*

என வரும் பாவிற்குரியவராய் நின்றார் என் தந்தையார்.

விருந்தோம்பும் பண்பு அவரிடங் காணப்பட்ட சிறந்ததோர் குணம். ஆசிரிய மாணவர்க்கு நல்லுணவு உதவ வேண்டுமெனச் சதா சிந்திப்பார். 1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மரணத் தறுவாயிற் படுத்திருக்கும்போது

கூட, மாணவர் சோறு கறி செப்பமில்லையே எனப் பிதற்றியதை என் காதாரக் கேட்டேன். அவர் ஊர் — பேர் — புகழ் — உற்றார் — உறவினர் — மனைவி — மக்கள் யாவரையும் நினைத்தாரில்லை. சைவாசிரியர்கள் நினைவே அவர் கருவூலம். மணிவாசகப்பெருமான், மன்னன் மந்திரி அரசராணைப்படி குதிரை வாங்க ஏகினர். அச்செயல் மறந்தார். இறைவனுக்காட்பட்டார். ஊர் — பேர் — வேண்டினரில்லை. ஊதியம் கருதினரில்லை. கூத்தப்பிரான் கழலை விரும்பியழுதார். இதனைச் சிவானந்த முதிர்வு வரப்பெற்றுத் திருவாரூரிற் பின்வருமாறு பாடினர்கள்:

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

திரு. அருணாசலம் ஆசிரிய பயிற்சி பெறச் சென்றார். பணியின் பெருமை உணர்ந்தார். கற்பித்தற் றொழிலை (ஊதியம் பெறும்) மறந்தார். சைவத் தொண்டிற்கு ஆட்பட்டார். மணிவாசகர் கற்றாரை வேண்டிலர். அருணாசலம் கற்றோரையும் அறவோரையும் வேண்டினர். கன்று பசுவை நினைந்து கசிவது போலத் திரு. அருணாசலம் சைவாசிரியர்களை நினைந்து கசிந்தார்கள். கசிந்துருகிப் பெற்றார்கள். வாகீசர் சமணர்களையும், மணிவாசகர் புத்தர்களையும் சிவனருள் பெற்று வெற்றி பெற்றார்கள். திரு. அருணாசலம் சைவப் பெருமக்கள் உதவி மூலம் தம் விடா முயற்சியால் கிறீஸ்தவம் பரவலைச் சைவாசிரியர்களைத் தோற்றுவித்ததன் மூலம் தடுத்து நிறுத்தினர்கள்.

என் தந்தையர் காரைச் சுப்பிரமணிய வித்தியாசாலை — வியாவிற் சைவ பரிபாலன பாடசாலை — வண்ணை நாவலர் பாடசாலை என்பவைகளிற் கற்பித்தற் றொண்டு செய்தார்கள். வேதனம் பெற்றாரில்லை. வறிய மாணவர்கட்குப் புத்தகம் முதலியன வழங்கினர்கள். முதன்மை

7

பெறும் மாணவர்க்கு அறவோர் மூலம் பரிசளிப்பித்து உற்சாகப்படுத்தினர்கள். தம்முடன் கற்பித்த சக ஆசிரியர்கட்கு பிறர்க்கு உதவும் நீர்மைய வள்ளல்களை அடைந்து அவர்களிடம் பணம் பெற்று உதவினர்கள். 1912 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர் அரசினர் ஆசிரியர் கல்லூரியில் கற்றுத் தேறிய காரைநகர் விளானையைச் சேர்ந்த திரு. கா. கந்தையா உபாத்தியாயர் இச்செயலை என்னிடம் தெரிவித்தார்கள். அவர்கள் இப்போதும் திடசரீரம் உடையராய்ச் செல்வாக்கோடு வாழ்ந்து வருகிருர்கள். 1914 ஆம், 1915 ஆம் ஆண்டுகளில் நாவலர் பாடசாலையிற் தலைமையாசிரியர்ப் பணி பூண்டார்கள். 1913 ஆம் ஆண்டு வைகாசி மாதம் அவர் அன்பு மனைவியர் (என் அன்னையர்) காலன்வாய்ப்பட்டார். அதனுலும் நிலங்கள் ஈடு வைக்கப்பட்டுக் கடனில் மூழ்கி இருந்ததாலும் சோர்வுடைய கவலையோடு காணப்பட்டார்கள். இதனைக் குறிப்பால் உணர்ந்தார்கள் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்கள். அவர்கள் பாடசாலையின் மனேஜர் ஆவர். அதனல் அவர் கைச் செலவிற்காகச் சிறிதே பணம் (வேதனம்) உதவி வந்தார்கள். அதனையும் விருப்பின்றியே பெற்றனர்.

இக்காலத்திற் சிறப்புப் பாடப் பட்டதாரி ஆசிரியர்கள் கல்லூரிகளிற் கற்பிக்கின்றனர். பாடசாலைப் பாடநேரங்களில் யாது செய்கிருர்களோ? யான் அறியேன். காலை, மாலை வேளைகளில் வகுப்பு மாணவர் ஆசிரியர் வீடு சென்று பாடங் கேட்கின்றனர். 1 மணி நேரப் படிப்பிற்கு ஆசிரியர் 10 ரூபாவுக்கு மேல் ரூபா 25 வரை ஊதியம் பெறுகிருர்கள். பாடசாலையில் அரசினர் வேதனம் பெறுகிருர். இவ்வாறு கற்பித்தலறம் பேணப்படுகிறது. சென்ற நூற்ருண்டில் சைவம் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஐயாவும் பார்சிவல் பாதிரியார் கீழ் மத்திய கல்லூரியில் வேதனம் பெற்றுக் கற்பித்தார்கள். இக்கால ஆசிரியர்கள் கடமை செய்கிருர்கள், வேதனத்திற்காய். நம் அருணுசலம் பிரதி உபகாரம் பெருது சைவப் பணி புரிந்தார்கள். கடமை—தொண்டு—பணி என்ற சொற்களின் பொருளை நம்மவர்

சிறிதே சிந்தித்தல் வேண்டும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நாவுக்கரசர் கூற்றுக்கு இலக்கியமாய் வாழ்ந்து காட்டினார்கள். 3 ஆண்டுகள் முன்பாகச் சைவ பரிபாலன சபையார் விருந்தினராகச் சைவ சித்தாந்த வித்தகர் ஒருவர் வந்திருந்தார்கள். அவரைக் காரை நகர்ச் சைவ மகாசபைக்கு ஒரு பிரசங்கஞ் செய்ய வருமாறு கேட்டேன். பிரயாணச் செலவும், ரூபா 150 ம் உதவுமாறு கேட்டார்கள். சைவம் வளர்த்தலும் ஒரு வியாபாரமாய் விட்டது என நினைந்து அலமந்தேன். மிகமிகச் சேய்மையாக உள்ள அமெரிக்க நாட்டுப் பெரியோர்கள் இங்கு வந்து பிரதிபலன் பெருது தம் சமயத்தைப் பரப்புகிருர்கள். நாம் நாட்டு நம்மவர்களோ?

நூலாசிரியர்கள் தாமெடுத்துக்கொண்ட பொருளை உயர்வாகக் காட்டல் மரபு. அவ்வகையில் யான் எழுதுதல் சிலபோது ஏனைப் பெரியார்களைக் குறைவுபடுத்தி விட்டதாக நினைத்தல் கூடாது. உண்மையைச் சொன்னேனன்றிப் பிறிதில்லை. பொதுவாழ்வு செய்வோர் இல்வாழ்வில் ஈடுபடல் நலமல்ல என்பது சிலர் கருத்து. புத்தர்பிரான் அகிம்சை மேற்கொண்டார். அதைப் பரப்புதற்காக இல்வாழ்வைத் துறந்தார். நாவலரையா சமயம் பரப்புதற்காய் இல்வாழ்க்கையிற் புகவில்லை என்கிருர். உயர்ந்தோர் ஒருவர் இல்வாழ்விற் சென்று மக்களைப் பெறல் வேண்டும் என்கிருர்கள். இல்லையேல் அவர்கள் 'புத்' என்னும் நரகிற் செல்வார்கள் எனப்படுகிறது. எனவே, திரு. அருணசலம் அதிற் புகமாட்டார் எனல் சொல்லாதே யமையுமென்பது.

நாவலர் அவர்கள் பிரசங்கங்கள் செய்தும், கண்டனங்கள் தீட்டியும், அச்சகம் நிறுவி நூல்கள் வெளியிட்டும், வசன நூல்கள் எழுதியும், பாடசாலைகள் அமைத்தும் கிறிஸ்தவம் மேலோங்காமல் தடுத்தார்கள். பாடசாலைகள் அமைத்தபோதும் அப்பாடசாலைகளுக்குப் பயிற்சி

பெற்ற சைவாசிரியர்களைப் பெறல் அவரால் இயலா தாயிற்று. கிறீஸ்தவப் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் நாவலர் பாடசாலையிற் தலைமைப் பணிபூண்டார் என்பதை மிக வெட்கத்தோடும் வருத்தத்தோடும் குறிப்பிட விரும்பு கிறேன். திரு. அருணாசலம் அவர்கள் இரண்டோர் ஆண்டு அப்பாடசாலையிற் தலைமைப் பணி பூண்டார் என்பதையும் தமது கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலையிற் கற்றுத் தேறியவரும் நாவலர் காவிய பாடசாலையிற் கற்றுப் பண் டிதத் தேர்விற் சித்தி பெற்றவரும் சைவாசார ஒழுக்கமுடைய வரும் நீர்வேலியைப் பிறப்பிடமாகவுடையவருமாகிய திரு. வே. மயில்வாகனம் அவர்களை அங்கு பணியாற்றச் செய்தார்கள்.

அக்காலம் பாடசாலைகள் பெரும்பாலும் 5 ஆம் வகுப்பு வரையே இருந்தன. கிறீஸ்தவப் பள்ளிகள் சில 8 ஆம் வகுப்பு வரை வைத்திருந்தன. நாவலர் பாடசாலைகள் இரண்டிலும் 8 ஆம் வகுப்புகள் வரை இருந்தன. ஆசிரிய கலாசாலைப் புகுமுக வகுப்பில்லை. அதனால் ஆசிரிய மாண வரைப் பெறல் சிரமமாயது. அதனிமித்தம் கோப்பாய் நவாலர் பாடசாலையில் பிரவேச வகுப்பு ஆரம்பித்து நாவலர் பாடசாலையைச் சிறப்புறச் செய்த பெருமையும் திரு. அருணாசலத்துக்கே உரியது. இச்செயல் யாழ்ப்பா ணத்தில் எத்தனை சைவர்களுக்குத் தெரியும்?

மற்றொன்று விரித்தலாய் முடியுமோ? என அஞ்சு கிறேன். சத்தியின்றேல் சிவம் இல்லை என்பர் சமய நூலோர். அங்ஙனமே என் அன்னையரின்றிப் பணி செய் தல் இயலாது தந்தையர்க்கு. இளையான் குடிமாறநாய னார் பற்றி நம்மவர்கள் அறிந்திருத்தல்கூடும். நடுநிசி, மழையிருள், அடியார் ஒருவர் கதவைத் தட்டுகிறார், மாற னார் கதவைத் திறந்தார், நனைந்த உடையோடும் குளி ரோடும் அடியார் காணப்பட்டார். உள்ளே அழைத்தார். ஈரந் துடைத்தார். உடை மாற்றினார். உணவு ஊட்ட வேண்டுமே. வீட்டில் பதார்த்தம் எதுவும் இல்லையே. நாயனார் மனைவியைப் பார்த்தார். நடுச்சாமமாகலின்,

அடுத்த இல்லங்களில் எதுவும் பெற இயலாது. அன்று காலையில் வயலில் நெல் விதைக்கப்பட்டது. அந்த நெல் முளைகளை வாரியெடுத்து வருமாறு பணித்தார் நாயனார் மனைவியார். நாயனார் வழிதடவிச் சென்றார். வயலை அடைந்தார். நெல் முளைகள் மழை வெள்ளத்தில் மிதந்தன. கூடையில் வாரி எடுத்தார். மிக விரைவாய் வீடடைந்தார். விறகில்லை, கூரைத் தடிகள் விறகாயின. நெல் முளைகள் வறுக்கப்பட்டன. உரலிற் குற்றி அரிசியாக்கப்பட்டது. பானையில் இட்டுச் சோறாக்கப்பட்டது. வெஞ்சனம் எதுவும் இல்லை, வீட்டின் பின்புறக் கீரைகள் நற்பதார்த்தங்களாயின. நாயனார் அடியவரை எழுப்பினார். மீதியைப் பெரிய புராணத்திற் காண்க. இவ்வாறுய மனைவியர் எத்தனை பேர் நம் நாட்டில் உளர்?

நமது கதாநாயகர் மனைவியர், பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை. நாயகர் குறிப்பறிந்து நடக்கும் இயல்பினர். அவர் அறச் செயல்களுக்கு உறுதுணையாய் வாழ்ந்தனர். வருவிருந்து பார்த்திருக்குமியல்பினர். அந்நாள் இயல்புப்படி வீட்டில் உணவுப் பொருட்களுக்குக் குறைவில்லை. கறவைகள் எப்போதும் பால் கொடுத்துக்கொண்டே இருக்கும். அதனால் வீட்டில் பால், மோர்க்குக் குறைவில்லை. உரியகாலத்தே கருப்பை நீர் பொங்கி வழியும். அதனல் பாணிப் பனட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். வயலில் விளையும் நெல் — பயறு — எள் — குரக்கன் என்பன கூடைகளில் நிரம்பக் காணப்படும். சுமார் 5 மாதங்களுக்கு வயலில் கத்தரிப் படப்பில் கத்தரிக்காய் காய்த்துக் கொண்டே இருக்கும். வீட்டு வளவில் முருங்கைகள் காய் உதவும். மாமரங்கள் பழங்களை உதவும். இவைகளால் அவ்வளவாக உணவுக் கஷ்டம் இல்லை. காசு காய்க்கும் மரமில்லை. அது வர வழியுமில்லை. அதனால் காணிகளை ஈடு வைத்துச் செலவிடும் வகையே கொள்ளப்பட்டது. அதற்கு மனைவியர் மறுப்பு இல்லை. ஈடுகள் மீட்கும் வகை பற்றிய யோசனை இல்லை. பிற்காலத்தில் தம் மக்கள் நிலை என்னவாகும் என்ற சிந்தனை சிறிதும் இல்லை. இதனால் நிலங்கள் யாவும் ஈடாயின. மனைவியர் இது

பற்றிப் பேசுவதே கிடையாது. உள்ளூர மனம் வருந்தி யிருக்கலாம். அதுவே கெதியில் மறைவுக்குக் காரணமா யிற்றென இரண்டொரு முதியோர் சொல்லக் கேள்விப் பட்டேன்.

இறுதியாகச் சில கருத்துக்கள். 35 யாண்டுகளாய முயற்சி சுமார் 1 லட்சம் ரூபாவுக்கு மேலாய ஆதனங்களை இழந்து சைவாசிரியர்களை உற்பத்தி செய்து விட்டவர்க் குச் சைவ உலகம் செய்த கைமாறுதான் யாதோ? சிலை எடுத்தலா? குருவிகள் எச்சமிடும் ஞாபகத்தை யான் விரும்பவில்லை

செய்பவர் உளரேற் செய்க. காலந்தான் விடை கூற வேண்டும். நிதி படைத்த அறவோர் முன்வர வேண்டும். ஒரு தொகை நிதி மூலதனமாகச் சேர்த்தல் வேண்டும். அதனுல் வரும் வட்டிப் பணங் கொண்டு சைவம் வளர்க்கும் பணியில் உழைக்கக்கூடிய மாணவர்க்கு உதவி, கற்கச் செய்தல் நலமென ஆலோசனை கூறுகிறேன். செயற்படுத்துவார் யார்?

உபாத்தியாயர் உதவியும் ஆலோசனைகளும் பெற் ருேர் பலராவர். அவர்களுட் சிலர் நன்றி மறவாத உள் ளத்தினராயிருக்கிருர்கள். அச்சிலருள்ளும் இருவர் பெயர் களை விதந்து கூறும் கடப்பாடு பெரிதுமுடையேன். அவ் வாறு கூருவிட்டால் நன்றி மறந்த பாவஞ் சூழலாம். இக் கட்டுரையும் பூர்த்தியாகாது. இளமையிலேயே பெற்ருரை இழந்தேன். வீடு வாசல்களற்றேன். போகும் வழியறி யேன். இவ்வாறிடர்ப்படும்போது, என் தந்தையர் நல் மாணவர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர ஐயர் அவர்கள் ஆறுத லுதவிஞர்கள். இருக்கை — உணவு — உடை முதலியன உதவியதோடு கல்வியுமளித்தார்கள். தந்தையர் மறையும் போது 5 ஆம் வகுப்பிற் படித்தேன். 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வகுப்புகளிற் கற்றுத் தேற வசதி செய்தார்கள். பின் ஆசிரிய கலாசாலையிற் சேர (கோப்பாயில்) 1928 ல் பிரவேச பரீட்சை எடுத்தபோது உயரம் போதாது என

விடப்பட்டேன். அப்போது சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பமாய் மிக உற்சாகமாய்த் தொழிற்பட்டுக் கொண்டிருந்தது. அதன் செயலாளர் கௌரவ. சு. இராசரத்தினமவர்களை அடைந்து என் கஷ்ட நிலையை உணர்த்தினேன். ஆறுதல் கூறினர்கள். உமக்காகவேனும் ஆசிரிய கலாசாலை தொடங்குகிறேன், பயப்படாதேயும் என்ருர்கள். சொல்லி இரு வாரங்கள்கூடச் செல்லவில்லை, 1928 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் விஜயதசமி நாளில் திருநெல்வேலியிற் சைவாசிரிய கலாசாலை ஆரம்பமாயது. அதிற் சேர்ந்து இரு ஆண்டுப் பயிற்சி பெற்று ஆசிரியனுய் வெளிவந்தேன். என் நல்வாழ்விற்குதவிய அவ்விரு பெரியார்க்கும் என் மனமார்ந்த வணக்கங் கூறிக் கட்டுரையை முடிக்கிறேன்.

அ. சிவபாதம்

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

## அறிவிப்பு

இந் நூற் பிரதிகள் விற்பனையால் வரும் பணம், புத்தக அச்சகச் செலவு போக, மீதி உளதேல் அது காரைநகர்ச் சைவ மகாசபையின் மின்சார வெளிச்சம் இடற்காய் செலவிடப்படும். "பாலே மருந்து மாறற் போல" சபை அபிமானிகள் அதிக தொகை உதவி நூலேயும் — சபையையும் உற்சாகப்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

அ. சிவபாதம்
செயலர்.